
கோகுலம்

GOKULAM

ஜூலை '89 விலை ரூ. 3/-




சுவைக்கச் சுவைக்க தனியின்பம்
அதுவே கோகனட் குக்கீஸ் அளித்திடும் பேரின்பம்
நியூட்ரின்
குக்கீஸ்
பாலும் தேங்காயும் திரண்டு
அளிக்கும் அருஞ்சுவை
THE FINEST, WIDEST RANGE
nutrine
India's largest selling sweets
COOKIES



கோகுலம்

1989 ஜூலை மாத இதழ்
மலர் 7 — இதழ் 6

அன்புத் தம்பி, தங்கைகளே!

உங்களுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்வதென்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறேன்.

இந்தச் சின்ன அண்ணன் தேசபந்துவுக்கு உங்கள் அன்பும் ஆதரவும் இத்தனை இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னவோ எனக்கு யானை பலம் வந்துவிட்ட மாதிரி இருக்கிறது. விரும்பி வரவேற்கும் வகையில் கோகுலம் மணம் வீசும். உங்கள் உள்ளங்கள் என் உள்ளத்தில் வந்து உட்கார்ந்து கொள்ளட்டும்!

ஒருவேளை நீங்கள் தேர்விலே வெற்றி பெற்று, மேல் வகுப்புக்குப் போகும் தெம்பிலேதான் இத்தனை பாராட்டி எழுதியிருக்கிறீர்களோ என்னவோ! வெற்றி பெற்றவர்களுக்கெல்லாம் என் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்!

தோல்வியுற்றவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தோல்விதான் வெற்றியின் முதல் படி. ஆதாரம்?

திருப்பதியிலிருந்து சி. விஜயசேகர் என்ற தம்பி எங்கிருந்தோ எடுத்தெழுதிய துணுக்கு ஒன்றை இங்கு தருகிறேன்.

'ஐன்ஸ்டீன் தன்னுடைய பதினாறாவது வயதில் பாலிடெக்னிக்கில் புகுவதற்கான தேர்வில் தோல்வியடைந்தார். கணக்கு ராமானுஜம் கல்லூரித் தேர்வுகளில் தோல்வியடைந்தார். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் எம். ஏ. தேர்விலும், அண்ணா பள்ளியிறுதித் தேர்விலும், ராஜாஜி பி. ஏ. தமிழ்ப் பாடத்தில் முதலில் தோல்வி கண்டனர். டால்ஸ்டாய் பள்ளித் தேர்வுகளில் தோல்வி கண்டார். இவர்கள் பிற்காலத்தில் ஒளி வீசித் திகழவில்லையா என்ன?'

அதனால் தோல்வியால் துவண்டு போகாதீர்கள். உங்களுக்குள் எந்த அறிஞர் ஒளிந்து கொண்டிருக்கிறாரோ, யார் கண்டது?

எதிர்காலம் உங்கள் கையில். நிமிர்ந்து நில்லுங்கள். தொடர்ந்து செல்லுங்கள். வருகிற தேர்வில் வெல்லுங்கள்.

உங்கள் அண்ணன்,

தேசபந்து

கௌரவ ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

இந்தப் பக்கத்தில் சில தம்பி தங்கைகளின் படங்கள் இருக்கின்றன. இவர்களுடைய குழந்தைப் பருவப் படங்கள் எதிர்ப்பக்கத்தில் — வரிசை மாற்றி — வைக்கப்பட்டிருக்கின்றன. யார் எவர் என்று ஊகித்து, விடை எழுதி வைத்த பிறகு, 87 — ஆம் பக்கத்தைப் புரட்டிச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அனைத்தும் சரி என்றால் நீங்கள் ஒருவரை ஒருமுறை பார்த்தால் அவரை மறக்க மாட்டீர்கள்!

இன்றைய புகைப்படங்களை எடுத்தவர்: ராஜா பொன்சிங்.



















நான் யார் தெரியுதா?























எட்டுக்கு எட்டு
கதை: தேசபந்து
2
முன்கதை:
ஒகேனக்கல் ஆடிப் பெருக்கு விழா கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது. சசிவர்ண பூபதி தன் மனைவி பத்மாவதி, மகன் காமேஷ், மகள் ரஜனியுடன் வந்திருந்தார். இரவு அப்பா தன் ஜமீன் பரம்பரை பற்றிக் கதை சொல்ல, அதைக் கேட்டுக் கொண்டே அண்ணனும் தங்கையும் தூங்கினார். விடிந்து பார்த்தால், ஜன்னலோரம் படுத்திருந்த குழந்தைகள் இருவரையும் காணோம்! பெற்றோர் தவித்தனர். அப்புறம் —
குழந்தை ராத்திரியே பயந்து என்னிடம் படுத்துக் கொண்டாள்... பாவி.. நான்...
மனசும் தளர விடாதே பத்மா.. இங்கேதான் இருப்பாங்க..
அறை முழுவதும் தேடிப்பார்த்தும் பலனில்லை. காவல்காரனையும் அவன் மனைவியையும் விசாரித்த போது —
இம்மாம் புள்ளையிலேர்ந்து இங்கேதான் இருக்கிறேன். இப்படி நடந்ததில்லீங்களே!
பயப்படாதீங்கம்மா. போலீஸ்ல சொன்னா, அவங்க பிடிச்சிடுவாங்க.
போலீஸ் வந்தது —



மோப்பம் பிடித்து ஓடும் போலீஸ் நாயைப் பின் தொடர்ந்து மற்றவர்கள் செல்ல-
பொன்னித் தாயே, என் குழந்தைகளை மீட்டுத் தந்துவிடு..
ஒரு புதருக்கடியில் நாய் நிதானித்து-
ஐயோ, அது எங்க ரஜனி கவுன்.
அருகில் கிடந்த துணி மூட்டையில் ஒரு தங்கச் சங்கிலி-
பிள்ளைகளைக் கடத்தியவனுக்கு நகையில் நாட்டமில்லை... உங்களுக்கு விரோதிகள் உண்டா?
அப்படி யாரும் இல்லை.
ஐயோ என் பிள்ளைகள் என்ன ஆனார்கள்? அவர்களை உயிரோடு பார்க்க முடியுமா?..
பயப்படாதீங்கம்மா. முயற்சி பண்ணிட்டுத் தானே இருக்கோம்.


ஆற்றை அடைந்த நாய் நகரவில்லை-
இந்த இடத்துக்கப்புறம் தண்ணீரில் இறங்கி இருக்கணும். அதான் நாயாலெ ஃபாலோ பண்ண முடியலே.


இன்ஸ்பெக்டர், ப்ளீஸ்...எப்படி யாவது எங்களுக்கு ஹெல்ப் பண்ணுங்க.
அது எங்க ட்யூட்டி மிஸ்டர் சசிவர்ணம். எங்களால் ஆனதைச் செய்யறோம். இப்போதைக்கு இதுக்குமேலெ எதுவும் செய்வதற்கில்லை.


பத்மாவுக்கு மயக்கமே வந்துவிட்டது.
...ரமேஷ்.. ..ரஜனி... ..
கடவுளே... என்...கு.. குழந்தைங்க...


காமேஷ், ரஜனியைப் போலீஸ் தேடிக்கொண்டிருக் கிறது. இதற்கிடையே வீடு திரும்பிய பத்மா தன் மூன்றாவது பிள்ளை ராஜூவுடன் –
என் சின்னராஜூ நீ மட்டும் இல்லாம இருந்தி ருந்தா, நான் எப்பவோ உயிரை விட்டிருப் பேன்டா..
அண்ணாவும் அக்காவும் ஊரிலேருந்து வந்துடுவாங்க. அழாதேம்மா.
சுவர்ணத்தின் தம்பி பீதாம்பரத்தின் மகன் முரளி வந்திருந்தான். முரளிக்குக் காமேஷிடம் உயிர். இருவருக்கும் ஒரே வயது –
பெரியம்மா, கவலைப் படாதீங்க. நான் நேரே ஒகேனக்கல்லுக் குப் போய்...
வேண்டாம் முரளி, நீ போகாதேப்பா.
இரண்டு நாள் கழித்து –
என்ன பீதாம்பரம்?
முரளி இங்கே வந்தானா? இரண்டு நாளாக் காணலை.
ஐயோ... வேணாம்னு சொன்னேனே.. ஒகேனக்கல் போய் அவனை காமேஷையும், ரஜனி யையும் கண்டுபிடிக்கப் போவதாக என்னிடம் சொன்னான்.
தொடரும்.

படிப்பினை

கடந்த இரண்டு நாட்களாக அது புதிராகி, குருசரணனின் மூளையைக் கசக்கிக் கொண்டிருந்தது.

முதல் நாளைக்கு முந்திய நாள் அவன் தன் குருநாதரான ஞானவள்ளி நாதருடன் உலாவப் போனான். போய்க் கொண்டிருந்தபோது, ஈரம் கசிந்த பாதையில் மண்புழு ஒன்று ஊர்வது தெரிந்தது.

''படைப்பின் இரண்டாம் படியில் இருக்கும் ஜீவன் இது.'' என்றார் குருநாதர்.

அவன் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. இன்னும் சிறிது தூரம் சென்றனர். ஒரு பெரிய மாமரம்; அதன் அடியில் சென்று குருநாதர் நிற்கச் சீடனும் நின்றான்.

அந்த மரத்தைச் சற்றுநேரம்பார்த்த ஞானவள்ளிநாதர், ''இது படைப்பின் முதல் படியில் இருக்கும் உயிர்,'' என்றார்.

'குருசரணனின் மூளைக்குள் ஒரு சின்னக் கேள்விக்குறி. 'மண்புழு இரண்டாம்படி; மாமரம் முதல்படி... அப்புறம்?' என்று அவன் தனக்குள்ளாகவே கேட்டுக் கொண்டான்.

சற்று முன் முளைத்த கேள்விக்குறி சற்றே பெரிதாகியது.

அதே சமயம் ஒரு மான்குட்டி ஓடி வந்து ஞானவள்ளிநாதரின் அருகே நின்றது. அவர், அந்த மரத்தின் கிளையை வளைத்து அந்தக் குட்டி மானுக்குத் தழை எட்டும்படியாகப் பிடித்தார். அந்தக் குட்டி ஆவலோடு இலைகளைத் தின்றது. பின் தன் தாயைப் பார்ப்பதுபோல் உள்ளார்ந்த வாஞ்சையோடு அவரைப் பார்த்தது. அதன் பின் ஒரு துள்ளலுடன் ஓடியது.

''இது மூன்றாம் படியில் இருக்கும் உயிர்,'' என்றார் ஞானவள்ளிநாதர்.

குருசரணனுக்குள் பளீரென ஒரு மின்வெட்டு. சற்றைக்கு முன் சற்றே பெரிதாக ஆன கேள்விக்குறி, இப்போது பிரம்மாண்டமானதாகி அவனை முழுக்க ஆக்கிரமித்தது!

''இரண்டாம் படியில் புழு, முதல் படியில் மரம், மூன்றாம் படியில் மான் குட்டி...''

'என்ன படிகள் இவை? இன்னும் எத்தனை படிகள் இருக்கின்றன? குருநாதரிடம் கேட்டுத் தெளிவு பெற நினைத்தான்.

அப்போது மலை முகட்டில் மேகம் கவிந்தது. காற்று சிலுசிலுத்தது. சற்று நேரத்துக்குள் பெரும் மழை வரும் போல் ஓர் அறிகுறி.

சீடனை மழையினின்றும் காப்பதற்காகவே குருநாதர் உலாவைப் பாதியோடு முடித்துக் கொண்டு திரும்பினார்.

அவர்கள் ஆசிரமத்துள் அடியெடுத்துவைத்தசிறிதுநேரத்தில்வானமே பொத்துக்கொண்டதைப்போலமழை கொட்டியது.

மேகத்திரளுக்குள் மறைந்த மலை முகட்டைப் போல் அப்போதைக்குக் குருசரணனின் அந்தப் படிகளைப் பற்றிய சந்தேகம் மழையால் மறைந்தது.

மழை நின்ற பின் வீட்டிற்கு வந்தான். வீட்டிற்கு வந்த அந்த இரண்டு நாட்களிலும் இதே கேள்வி......

'என்ன படிகள் அவை?'

அன்று மாலை ஆசிரமத்துக்குப் போனான். அவன் போன நேரம்



நல்ல நேரம்.

குருநாதர் உலாவப் போக ஆயத்த மாகிக் கொண்டிருந்தார். சேர்ந்து கொண்டான்.

வேறு எதைப் பற்றியோ பேசிக் கொண்டே நடந்தவர்கள் அந்த மா மரத்தின் அடியில் வந்ததும் நின்றனர்.

நின்றவுடனே தன் மனத்தை இரண்டு நாட்களாக அரித்த அந்த வினாவைக் கேட்டான்: "மரம், முதல் படியில் இருக்கும் ஜீவன். புழு இரண்டாம் படியில். மான் குட்டி மூன்றாம் படியில். மனிதன் எத்தனையாவது படியில் இருப்பான்?"

"நான்காம் படியில்," என்றார் அவர் சிரித்துக் கொண்டே!

எனக்கு இந்தப் படிகளைப் பற்றி ஒன்றுமே புரியவில்லை," என்று அவன் சொல்ல, அவர் அவனைத் தீர்க்கமாகப் பார்த்துக் கொண்டே, "மனிதன் பிறந்த உடனே எப்படி இருக்கிறான்?" என்று கேட்டார்.

அவனுக்குப் புரியவில்லை, கேட்டான்: "எப்படி என்றால்?"

"தாவரங்களைப் போல இருந்த இடத்திலேயே இருக்கின்றானா? புழுவைப் போல ஊர்கிறானா? அல்லது......"

அவர் முடிக்கவில்லை, அவனுக்குள் இறுகி இருந்த இருள் பளீரெனக் கலைந்தது. இதுவரை அவனுக்குப் புரியாதிருந்த பல உண்மைகள் பளிச்செனப் புலனாயின.

"இருந்த இடத்திலேயே இருப்பவை தாவரங்கள், இது படைப்பின் முதல் படிநிலை. வயிற்றால் ஊரும் புழுக்கள் படைப்பின் இரண்டாம் படியில் இருப்பவை. விலங்குகள் மூன்றாம் நிலை. மனித வர்க்கம் நான்காம் நிலை."

அவனுள் எங்கும்



ரா.பொன்ராசன்

மகிழ்ச்சிப் பிரவாகம். படைப்பின் படிநிலைகளைப் புரிந்து கொண்டு விட்ட பரவசம்!

அப்படியே முழந்தாளிட்டுக் குருநாதர் முன் பணிந்தான். அவர் கைகளைப் பற்றிக் கொண்டான். "ஐயா, இருந்த இடத்திலேயே இருக்கும் தாவரங்கள் ஒரு நாளும் அடுத்த இடத்திற்குத் தாமாக நகர்ந்ததில்லை. ஊரும் புழுக்கள் ஒரு நாளும் நடந்ததில்லை. நாலு கால் விலங்குகள் எவ்வளவு வளர்ந்த போதும் இரண்டு கால்களால் நடந்ததில்லை. ஆனால்..." அவன் தயங்கினான். பின், "மானுடர் மட்டும் பிறந்த சில நாட்கள் தாவரங்களைப் போல இருந்த இடத்திலேயே இருக்கிறார்கள். பின் புழுக்களைப் போல ஊர்கிறார்கள். அதன்பின் சில காலம் விலங்குகளைப் போல நாலு காலில் தவழ்கிறார்கள். அதற்குப்பின் இரண்டு கால்களால் நடக்கிறார்கள். அந்த அந்தப் படிநிலையில் இருப்பவை, அந்த அந்தப் படிநிலையிலேயே இருக்க, மானிடருக்கு மட்டும் பிறந்த சில மாதங்களுக்குள் இந்த நான்கு படிநிலை அனுபவங்களையும் இறைவன் வழங்கியிருப்பது ஏன் ஐயா?" என்று தழுதழுத்தான்.

ஞானவள்ளிநாதர் தம் சீடனைத் தாயன்போடு தூக்கி நிறுத்தினார். அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்தார்.

"இது வாழும் முறைமையடி பாப்பா என்று மகாகவி பாரதி பாடியிருக்கிறாரே, அதன் முதல் அடிகளைச் சொல்லு." அவர் கட்டளையிட்டார்.

"உயிர்களிடத்தில் அன்பு வேணும்
— தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்
— இது
வாழும் முறைமையடி பாப்பா—

அவன் பாடினான்.

அவர் ரசித்துக் கேட்டார். பிறகு,—

"உன்னைப் போல்தான்
நான் இருந்தேன்;
உலகில் பிறந்த
சில நாட்கள்—" என்று

தாவரங்களைப் பார்க்கும் போதும், மற்ற உயிரினங்களைப் பார்க்கும் போதும் மனமார உணர்ந்தானானால்—எல்லா உயிர்களிடத்தும் மனிதன் அன்பு செலுத்த வேண்டும். அதற்காகவே அவனை எல்லா உயிரினம் போலவும் சிலசில காலம் இருக்க வைத்திருக்கிறான் இறைவன்.

"அற்புதமான படிப்பினை இது." என்று பூரித்தான் குருசரணன்!

பழம் பாடகன்






ஆதிகால வித்து வான்,
அநியா யமாய்க் கத்து வான்!
பாடும் போது சேட்டை செய்தால்,
பல்லுப் போக எத்து வான்!

கூரை இல்லா வீட்டை நோக்கிக்
குதூ கலமாய் ஓடு வான்!
குப்பைமேட்டைக்கண்டால்போதும்,
கொள்ளை இன்பம் கொள்ளு வான்!

தகர டப்பா தாளம் கேட்டால்,
தலை தெறிக்க ஓடு வான்!
பகரு பாப்பா அவன் பெயரை
பைந் தமிழில் கழுதை யாம்!

— மீ.ப. நாராயணன்.



நீங்களே செய்யும் எலெக்ட்ரானிக் கிட்!

ஒரே 'சிப்' மூலம் நூற்றுக்கும் மேற்பட்ட பரிசோதனைகள்!

"சிப்-சாப்" நீங்களே செய்யும் எஜுகேஷனல் கிட் நூற்றுக்கும் மேற்பட்ட பகட்டான பரிசோதனைகள் கொண்டது. வித்தையை, விளையாட்டாய் கற்பிக்கவென்றே திட்டமிடப்பட்டது!

உங்கள் குழந்தை நாளைய உலகில் வெற்றியடைய வழிசெய்யுங்கள்!

எலெக்ட்ரானிக் யுகத்தின் சவால்களை சமாளிக்கத் தகுதியான சாதனம் "சிப்-சாப்"!

அம்சங்கள்: பாட்டரியால் இயங்கக் கூடியது • பாதுகாப்பானது • எளிதில் எடுத்துச் செல்லக் கூடியது • ஸால்டரிங் இல்லை – கனெக்ஷனுக்கு "பேட்டென்டுடன்" கூடிய விசை • கையாள எளிது.

பரிசோதனைகள்: • மியூஸிகல் ஆர்கன் • ஷூட்டிங் விளையாட்டு • ஃபயர் அலாரம் • ஒயர்லெஸ் பீப்பர் • ஸிக்னல் டிரான்ஸ்மிட்டர் • லைட் ஆபரேட் அலாரம் இன்னும் பலப் பல.

ரூ. 300/- மட்டும் - வரிகள், அனுப்பும் செலவு தனி.

"எலக்ட்ரானிக்ஸ் எல்லோருக்கும்"

தேசிய விருது பெற்றது

எஜுடெக்

33, சர்ச் தெரு, பெங்களூர்-560 001.
இந்தியா. போன்- 578801.

எனக்குத் தேவை "சிப்-சாப்". கிட் ஒன்றுக்கு ரூ. 350/- வரியும், அனுப்பும் செலவும் சேர்த்து. தயவு செய்து ....கிட்/கிட்கள் அனுப்பவும். இத்துடன் 'க்ராஸ்' செய்யப்பட்ட டி.டி./போஸ்டல் ஆர்டர் (ஒரு கிட் ரூ. 50/- என்ற கணக்கில்) முன்பணமாக அனுப்புகிறேன். மீதித்தொகையை வி.பி.பி. வந்து சேர்ந்தவுடன் அனுப்புவதாக உறுதியளிக்கிறேன்.

பெயர் ....

விலாசம் ....

பள்ளி ☐ கல்லூரி ☐

Climb ads/Chip-Chap/890]

எது நல்லது?

பள்ளிகளில் போதனா மொழி தமிழா, ஆங்கிலமா — எது நல்லது என்று இங்கு வாதிடுபவர்கள் நால்வர்.

சுரேஷ், நளினி தமிழ் மீடியத்தில் படிப்பவர்கள் — வாதாடுகிறார்கள்.

நாகசுப்பிரமணியும், ராதிகாவும் இங்கிலீஷ் மீடியத்தில் படிப்பவர்கள் — பதில் சொல்கிறார்கள்.

சுவையான உரையாடலைப் படியுங்கள்:



பி. நளினி

நளினி: என்னைக் கேட்டால், தமிழ் மீடியம்தான் உசத்தின்னு அடிச்சுச் சொல்லுவேன்... ஏன்னா, தாய் மொழிதானே எல்லாத்தையும் விட உசந்தது!

தமிழ் மீடியமா?



கே. சுரேஷ்

ராதிகா: மாட்டிக்கிட்டியா? தாய் மொழி உசத்தின்னு தமிழ் மீடியம் படிக்கணும்னா.. என்னை மாதிரி தெலுங்கைத் தாய் மொழியாய்க் கொண்டவங்க என்ன செய்யறது? இங்கிலீஷ் மீடியம்தான் செலக்ட் பண்ணணும்.

சுரேஷ்: வெள்ளைக்காரன் வேண்டாம்... அவனோட ஆதிக்கம் வேண்டாம்னு விரட்டியடிக்க நம்ம தலைவர்கள்ளாம் எத்தனை பாடு பட்டாங்கன்னு வரலாறு புஸ்தகத்தில் படிச்சிட்டுத்தானே இருக்கோம்?

நாகசுப்ரமணி: அதுக்காக?

நளினி: வேண்டாதவன்னு விரட்டி அடிச்ச வெள்ளைக்காரனோட பாஷை மட்டும் வேணும்னா என்ன அர்த்தம்?

ராதிகா: நல்லது எதிரி கிட்டே இருந்தாலும் எடுத்துப்போன்னு அர்த்தம். அதனால தமிழுக்கு நாங்க எதிரி இல்லை!

சுரேஷ்: தமிழ் மீடியம்ல படிச்சா ஃபீஸ் கம்மி... செலவு பலவகைல கம்மி. இங்கிலீஷ் மீடியம்னா ஷூ, சாக்ஸ், டை... அப்பிடின்னு நிறைய வேண்டாத விஷயங்கள் உண்டு! பெற்றோருக்குச் செலவு வெக்கறீங்க!

நாக: அப்படிச் சொல்லாதே. ரெண்டு மீடியங்களும் சேர்ந்திருக்கிற ஸ்கூல்ஸ்ல எல்லார்க்கும் இதெல்லாம் பொதுதான். மேலும், ஷூ எல்லாம் போட்டா, நாகரிகமா அழகா இருக்கே! இதை ஒரு செலவுன்னா... எத்தனையோ வெட்டி விஷயங்களில் ஐஸ்கிரீம் சாக்லேட் அது இதுன்னு நாம செலவு வெக்கலையா என்ன! அதைவிடப் படிப்பு விஷயத்தில் செலவு வெச்சா தப்பே இல்லை.



டி.ஆர். ராதிகா

இங்கிலீஷ் மீடியமா?



கே. நாகசுப்ரமணி

நளினி: ராமாயணம், மகாபாரதம், ஐம்பெருங்காப்பியம் திருக்குறள் இதெல்லாம் தெரிஞ்சுக்கணும்னா தமிழ் மீடியம்தான் உதவும்.

நாக: உக்கும்... நீ எந்த உலகத்தில் இருக்கே? தமிழில் இருக்கிற எல்லா நல்ல விஷயங்களும் இங்கிலீஷ்ல டிரான்ஸ்லேட் ஆகி வந்தாச்சு. அதுக்கும் மேலே தமிழ்ல அழகான காவியங்கள் இருக்கற மாதிரி, இங்கிலீஷ்ல்யும் பெரிய பெரிய புக்ஸெல்லாம் இருக்கு. ஷேக்ஸ்பியர் நாடகமெல்லாம் இருக்கு... அதைத் தெரிஞ்சுக்க இங்கிலீஷ் மீடியம்தான் உதவும். புரிஞ்சுக்கோம்மா!

நளினி: அரசாங்க உத்தியோகம் கிடைச்சுப் போனா, எல்லாமே தமிழ்லதான் புழங்கணும். கோப்பு, அது இதுன்னு... அதுக்குத் தமிழில் நல்ல அறிவு வேணுமாக்கும்! இங்கிலீஷ் குப்பை கொட்ட முடியாது!

ராதிகா: எல்லாருக்கும் அரசாங்க உத்தியோகம் கிடைச்சுடுமாக்கும்? அப்படியும் தமிழ்நாடு அரசாங்கத்துல வேலை கிடைச்சா மட்டுமே நீ சொல்ற மாதிரி... அப்படி இல்லாம, லண்டன்லயோ பாரிஸ்லையோ வேலை கிடைக்கப் போனால், உன் 'கோப்பு' அங்கே குப்பை கொட்ட உதவாது!

சுரேஷ்: ஹிந்தி திணிப்பு கூடாதுன்னு போராட்டம் நடத்தறோம். தொலைக்காட்சில கூடத் தமிழ் நிகழ்ச்சிகள் அதிகம் வேணும்கறோம்! இங்கிலீஷை மட்டும் திணிச்சுக்கலாமா?

நாக: திணிக்கறது வேற... நாமா ஆசைப்பட்டு எடுத்துப் படிக்கறது வேற!

நளினி: குழந்தை கீழே விழுந்து அடிபட்டுக்கிட்டா அம்மான்னுதான் அழுது. அதுக்கு இயல்பாய் வர்ற ஒண்ணைக் கத்துக்கறது நல்லதா, வேற்று நாட்டவர் பாஷை கத்துக்கறது நல்லதா!

ராதிகா: இது வெட்டி ஆர்க்யூமென்ட்! அமெரிக்கக் குழந்தை கீழே விழுந்தால் மம்மீன்னு கத்துதா என்ன? அதுவும் 'ம்மா'ன்னுதான் அழும்.

சுரேஷ்: கரெக்ட். இருந்தாலும் அதுக்கு இயல்பாய் வர்றது இங்கிலீஷ்! அங்கே இங்கிலீஷ் மீடியம் நியாயம்! இங்கே சுலபமாய்ப் புரியறது தமிழ்... புரிஞ்ச மொழில அறிவை வளர்த்துக்கறது நல்லது. சோதனைச் சாலைல ஒரு பரிசோதனை கத்துக்கணும்னா, எங்களுக்கு நேரடியாச் சொன்னாலே புரியும். உங்களுக்கெல்லாம் முதலில் இங்கிலீஷ் புரியணும். அப்புறம் பரிசோதனை புரியணும்.

நாக: நாமெல்லாம் ஸ்கூல் முடிஞ்சு காலேஜ் சேரும் போது நீங்களும் இங்கிலீஷ் மீடியத்தில்தான் சேருவீங்க! அப்போ உங்களைவிட நாங்க ஈஸியாய்ப் புரிஞ்சுப்போம்.

நளினி: இல்லை. காலேஜ்லயும் தமிழ் மீடியம் இருக்கு.

ராதிகா: ஆனால் உதவாதே! இஞ்சினியர், டாக்டர், வக்கீல் இந்தமாதிரி நிறையப் பணம் பண்ற தொழிலுக்குப் படிக்கணும்னா இங்கிலீஷ்லதானே படிக்கணும்? இன்ஃபாக்ட், படிப்புங்கறதே பிற்காலத்துல ஜாபுக்குப் போய்ச் சம்பாதிக்கற நோக்கத்துல தானே?

சுரேஷ்: தமிழ் இலக்கியம் எடுத்து டிகிரி வாங்கி, மேலும் மேலும் பட்டம் வாங்கி, ஆராய்ச்சிசெய்து, பெருமைக்குரிய டீச்சர் உத்யோகத்துக்குப் போனாச் சம்பளம் கிடைக்குமே! நாங்க தமிழ் மீடியம்ாய் இருந்தாலும், இங்கிலீஷும் படிக்கிறோம்.

நாக: நாங்க கூட இங்கிலீஷ் மீடியமாய் இருந்தாலும் தமிழும் படிக்கறோம். தமிழைத் தாய் மொழியாய்க் கொண்டவங்க தமிழ் மீடியம் படிச்சா, அவங்களுக்குத் தெரிஞ்ச பாஷையையே மேலும் தெரிஞ்சுக்கறாங்க. புதுசா பாஷை தெரிஞ்சா பிற்காலத்துல லாபம்தான்! உலகத்துக்கே பொதுவான பாஷை இங்கிலீஷ்!

நளினி: நாம் விரும்பி வணங்கற



மகாகவி பாரதியாரே 'எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே'ன்னு சொல்லியிருக்காரு!

ராதிகா: நாங்களும் ஒண்ணும் தமிழ் ஒழிகன்னு சொல்லலைம்மா கண்ணு. நம் அறிவு விருத்தியாகணும்னா நிறைய நிறையப் புத்தகங்கள் படிக்கணும். நிறையப் புத்தகம்னா அது இங்கிலீஷ்லதான் பாஸிபிள்.

சுரேஷ்: தமிழில் இருக்கற நல்ல புக்ஸ் இங்கிலீஷ்ல வந்தாச்சுன்னு கொஞ்ச நேரமுன்னாடி நீயே வாதம் செய்த மாதிரி, இங்கிலீஷ்ல இருந்த எத்தனையோ விஷயங்கள் தமிழில் வந்தாச்சு.

நாக: ஆனா... டெக்னிகல் வார்த்தைகள் இங்கிலீஷ்ல படிச்சால்தான் உதவும்.

நளினி: இது மாதிரி சொல்லிச் சொல்லியே தமிழ்ல நல்ல கலைச் சொற்கள் வராம அடிச்சுட்டோம்.

ராதிகா: வெயிட் வெயிட். இங்கிலீஷ் உசத்தியா, தமிழ் உசத்தியான்னு பேச்சு போறதே!



சித்திரப் புதிர் — 38
விடை:

1. தையல் இயந்திரம்,
2. மூட்டைப்பூச்சி,
3. புல்டாக்,
4. நர்த்தன விநாயகர்,
5. (ஆ) கர்னாடகா,
6. Hand.

சுரேஷ்: சரி.. இப்ப தமிழ் மீடியம் படிக்கற ஒரு மாணவனுக்குப் படிப்பில் சந்தேகம் வந்தால் உடனடியாய் வீட்லஇருக்கற அம்மாகிட்டே போய்ச் சந்தேகம் கேட்கலாம். இங்கிலீஷ் மீடியம்னா, அப்பா ஆபீஸ்லேர்ந்து வர்றவ்ரைக்கும் காத்திருக்கணும்.

நாக: இந்தக் காலத்தில் அனேகமாய் எல்லா அம்மாக்களும் டிகிரி வாங்கினவங்களாய் இருக்காங்க! தவிர, அப்பா மட்டும்தான் ஆபீஸ் போறாரா? நவ் எ டேஸ், அம்மாக்களும் வீட்ல இருக்கறது குறைஞ்சுக்கிட்டு வர்றதே! பேரண்ட்ஸை எதிர் பார்க்காம — இன்டலிஜெண்ட் ஸ்டூடன்ட்டுன்னா — ஸ்கூல்லயே மிஸ்கிட்டே டவுட்டைக் கிளியர் பண்ணிக்கிட்டு வரலாம்.

நளினி: சே... வார்த்தைக்கு வார்த்தை இங்கிலீஷ் உபயோகிக்கிறியே! இங்கிலீஷ் மீடியம் படிச்சா அலட்டணுமோ!

ராதிகா: அய்ய! பொதுவா எல்லாருமே இங்கிலீஷ் வார்த்தைகள் உபயோகிச்சுக்கிட்டுதான் இருக்கோம்! ஃபான், காப்பி, டீ, சைக்கிள் இதுக்கெல்லாம் தமிழ் வேர்ட்ஸ் உபயோகிக்கறியா என்ன? அது இயல்பாய் வர்றது!

நளினி: நடந்து போறது ஆரோக்யம்னு சொல்றேன். சைக்கிளில் போறது வசதின்னு சொல்றீங்க. அதுக்காகப் பக்கத்து வீட்டுக்குக்கூடச் சைக்கிளில்தான் போவேங்கறது தப்பு. அதுமாதிரி இருக்கு நீ பேசறது.

நாக: அதுக்காக வெளியூருக்குக்

கூட நடந்து போறேன்னு பிடிவாதம் பிடிக்கற மாதிரி இருக்கு நீ பேசறது!

சுரேஷ்: 'தாய்' மொழின்னே சொல்றோம்! அதுலேந்தே அதுல கல்வி கற்பதுதான் உசத்தின்னு புரியலை!

ராதிகா: இந்த நாட்டில் எல்லாரும் அவங்கவங்க ஸ்டேட்லயே தங்க முடியுதா? அப்பாவுக்கு டிரான்ஸ்ஃபர் ஆகிறப்போ வெவ்வேற ஸ்டேட்ஸுக்குப் போக வேண்டி வருது. அப்போ இங்கிலீஷ் மீடியம்தான் உதவும்.

நளினி: என்னதான் சொன்னாலும், சொந்த வீட்லே தூங்கினால் தூக்கம் சட்னு வரும்; வேற புது வீடு சென்றால் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுக்கணும். அதுமாதிரிதான் இங்கிலீஷ் மீடியம் — புது வீடு மாதிரி.

நாக: ம்... படிப்புன்னு வரும்போது தூக்கத்தை உதாரணம் காட்டறயே! சரி. போனால் போறது. யாராவது விருந்தாளிங்க வந்தால் குழந்தை 'ட்விங்கிள், ட்விங்கிள்' சொன்னால் பேரண்ட்ஸுக்குக் குஷி. நிலா நிலாவா பாடச் சொல்றாங்க.

ராதிகா: ஜமாய்ச்சுட்டே கண்ணா!


நளினி: இங்கிலீஷ் ஒரு மொழியாக் கத்துக்கலாமே தவிர, போதனா மொழியா வைச்சுக்கிட்டா ரொம்பக் கஷ்டம். எல்கேஜி படிக்கற பையனுக்குத் தமிழ் எண்களே தெரியல்லே. ட்வெண்டின்னா இருபதுன்னு தெரியில்லே... என்ன வேண்டியிருக்கு இங்கிலீஷ் மீடியம்?

ராதிகா: நாம படிக்கறதே வேலை கிடைக்கும்னுதான். எல்லாமே தமிழ் நாட்டிலே வேலை செய்ய முடியுமா? வெளி மாநிலத்துக்கு, வெளி நாட்டுக்குப் போகணுமே. இங்கிலீஷ் மீடியம் தான் பயன் தரும்.


சுரேஷ்: நம்ம திறமை தமிழ் நாட்டுக்குத்தானே உதவணும்? தமிழ் மீடியம் தான் உசத்தி!

ஏற்பாடு, தொகுப்பு: **'பிரகலாதன்'**

படங்கள்: **பிரபுசங்கர்.**



விபத்தில்லாத விளையாட்டு



ஆட்டம் ஆடுவோம் — தினம் ஆட்டம் ஆடுவோம் — விளை
யாட்டுவீரர் என்னும்படி ஆட்டம் ஆடுவோம்.

ஆட்டத்திலே கெட்டிக் காரர் என்றே ஆடுவோம்!
பழகிப் பழகித் திறமை பெருக ஆட்டம் ஆடுவோம்!

பந்த யத்தில் தேர்ந் திடவே ஆட்டம் ஆடுவோம்
பரிசுபல பெற்றிடவே ஆட்டம் ஆடுவோம்.

பம்ப ரத்தை ஆடினாலும் பார்த்தே ஆடுவோம்.
கம்பம் கதவு மோதிடாமல் பார்த்தே ஆடுவோம்.

பந்தெ றிந்து ஆடும்போதும் பார்த்தே ஆடுவோம்
பக்கம் வரும் மக்களையும் பார்த்தே ஆடுவோம்.

சாலை மக்கள் மீது பந்தை மோதுவ தில்லை
சாலை வண்டி தள்ள தாங்கள் தவிப்பது மில்லை!

சாலையிலே ஆடுவதில் என்ன சந்தோஷம்?
தடுக்கிவிழ விபத்துகள்தான், எல்லாமே நாசம்!

பட்டம் விடுவோம் ஜோராய்ப் பட்டம் விடுவோம்
வெட்ட வெளியில் ஓடி ஓடிப் பட்டம் விடுவோம்.

நீல வானில் மேலே மேலே பட்டம் விடுவோம்.
சோலையிலே தொல்லை யின்றிப் பட்டம் விடுவோம்.

மொட்டைமாடி தேடி நாங்கள் போகவே மாட்டோம்.
மோதிக் கிழே தள்ளிக் கைகால் முறித்திட மாட்டோம்.

கொட்டு மழையில் ஓடி விபத்தில் சிக்கிட மாட்டோம்.
சட்ட முறைகள் மீறித் தவறு செய்திட மாட்டோம்.

வீட்டில் இன்று கவனமே வீதியிலே கவனமே.
நாட்டில் நாளை பெரிய ஆட்டக் காரர் ஆவோம் கவனமாய்!


— தம்பி சினிவாசன்.

அர்த்தமே வேறுதான்

கருத்து: எஸ்.டி.அரசு

படங்கள்: கலா




4
பரவாயில்லீங்க! இந்த வயசிலே குழந்தைக்கு ஆர்ட்ல எத்தனை இன்ட்ரஸ்ட் பாருங்க. என்கரேஜ் பண்ணனும். கண்டிக்கலாமோ!
கொரங்கு.. கொரங்கு! சுவத்தையெல்லாம் இப்படிப் பாழ் பண்ணிடுச்சே! இதுங்க கையை முறிக்க...
5
பேட்டிங் நல்லா இருக்கு. நிலைமையைச் சமாளிச்சுத் திறமையா ஆடறாங்க...
இப்படியே ஆடினாங்க, லஞ்ச் வரைக்கும் கூடத் தூங்க மாட்டாங்க!
6
உங்க டீச்சர் கட்டற புடவையெல்லாம் டக்கரா இருக்குடி. எனக்கு அப்படி செலக்ட் பண்ணத் தெரியலைன்னு எங்க அம்மா சொன்னா டீச்சர்!
ஐயே! பூரிச்சுப் போயிடாதீங்க! சும்மா சொன்னேன். இந்தச் சந்தோஷத்திலே என் 'ஹோம்வொர்க்' பத்தி கேட்காம விட்டா சரிதான்!

பிருந்தாவனக் கதையரங்கம்



ஆறாம் வகுப்பு படிக்கும் ராஜா படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி — ராஜாதான். எப்போதும் வகுப்பில் முதல் மாணவனாகத் திகழ்வான். ராஜாவின் தந்தை சந்திரன் ஒரு தொழிலகத்தில் வேலை செய்து வந்தார். தந்தையின் உழைப்பைக் கண்டு ராஜாவும் நன்கு படித்து வந்தான்.

ராஜாவின் வகுப்புக்குப் புதியதாக கோபால் என்னும் மாணவன் வந்தான். அவன் வேற்றூரில்

மறுநாள் காலையில் ராஜா தன் தந்தையிடம் சென்று தனக்கொரு மாம்பழம் கொடுக்குமாறு கேட்டான். சந்திரனும் அலமாரியில் இருந்து எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். ராஜா சென்று அலமாரியைத் திறந்தான். அலமாரியில் இருந்த அனைத்து மாம்பழங்களும் அழுகியிருப்பது கண்டு திகைத்தான்.

உடனே அவன் தந்தை, "நல்ல மாம்பழங்களுக்கிடையே ஒரே ஒரு அழுகிய மாம்பழம் இருந்தால் கூட அனைத்தும் அழுகிவிடுகிறது. அதுபோல நல்லவர்களுடன் ஒரே ஒரு கெட்டவன் சேர்ந்தாலும் எல்லோரையும் கெடுத்துவிடுவான்," என்று கூறினார்.

தந்தை என்ன சொல்ல வருகிறார் என்பது ராஜாவுக்குப் புரிந்து விட்டது.

அப்போது கோபால் ராஜாவை விளையாட்டிற்குக் கூப்பிட வந்தான். "இனிமேல் உன்னோடு விளையாட வர மாட்டேன்" என்று அவனை அனுப்பி விட்டு ராஜா புத்தகத்தை எடுத்துப் படிக்கத் துவங்கினான்.

— ஆர். காயத்ரி தேவி (16049)

சிவப்பு விளக்குகளால் ஒரு சினிமாக் கொட்டகை அலங்கரிக்கப் பட்டிருந்ததைப் பார்த்தேன். இமரென்று மூளையில் ஒரு பளிர் யோசனை!

கடையில் செல்லோபன் பேப்பர் ஒன்று வாங்கிக் கொண்டு வீட்டிற்கு விரைந்தேன். டார்ச் விளக்கின் கண்ணாடியை அந்தப் பேப்பரால் மூடினேன். ஓர் அறைக்குள் நுழைந்து சன்னல் கதவுகளை அடைத்தேன். இருட்டில் டார்ச் விளக்கினை எரிய வைத்து காகிதத்தைப் பார்த்தேன். என்ன அதிசயம்! காகிதத்தில் உள்ள சிவப்புக் கோடுகள் அனைத்தும் மறைந்து கறுப்புப் பென்சிலால் எழுதிய ரிஷியின் பெயர் தென்பட்டது. அது யாருடைய பெயர் தெரியுமா? என் பெயர்தான்! உடனே மாமாவிடம் ஓடினேன், நான் கண்டுபிடித்ததைக் கூறினேன்.

அதற்கு மாமா, "ஏன் சிவப்புக் கோடுகள் அனைத்தும் மறைகின்றன?" என்று கேட்டார்.

"சிவப்பு விளக்கின் ஒளியில் சிவப்புக் கோடுகள் அனைத்தும் மறைகின்றன. தாளில் முதலில் எழுதிய எழுத்துக்கள் தென்படுகின்றன," என்று பதிலளித்தேன்.



எய்த அம்பு குறி தவறி சிறுவனின் மார்பில் பாய்ந்து அதனால் அச்சிறுவன் துடிதுடித்து இறந்தான்.

இதைக் கண்ட யசோதை தனது ஒரே மகனும் பறிபோனது குறித்து துக்கத்தால் பதறினாள். அந்நாட்டு நீதி மன்றத்தில் மன்னனுக்கெதிராக வழக்குத் தொடர்ந்தாள்.

அந்நாட்டின் நீதிபதி தரும

இருந்து மாற்றலாகி அவ்வூருக்கு வந்திருந்தான். அவன் விளையாட்டில் படுசுட்டியாக இருந்தாலும் படிப்பில் மந்தமாக இருந்தான்.

காலாண்டுத் தேர்வு முடிவுகள் வெளியாயின. ராஜாதான் வகுப்பில் முதல் மாணவன். கோபால் கடைசி மாணவனாக வந்தான். கோபாலுக்கு ராஜாவின் மீது பொறாமை. ராஜாவைக் கவிழ்க்க அவன் திட்டம் தீட்டினான்.

கோபால் ராஜாவிடம் நல்ல நண்பன் போல் நடித்து, எப்போதும் விளையாடுவதற்கு அழைத்தான். ராஜாவிற்கும் விளையாடுவதில் ஆர்வம் இருந்ததால் அவனோடு விளையாடச் சென்றான். கோபால் ராஜாவோடு காலையிலும் சரி, மாலையிலும் சரி நெடுநேரம் விளையாடினான். விளையாடும் போது ராஜாவுக்கு ஐஸ்கிரீம் போன்றவற்றை வாங்கிக்கொடுத்து நல்ல நண்பன் போல நடித்தான்.

இதனால் ராஜா படிப்பதே இல்லை. விளையாடிவிட்டு வந்ததும் களைப்பினால் சாப்பிட்டு விட்டு உறங்கிவிடுவான். இதனைக் கண்டு ராஜாவின் தந்தை சந்திரன் மிகவும் கவலை கொண்டார். அவனை எப்படியாவது திருத்த வேண்டுமே!

மறுநாள் சந்திரன் பத்து மாம்பழங்கள் வாங்கி வந்தார். அவற்றில் ஒன்று அழுகிய மாம்பழம். ராஜா தன் தந்தையிடம் தனக்கு ஒன்று தரும்படிக் கேட்டான். அதற்கு அவர், "நாளை தருகிறேன்; நீ போய் உறங்கு," என்று கூறி அவனை அனுப்பிவிட்டு அம் மாம்பழங்களை ஓர் அலமாரியில் வைத்துக் கதவைத் தாளிட்டார்.



அன்று காலை எங்கள் வீட்டிற்கு மாமா வந்தார். அவர் ஓர் அறிவியல் பேராசிரியர். எங்கள் வீட்டிற்கு வந்தால் ஏதாவது மாஜிக் செய்து காட்டுவார். அதனால் அவரை 'மாஜிக் மாமா' என்று அழைப்போம்.

அன்று அவர் ஒரு தாளைக் காண்பித்தார். அதில் சிவப்பு மைப் பேனாவால் கருள் கருளாக கிறுக்கப்பட்டிருந்தது. "இதில் ஒரு ரிஷியின் பெயர் உள்ளது. கண்டு பிடி," என்றார்.

தாளை நன்றாகப் பார்த்தேன். "ஓர் எழுத்துக் கூடத் தெரியவில்லையே!" எனறேன்.

அதற்கு மாமா, "முதலில் ரிஷியின் பெயரைப் பென்சிலால் எழுதி, அப்புறம் சிவப்பு மைப் பேனாவால் கிறுக்கினேன்," என்று கூறினார்.

யோசித்துப் பார்த்தேன். என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரமானதும் பள்ளிக்குச் சென்றேன். திரும்பும்பொழுது 'மாஜிக் மாஜிக்' என்றப் புத்தகத்தைப் பரிசாக வழங்கினார். இந்த மாஜிக்கை நீங்களும் செய்து பாருங்களேன்!

— போ. பாலரிஷி, (13015)

நர்மதை நதிக் கரையில் அமைந்திருக்கும் வளமான நாடு செஞ்சந்தனபுரி. இதை விஜய சூரியன் எனும் மன்னன் ஆண்டு வந்தான். வயதில் இளையவனாக இருந்தாலும் நாட்டைத் திறமையாக நிர்வகித்து, நாட்டு மக்களிடம் நல்ல பெயரைப் பெற்றிருந்தான்.

விஜயசூரியன் தன் தலைநகரை அடுத்துள்ள வனத்திற்கு வில் வித்தை பழகுவதற்காக அடிக்கடி செல்வான்.

அதே வனத்திற்கு யசோதை என்ற ஏழைப் பெண் ஒருத்தி தினமும் விறகு சேகரிக்க வருவாள். அவள் கணவன் திருமணமான ஓர் ஆண்டிலேயே பக்கவாத நோய்க்கு ஆளாகி இறந்துவிட்டான். எனவே தினமும் காட்டில் விறகுகளைச் சேகரித்து கற்றையாகக் கட்டி நகரத்தில் சுமந்து சென்று விற்பதன் மூலம் வரும் வருமானத்தில் தனது வாழ்க்கையை நடத்தி வந்தாள். அவளுக்கு ஆறு வயதில் ஒரு மகன் இருந்தான்.

ஒருநாள் யசோதை தன் மகனை அருகிலுள்ள மரநிழலில் விளையாட விட்டு விட்டு, அவ்வனத்தில் விறகு சேகரித்துக் கொண்டிருந்தாள். அப்போது வில் வித்தை பழகிக் கொண்டிருந்த மன்னன் வழக்குகளைச் சிக்கலின்றித் தீர்த்து வைத்தவர்தான். எனினும் ஏழைப்பெண் ஒருத்தி தன் நாட்டு மன்னனுக்கே எதிராகத் தொடுத்த வழக்குப் புதுமையாக இருந்தது. எங்கே மன்னனுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கினால் அவரின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ எனப் பயப்பட்டார். அன்று இரவு தருமசேனருக்கு உறக்கமே வரவில்லை. இறுதியில் உயிரே போனாலும் நீதிக்குப் புறம்பாக நடக்கக் கூடாது என உறுதி கொண்டார்.

மறுநாள் மன்னனை நீதி மன்றத்திற்கு வரும்படி உத்தர விட்டார் தருமசேனர். அவையோர் நீதிபதியின் தீர்ப்பை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

அப்பாவிச் சிறுவனைக் கொன்ற விஜயசூரியன் குற்றவாளி என்றும், அதற்குத் தண்டனையாகவும்; குழந்தைக்கு ஈடாகவும் பத்தாயிரம் பொற் காசுகளை யசோதைக்கு வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் யசோதையிடம் மன்னர் மன்னிப்புக் கோர வேண்டும் என்று தீர்ப்பளித்தார் தருமசேனர். அவருக்கு அப்போது தான் மன நிம்மதி வந்தது.

விஜயசூரியன் குற்றத்தைஒப்புக் கொண்டு, பத்தாயிரம் பொற் காசுகள் கொடுக்கச் சம்மதித்ததுடன், யசோதையிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டான்.

அப்போது அங்கு யாரும் எதிர் பாராத விதமாகத் தனது பளபளக்கும் உடைவாளை மன்னர் உருவினார். அவையோர் என்ன நடக்குமோ என அஞ்சி நடுங்கினர். நீதிபதியும் தான் மன்ன

னுக்கெதிராகத் தீர்ப்புக் கூறிய தால் தன்னைத்தான் வெட்டிக் கொல்லப்போகிறார் மன்னர் என அஞ்சினார்.

ஆனால் மன்னனின் செயலோ வேறு விதமாக இருந்தது. அவன் நீதிபதியைப் பார்த்து, ''தரும சேனரே நான் இந்நாட்டின் மன்னன் என்பதனால் நீதி தவறித் தீர்ப்பளித்திருந்தீரானால் அக் கணமே உங்களை இவ் வாளால் வெட்டிக் கொன்று இருப் பேன். நீங்கள் நேர்மையாக நடந்து கொண்டதால் நம் நாட்டின் உயரிய விருதான 'வீரச்செம்மல்' விருதை உங்களுக்கு அளிக்க ஏற் பாடு செய்கிறேன்'' எனப் புன் சிரிப்புடன் கூறினான்.

— வா.க. இராஜ் குமார்.



மூன்னொரு காலத்தில் உல கில் உள்ள அனைத்து ஜீவராசி



தனர். இரட்டைச் சகோதரிகள். இரு பெண்களுக்கும் யாராலும் வித்தியாசம் காண இயலாது.

இருவரும் மணப்பருவத்தை அடைந்து விட்டனர். எல்லாக் கலைகளையும் கற்றுச் சிறந்து விளங்கினர். அக்கா, தங்கை இரு வருக்கும் வேறுபாடு காண முடி யாமல் திணறினர். அதனால் அரசர் மிகவும் கவலைப்பட்டார்.

இந்த விஷயம் மந்திரி விஜய னுக்குத் தெரிந்தது. அவர் அரச ரிடம் வந்து, ''அரசே! நீங்கள் கவ லைப்பட வேண்டாம். பறையறி வித்து யார் அக்கா தங்கை என்று அடையாளம் காட்டுகிறார்களோ அவர்களுக்கு இந்த நாட்டில் பாதி யும் தங்கையை அடையாளம் காட்டுகிறவருக்குத் தங்கையையும் அக்காவை அடையாளம் காட்டு கிறவருக்கு அக்காவையும் மண முடித்துக் கொடுப்பதாய்ச் சொல் லலாம்,'' என்று யோசனை தெரி வித்தார். அரசரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

பில் முதல் மாணவனா இருந் தாலும் அவனுக்கு ரொம்ப ஆணவம்டா,'' என்றான் சுந்தர். மற்ற மாணவர்களும் அ தை ஆமோதித்தனர். உண்மையும் அது தான்.

பள்ளி மணி அடித்த பிறகு ஆசிரியர் விடைத் தாள்களுடன் உள்ளே வந்தவர் சொன்னார்: ''வழக்கம் போல கோபிதான் முதல் மார்க். 100க்கு 90 மார்க்.''

கோபி செருக்குடன் சென்று விடைத்தாள்களை வாங்கிக் கொண்டு மற்றவர்களை ஏளன மாய்ப் பார்த்தான்.

ஆசிரியர், ''நம்ம வகுப்பிலேயே குறைவான மதிப்பெண் பெற்ற நபர் குமார்தான். நூற்றுக்கு பதி னான்கு மதிப்பெண். குமார்!'' என்றதும் மற்றவர்கள் நகைக்க, குமார் வருத்தத்துடன் சென்று வாங்கிக் கொண்டான்.

ஆசிரியர் கண்ணபிரான் மாண வர்களைப் பார்த்து, ''மாணவர்



மணி அடித்த பிறகு வெறுப்புடன் வீடு சென்றான்.

இரவு படுத்த அவனுக்குத் தூக் கம் வரவில்லை. பள்ளியில் நடந்த நிகழ்ச்சியையே நினைத்துக் கொண்டிருந்தான். அவன், 'டேய் கோபி! இருடா! நான் உன்னை விட அதிக மதிப்பெண் வாங்கிக் காட்றேன்டா! இல்லாவிட்டால் என் பெயர் குமார் இல்லேடா' என்று நினைத்த போது அவ னுக்குள் ஒரு வேகம் பிறந்தது.

அடுத்த நாள் முதல் அவன் பள்ளிக்குச் சென்று ஆசிரியர் நடத் தும் பாடங்களை நன்றாக கவனித் துக் கொண்டான். அவனுக்குச் சந்தேகம் எழுந்த போதே ஆசிரி யரிடம் கேட்டு விளக்கிக் கொண் டான்.

வீடு வந்ததும் அவன் சற்று நேரம் விளையாடி விட்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு பள்ளியில் நடத்திய பாடங்களைத் தவறாமல் படித்து மனப்பாடம் செய்து கொண்டான். அவன் இப்போது மிக நன்றாகப் படிக்கிறதாய் ஆசிரியரே சொன்னார்.

குமார் அரையாண்டுத் தேர்வை எழுதி முடித்து விட்டிருந்தான். விடுமுறை கழிந்து பள்ளிக்குச் சென்றான்.

பள்ளி மணி அடித்த பிறகு ஆசிரியர் கண்ணபிரான் வகுப் பறைக்குள் நுழைந்தார்.

''வணக்கம் ஐயா'' என்றனர் மாணவர்கள்.

''வணக்கம் மாணவர்களே! உட்காருங்கள் உங்களுடைய விடைத் தாள்களை நான் தருகி றேன். போன பரீட்சையின் போது நான்கோபியைத்தான் முதல்மாண

கடும் தவம் புரிந்தன. ஒரு கர்வம் மிகுந்த எறும்பும் தவம் செய்தது.

எறும்பின் தவத்தினை மெச்சி சிவபெருமான் எறும்பின் முன் தோன்றி, "என்ன வரம் வேண்டும்?" என்றார்.

உடனே எறும்பு கர்வத்தினால் அவசரப்பட்டு, "நான் கடித்தால் சாக வேண்டும்," என்ற வரத்தினைக் கேட்டது.

உடனே சிவபெருமான், "அப்படியே ஆகட்டும்," என்று கூறி விட்டு மறைந்தார்.

தான் பெற்ற வரத்தைச் சோதிக்க எண்ணிய எறும்பு சிவபெருமானையே தொடையில் நறுக்கென்று கடித்து விட்டது. சிவபெருமான் அவ்வெறும்பைக் கையிலெடுத்து நசுக்கிக் கொன்று விட்டார்!

அந்த எறும்பு சாகும் பொழுது, "நான் வரம் கேட்கும் பொழுது நான் கடித்தால் யார் சாக வேண்டும் என்று தெளிவாகக் கேட்க மறந்தேனே!" என்று வருந்தியது.

இக்கதையினால் நாம் அறிவது என்னவென்றால் இறைவனை சோதிக்க வேண்டும் என்று எண்ணுதல் கூடாது.

புலவர் கீரன் அவர்களின் உரையிலிருந்து:

— சு. சீனிவாசன், (21,699).

ரங்கபுரி என்னும் நாட்டை அத்திபதி என்னும் அரசன் முன்னொரு காலத்தில் ஆண்டு வந்தார். அவருக்கு ராஜ்யஸ்ரீ, விஜயஸ்ரீ என இரண்டு மகள்கள் இருந்தனர். அவர்களை மணமுடிக்கும் அடையும் ஆசையில் நிறைய அரசர்கள் வந்தார்கள். ஆனால் யாராலும் அடையாளம் காண முடியவில்லை. அரசர் சிறிது சிறிதாக நம்பிக்கை இழக்கும் தருணத்தில் மருதபுரி என்னும் சிற்றூரிலிருந்து இரண்டு இளைஞர்கள் வந்து, 'அடையாளம் காட்டுகிறோம்,' என்று கூறினர்.

உடனே இரண்டு இளவரசிகளுக்கும் ஒரே மாதிரியான ஆடை அலங்காரங்கள் செய்வித்து வைத்தனர். ஓர் இளைஞன் தான் கொண்டு வந்த கிளியைத் தங்கையாகிய விஜயஸ்ரீயின் மேல் விட்டான். உடனே அவள் அலறிவிட்டாள். அதைக் கண்டு துடித்த அக்காள் ராஜ்யஸ்ரீ, "ஏன் என் தங்கை மேல் கிளியை விட்டாய்?" என்று பட்டென்று கோபமாகக் கேட்டாள்.

உடனே அந்த இளைஞன், "யார் தங்கை என்று காணவே இவ்வாறு செய்தேன்," என்று கூறி மன்னிப்புக் கேட்டான்.

அரசர் உட்பட அனைவரும் அவன் புத்திக் கூர்மையை எண்ணிப் பாராட்டிதோடு, தங்கையை மணமுடித்து பாதி நாட்டையும்; மற்ற இளைஞனுக்குப் பாதி நாட்டுடன் அக்காவையும் மணமுடித்துக் கொடுத்தனர்.

— சுதாகர் பாலன், (18968).

"அந்தகோபி இருக்கிறானே, அவன் நல்லவன் இல்லைடா. அவன் தற்பெருமைக்காரன். என்னதான் அவன் நம்ம வகுப்பில் படிப்பில் முதல் வகுப்பு பெற வேண்டுமானால் நன்றாக முயற்சி செய்து படியுங்கள். குமார் போன்றவர்களுக்கு நன்றாகப் பாடம் புரியவில்லையானால் கோபியிடம் கேட்டு விளங்கிக் கொள்ளுங்கள்," என்றார்.

மறுநாள் ஆசிரியர் ஆங்கில இலக்கணம்பற்றி வகுப்பில்பாடம் நடத்தி விட்டுச் சென்றார்.

குமாருக்கு விளங்கவில்லை. அவன் ஆசிரியரிடம் கேட்கப் பயந்து, கோபியிடம் தயங்கியபடியே சென்றான்.

"கோபி...." என்றான் குமார்.

"என்னடா?" எரிந்து விழுந்தான் கோபி.

"கோபி, எனக்கு இந்தக் கிராமரை சற்று விளக்குகிறாயா? புரியவே இல்லை," என்றான் குமார்.

"போடா போ. உனக்குத் தமிழே தெரியாது. இங்கிலீஷ் எங்கே புரியப் போகிறது?" எரிச்சலுடன் சொன்னான் கோபி.

"நான் கஷ்டப்பட்டுப் புரிந்துக்குவேன் கோபி. தயவு செய்து எனக்கு இந்தக் கிராமரைச் சற்று விளக்கித்தான் சொல்லேன். ஒரு முறை சொல் போதும். நான் புரிந்துகொள்கிறேன்," என்றான் கெஞ்சலுடன் குமார்.

"டேய் போடா. நீ படிச்சு என்னத்த கிழிச்சிடப் போற!" என்றான் கோபி சிரித்தபடி.

கூடி இருந்த மாணவர்கள் அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

குமாருக்கு மிகுந்த அவமானமாகப் போய் விட்டது. 'பேசாமல் ஆசிரியரிடமே சென்றிருக்கலாம்' என்று நினைத்தான். அவன் பள்ளிடை வேறொருவன் தட்டிச் சென்றுள்ளான்," என்று முடிப்பதற்குள், "யார் அவன்?" என்றனர் மாணவர்கள்.

"போன பரீட்சையின் போது கடைசி ராங்கில் இருந்தானே குமார், அவன்தான். அவன் பெற்ற மதிப்பெண் நூற்றுக்கு 93 மார்க்குகள். கோபியின் மார்க்குகள் 80 தான்," என்றார்.

"மாணவர்களே! நம் குமார் கடைசி ரேங்கில் இருந்து முதல் ரேங்கிற்கு வந்திருக்கிறான். அதன் காரணம் முயற்சி. நீங்களும் முயற்சி செய்து முன்னேறுங்கள்," என்றார் ஆசிரியர்.

குமார் மகிழ்ந்தான்.

கோபி தலைகுனிந்தான்.

— கே. ஏழுமலை, (22,502).

உழைப்பது சன்-
மானம் பெறுவதற்கு
என்று நினைத்தால்
அவ்வேலை
கடினம் போல்
தோன்றும்.



டாக்டர் பக்கம்

மின் விபத்தில் முதல் உதவி

டாக்டர் கு. கணேசன்

இன்றைய வாழ்வில் மின்சாரம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். மின்சாரத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் நன்மைகளும், வசதிகளும் ஏராளம், ஏராளம். ஆனால் அதே சமயம் மின்சாரத்தையும், அது செல்லும் கம்பிகளையும் மின் இணைப்புக்களையும் நாம் தவறாகக் கையாண்டால், உயிருக்கே ஆபத்து வரக் கூடிய அபாயமும் அதில் இருக்கிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் தினமும் எங்கேனும் ஓரிடத்தில் ஏதேனும் சில காரணங்களால் மின்விபத்துக்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. நம் வீடுகளிலும் மின் விபத்துக்கள் நடப்பதற்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. வீட்டில் நடக்கும் பெரும்பாலான மின் விபத்துக்கள் கவனக் குறைவினாலும், அலட்சியப் போக்கினாலுமே நடைபெறுகின்றன. உதாரணமாக, தொங்கும் மின் கம்பிகளைத் தொடுவது, மின்னோட்டத்தை நிறுத்தாமலேயே மின் சாதனங்களை நகர்த்துவது, உடைந்த மின் பொத்தான்களை உபயோகிப்பது, உறை இழந்த மின் கம்பிகளை உடனுக்குடன் மாற்றாமல் பயன்படுத்துவது, ஈர உடலோடு மின் சாதனங்களைத் தொடுவது போன்ற நடவடிக்கைகளினால் மின் விபத்துக்கள் நடைபெறுகின்றன.

மின் விபத்தினால் நமக்கு மூன்று வகையான ஆபத்துக்கள் உண்டாகலாம். ஒருவர் உடம்பில் மின்சாரம் பாய்ந்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது அந்த மின் சாரத்தின் சக்தியைப் பொறுத்தும், மின்சாரத்தால் தாக்குண்டவர் எவ்வளவு நேரம் மின்சாரத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்பதைப் பொறுத்தும், அப்போது அவருக்குக் கிடைக்கக் கூடிய முதல் உதவி முறைகளை வைத்தும் பாதிக்கப்பட்டவரின் ஆபத்தின் அளவு மாறுபடும்.

எடுத்துக்காட்டாக அவர் உடம்பில் பாய்ந்த மின்னோட்டம், சக்தி வாய்ந்ததாக இருந்தால் அவருக்கு இதயத் துடிப்பு நின்று மரணமே ஏற்படலாம். மேலும் சில சமயங்களில் மின் சக்தியின் அளவு மிகமிகக் குறைந்ததாக இருந்தால் மின்சாரம் பாய்ந்த இடத்திலும், அதன் அடியில் உள்ள திசுக்களிலும் ஆழமான தீப்புண்கள் உண்டாகலாம்.

ஆக, மின்சாரம் பாய்வதால் ஏதேனும் ஒரு விதத்தில் ஆபத்து வருவது உண்மை. அதே சமயம் மின்சாரத்தால் பாதிக்கப்பட்டவர் உடனுக்குடன் காப்பாற்றப்பட்டு, முதலுதவி

செய்யப்பட்டு, மருத்துவர் உதவியும் கிடைத்து விட்டால் அவருக்கு ஆபத்துக் குறைவாகத்தான் இருக்கும்.

எனவே, மின்சாரத்தால் தாக்குண்டவருக்கு உடனடியாக முதலுதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்பதை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள், இல்லையா?

சரி, மின்சாரம் பாய்ந்தவருக்கு எப்படி முதலுதவி செய்ய வேண்டும் என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன் :


ஒருவருக்கு மின்சாரம் பாய்ந்து விட்டது என்று தெரிந்தவுடனேயே அருகில் உள்ளவர்கள், உடனே மின்னோட்டத்தை நிறுத்தவேண்டும். அதன்பின்பு தாக்குண்டவரை மின் கம்பியிலிருந்து அகற்ற வேண்டும். இது மிகவும் கவனமாகச் செய்ய வேண்டிய பணி. ஏனென்றால், அவசரப்பட்டோ, அஜாக்கிரதையாகவோ முன்பின் யோசிக்காமலோ மின்சாரம் பாய்ந்தவரைக் காப்பாற்றப் போகிறேன் என்று சொல்லி மின்சாரம் பாய்ந்தவரைத் தொடுவீர்களானால் அப்போது முதலுதவி செய்பவருக்கும் மின்சாரம் பாய்ந்து விடக்கூடிய அபாயம் இருக்கிறது. எனவே நான் சொல்லும் முன் யோசனைகளுடன் மின்சாரம் பாய்ந்தவரை மின் கம்பியிலிருந்து விலக்க வேண்டும். எப்படித் தெரியுமா?

முதலுதவி செய்பவருக்கும் மின்சாரம் பாய்ந்தவருக்கும் இடையே சுமார் 6 அடி இடைவெளி இருக்க வேண்டும். தடித்த நீண்ட உலர்ந்த கட்டையால் மின் கம்பியிலிருந்து மின்சாரம் பாய்ந்தவரை விலக்க வேண்டும். இச்சமயத்தில் முதலுதவி செய்பவர் கையில் ரப்பர் உறைகளை அணிந்து கொள்வதும், காலில் ரப்பர் செருப்புக்களை அணிந்து கொள்வதும் அல்லது ரப்பர் பாயின் மேல் நின்றுகொள்வதும் ஆபத்தைத் தவிர்க்கும்.

எந்த நேரத்திலும் ஈரத்தோடு கூடிய பொருளால் மின் கம்பியை விலக்க முயற்சிக்கக் கூடாது. அதுபோல் முதலுதவி செய்பவர் உடம்பில் ஈரம் இருக்கக் கூடாது. முதலுதவி செய்பவரின் உடம்பின் எந்தப் பாகமும் தரையுடனோ சுவருடனோ நேரடித் தொடர்பு கொண்டிருக்கக் கூடாது. மேற்சொன்ன தற்காப்பு நடவடிக்கைகளுடன் மின்சாரம் பாய்ந்தவரை மின் கம்பியிலிருந்து விலக்கிவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதன் பின்பு என்ன செய்வது? யோசிக்கிறீர்கள் அல்லவா? அதற்கும் வழி சொல்கிறேன், கேளுங்கள்.

பாதிக்கப்பட்ட நபரைக் காற்றுள்ள இடத்தில் படுக்க வையுங்கள். அவரது ஆடைகளை நன்றாகத் தளர்த்திவிடுங்கள். அவரின் மூச்சு சீராக வருகிறதா என்பதைக் கவனியுங்கள். மார்பைத் தொட்டுப் பார்த்து, இதயத் துடிப்பு இருக்கிறதா என்பதைப் பாருங்கள். கழுத்தின் இரு பக்கங்களையும் தடவிப் பார்த்து நாடித் துடிப்பு இருக்கிறதா என்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள்.

ஒருவேளை, அந்த நபருக்கு இதயத் துடிப்பு குறைந்திருக்கிறது அல்லது நின்றிருக்கிறது என்றால், உடனே அவருக்கு 'இதய மசேஜ்' செய்ய வேண்டும். இதைக் கொஞ்சம் விளக்கமாகவே உங்களுக்குச் சொல்கிறேன்: அதாவது முதலுதவி செய்பவர் தனது வலது கை முட்டியால் பாதிக்கப்பட்ட நபரின் மூன்றாவது நெஞ்செலும்பை





அழுத்த வேண்டும். இதன் மூலம் இதயம் மீண்டும் துடிக்க ஆரம்பிக்கலாம். இந்த இதய மசேஜை இதயத் துடிப்பு வரும் வரைக்கோ அல்லது மருத்துவர் உதவி கிடைக்கும் வரைக்கோ நிறுத்தாமல் செய்ய வேண்டும்.

சில சமயங்களில் இதயத் துடிப்பு நன்றாக இருக்கும்; சுவாசம் மட்டும் இல்லாமல் இருக்கலாம். இம்மாதிரிச் சமயங்களில் அவருக்குச் செயற்கைச் சுவாசம் ஊட்ட வேண்டியது அவசியம். இதை எப்படிச் செய்ய வேண்டும் தெரியுமா? பாதிக்கப்பட்ட நபரை மல்லாக்கப்படுக்கவைத்து,முகத்தைச் சற்று மேலே தூக்கி, நாக்கை வெளியே இழுத்து, முதலுதவி செய்பவரின் வாயைப் பாதிக்கப்பட்ட நபரின் வாயின் மேல் வைத்துக் காற்றை ஊத வேண்டும்.இதைநிமிடத்திற்குஇருபது முறை செய்ய வேண்டும். சுவாசம் சீராக வரும் வரைக்கும் அல்லது மருத்துவர் உதவி கிடைக்கிற வரைக்கும் செயற்கைச் சுவாசம் ஊட்ட வேண்டும்.

மேலும் சில சமயங்களில் பாதிக்கப்பட்ட நபர் அதிர்ச்சியின் காரணமாக மயக்கத்தில் மட்டும் இருப்பார். அவருக்கு இதயத் துடிப்பும் சுவாசமும் நன்றாக இருக்கும். இச்சமயங்களில் பாதிக்கப்பட்டவரின் முகத்தில் குளிர்ந்த நீரை அடித்து, அந்நபரின் கால் பாதங்களையும், உள்ளங்கைகளையும் தேய்த்துச் சூடாக்கி அதிர்ச்சியிலிருந்து மீட்கலாம். பின்பு அவருக்குச் சூடான பானம் தரலாம்.

மின்விபத்தால் தீக்காயங்கள் ஏற்பட்டிருந்தால் அவற்றை உடனே ஈரமான துணியால் துடைத்துத் தூசு படாமல் கட்டிவிடவேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை. எந்த வித மின்விபத்து நடந்துவிட்டாலும், பாதிக்கப் பட்டவருக்கு முதலுதவி செய்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் மருத்துவருக்குத் தகவல் சொல்லி உடனுக்குடன் மருத்துவர் உதவியும் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

சரி,மின்சாரம் பாய்ந்தவரைக் காப்பாற்றி விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.மிக்க சந்தோஷம்தான். அதே சமயம் நடந்துவிட்ட மின் விபத்து ஏன் நடந்தது, எப்படி நடந்தது என்பதையும் யோசித்துப் பார்த்து அம்மாதிரி மின் விபத்துக்கள் எதிர் காலத்தில் நடந்துவிடாமல் பார்க்க வேண்டியதும் நம் கடமையல்லவா? அதற்கு நீங்கள் கையாளவேண்டிய சில வழிமுறைகளையும் இங்கே சொல்கிறேன், கேளுங்கள்.

தொங்கிக்கொண்டிருக்கும் மின் கம்பிகளைத் தொடாதீர்கள். மின் சார சாதனங்களை நகர்த்திவைக்கும் போது, மின்னோட்டத்தை நிறுத்தி விடுங்கள், என்னதான் அவசரமாக இருந்தாலும் ஈர உடம்போடு மின் சாதனங்களைத் தொடாதீர்கள் உடைந்த மின் பொத்தான்களை உபயோகிக்காதீர்கள்.மின்கம்பிகள்உறை இழந்துவிட்டால் உடனே புது மின்கம்பிகளைப் பயன்படுத்துங்கள். விளையாட்டுக்குக்கூட மின் பொத்தான்களின் துவாரத்தில் ஊக்கு, கம்பி போன்றவற்றை நுழைக்காதீர்கள்.

எதையும் வரும் முன் காப்பதே நல்லது. எனவே மின்விபத்தை வர விடாமல் தடுத்து ஆபத்தை அகற்ற வேண்டியது உங்கள் கடமை.



பிள்ளைப் பிராயத்தில் காமராஜ்

பெருந்தலைவர் கே. காமராஜர் விருதுநகரில், 1903 — ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 — ம்தேதி பிறந்தார். பெற்றோர்: குமாரசாமி நாடார் — சிவகாமி அம்மாள்.

விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை சென்றார். 1954 — இல் தமிழக முதலமைச்சரானார். எல்லாருக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமல்படுத்தினார். பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 1972 — இல் தாமிரப் பத்திர விருது பெற்றார். 1975 — ஆம் ஆண்டு அக்டோபர் 2 — ம்தேதி அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளில் — அமரர் ஆனார்.

கிண்டியில் காமராஜருக்கு நினைவகம் அமைக்கப் பட்டுள்ளது. சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகங்கள் உள்ளன. காமராஜர் பெயரில் மதுரையில் பல்கலைக்கழகமும், காமராஜர் மாவட்டமும் அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

குழந்தை காமராஜரை, அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்தவர், அவரது பாட்டி பார்வதி அம்மாள்.

அவர் பேரனை இடுப்பில் வைத்துக் கொண்டு, வெண்ணிலா காட்டி, வெள்ளிக் கிண்ணத்தில் பிசைந்து வைத்த பால் சோறு ஊட்டுவதில் பாட்டி தனி இன்பம் கண்டார். ஆட்டுப் பாலில் மலை வாழைப்பழம் கலந்து கொடுப்பதும் உண்டு.

தவழ்ந்து எழுந்த காலத்தில் தாய் மாமன் வீட்டில் இருந்து 'தள்ளு வண்டி' வந்தது. முதலெடுப்பிலேயே குழந்தை தடுமாறி விழாமல் வண்டியை ஓட்டியதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்,வீட்டார்எல்லோரும்.

குழந்தை காமராஜுக்குச் சேலம் பங்கான பட்டாடை அணிவித்து, கழுத்தில் தங்கக் 'கெவுடும்,' கையில் தங்கக் காப்பும் போட்டு, சடை பின்னி விட்டு, அழகு பார்த்தார் பாட்டி பார்வதி அம்மாள். இந்த ஆபரண அலங்காரம் பள்ளியில் சேர்த்தபோது கூட இருந்தது.

எல்லாக் குழந்தைகளைப் போன்றே, எண்ணெய் தேய்த்துக் குளிப்பது என்றால் சிறுவன் காமராஜுக்கும் பிடிக்காது. வீட்டுப் பரண் மீது ஏறி ஒளிந்து கொள்வான்.

பாட்டி அம்மாள் இதை ஜாடையாகப் பார்த்துவிடுவார். அக்கம் பக்கத்து வீட்டுச் சிறுவனைக் கூட்டி வந்து, எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி ஆடை அலங்காரம் செய்வார். காமராஜ் விடுவிடுவென்று

பரணிலிருந்து இறங்கி, தோழனுடன் சேர்ந்துகொள்ளுவான். குளிப்பு நடக்கும்; ஆடை அலங்காரம் சிறக்கும்; பாட்டியின் தந்திரம் வெற்றி முழக்கமிடும்.

கார்த்திகை, அமாவாசை, வெள்ளிக்கிழமைகளில் அம்மன் கோயிலில் விசேட பூஜை நடக்கும். நாட்டாண்மைக்காரர் வீட்டுக்குப் பூசாரி பிரசாதம் (தேங்காய், பழம்) கொண்டு வருவார்.

பூசாரியுடன் மேள வாத்தியமும் யானையும் வரும். இது மாமூல், மரியாதை வழக்கம்.

பூசாரி, கோவில் நைவேத்தியத்தைக் கொடுத்தார். அப்போது, பாட்டி பக்கத்தில் சிறுவன் காமராஜ்! யானைக்கு யார் என்ன சொன்னார்களோ தெரியாது.

துதிக்கையை நீட்டிச் சிறுவனைத் தொட்டுத் தூக்கி விட்டது! பாட்டி பதறினார். யானைமேல் இருந்த பாகன் கையால் சைகை காட்ட, துதிக்கை உயர்ந்தது. பாகன் கைநீட்டிக் காமராஜரைப் பிடித்து யானையின் மத்தகத்தில் உட்கார வைத்தான்.

பாட்டி அம்மாள் உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே! "என் காமராஜுக்குப் பச்சை நரம்பு மாறி விடும். பேஷ்! பேஷ்!" என்று சப்தமாகக் கூறினார்.

சிறு வயதில் யானை மீது அமர வைத்தால் குழந்தைகளின் பச்சை நரம்பு மாறும்; குழந்தைப் பருவத்து வியாதிகள் (பாலாரிஷ்டம்) வராது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.

ஆஸ்திக்கு ஓர் ஆணும், ஆசைக்கு ஒரு பெண்ணும் என்று சொல்வார்களே! அது, சிவகாமி அம்மாள் குடும்பத்தில் சரியாக அமைந்தது.

ஆமாம். காமராஜுக்கு ஒரே தங்கை — நாகம்மாள் பிறந்தார். தங்கை மீது காமராஜுக்குத் துடிப்பான அன்பு.

"பாப்பா! பாப்பா!" என்று வேடிக்கை பேசிப் 'பருப்பு கடையும்' விளையாட்டு காட்டிச் சோறு ஊட்டுவான்.



அதில்லாமல், தெருப் பிள்ளைகளைச் சேர்த்து வைத்துக் கொண்டு கொட்டமடிப்பதும் உண்டு! வீடே 'அதம்' பறக்கும்! விளையாட்டுகளுக்குக் கணக்கே இல்லை.

அதில் ஒன்று, நிலாச் சோறு சமைப்பது. மொட்டை மாடியில் நிலவொளியில் சிறுசிறு மண் செப்புகளில் 'கூட்டாஞ்சோறு', தயாரித்து உண்பார்கள். பெயர்தான் 'சோறே' தவிர, உப்புமா முதலிய பலகாரங்களும் தயாராகும்.

மண்டபம் போன்ற அந்த அறையின் ஒரு பகுதியில், இரண்டு தூண்களை இணைத்து, நடுவில் சினிமாப் படம் காட்டப்படும். திரை போன்று, தும்பை நிற வெள்ளைத் துணி கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. திரைக்குப் பின்னால் சிமினி விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது.

சிறுவர்கள் கண்களை அகல விரித்தபடி திரையை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஏண்டா, இன்னிக்கு இவ்வளவு நேரம்? பாவைக் கூத்து (பொம்மலாட்டம்) ஆரம்பிக்கலாமே!" இது கட்டளையாக வந்தது. ஏறு குடுமி அள்ளி முடிக்கப்பட்டிருந்த வீட்டுக்காரச் சிறுவன் காமராஜிடமிருந்து சிறுவன் ஒருவன் திரைக்குப் பின்னால் போனான்.

ஆட்டம் ஆரம்பமாகிவிட்டது. பொம்மைகளின் நிழல் உருவங்களின் அசைவுதான் அது.

பத்திரிகைகளிலும் ஊமை

சினிமா, சர்க்கஸ் விளம்பர நோட்டீஸ்களிலும் மற்றும் சிறுவர்கள் சேகரித்தபடங்களிலும்உள்ள உருவங்களைக் கச்சிதமாக வெட்டி, அட்டைகளில் ஒட்டித் தயாரித்த பொம்மை உருவங்கள்.

பொம்மலாட்டம் நடந்து கொண்டிருந்தது.

திடீரென்று சிறுவன் காமராஜ் திரைக்குப் பின்னால் போனான். ''உன் ஆட்டம் ஏண்டா சரியில்லை?'' என்று சலித்துக் கொண்டான்.

ஆட்டம் காட்டும் பொறுப்பு மற்றொரு சிறுவனிடம் கைமாறுகிறது.

ராஜா ராணி, யானை, சிங்கம், புலி, கரடி, குதிரை, வீரன் — இப்படிப் பலப் பலக் காட்சிகள் நிழலுருக் கொண்டன. சிறுவர்கள் ஆட்டத்தில் லயித்து விட்டனர்.



மகிழ்ச்சி தாண்டவமாடியது. ஆட்டம் காட்டும் பொறுப்பு மேலும் சிலரது கைகளுக்கு மாற்றப்பட்டது.

திரையில், மங்கிய சிமினி விளக்கின் ஒளி. அதில் கரு நிழல் உருவங்களின் ஆட்டம் வேறு. எவ்விதச் சப்தமும் இல்லை. அமைதி நிலவியது. இருள் கப்பிக் கிடந்தது.

அந்த இருளிலும், சிறுவன் காமராஜின் விழிகள் அடிக்கடி உருண்டு கதவுப் பக்கம் நோக்கிக் கொண்டிருந்தன.

கதவின் ஓரத்தில் தலை கவிழ்ந்து சோர்ந்து நின்று கொண்டிருந்த சிறுவனைப் பிடித்து இழுத்து வந்தான். ''இப்ப சரியா காட்டுடா பார்க்கலாம்,'' என்று மீண்டும் ஒரு முறை ஆட்டம் காட்ட வாய்ப்புக் கொடுத்தான்.

அந்தச் சிறுவன் சந்தோஷமாகப் பொம்மலாட்டம் காட்டி அனைவரது பாராட்டையும் பெற்றான்.

''ஊம்! எங்களை எல்லாம் அதட்டினியே! நீ காட்டேன்?'' என்று வீட்டுக்காரச் சிறுவனைக் கேட்டார்கள், அங்கு கூடியிருந்தோர்.

சிறுவன் காமராஜ் பெருமிதத்தோடு சென்று பொம்மலாட்டம் காட்டினான். எல்லோருக்கும் களிப்பூட்டி, கைத்தட்டலையும் பெற்றான்.

தங்கை நாகம்மாளுடன் தாயும், பாட்டி இக் களிப்பில் பங்கு கொண்டனர்.

தொம்பைக் கூத்து (கழைக் கூத்து) பார்ப்பது என்றால் சிறுவர்களுக்கு ஆசைதானே! காமராஜ் இதற்கு விலக்கல்ல! ஆசை — வித்தையைப் பார்த்து மகிழும் அளவோடு நிற்கவில்லை. அதைப் போலவே தாங்களும் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது, காமராஜுக்கும் நண்பர்களுக்கும். இதற்கு வகையாக வந்து வாய்த்தது வீட்டிலிருந்த விசிறிப் பலகை (ஊஞ்சல்). இனி ஆட்டத்திற்குச் சொல்ல வேண்டுமா?

விசிறிப் பலகையைக் காமராஜ் அப்புறப்படுத்தினான். வெறுமனே தொங்கிக் கொண்டிருந்த இரும்புச் சங்கிலிகளைப் பிடித்துத்தொங்கியும், ஆடியும் விளையாட்டுத் தோழர்கள் வித்தை காட்டினார்கள். சில சமயம் சங்கிலிகளுக்கு இடையே பலகைக்




இணைக்கப்பட்டு, அதன் மீது ஏறியும் சர்க்கஸ் பலர் வேலை செய்வதுண்டு.

தொம்பர்களைப் போன்று கரணங்கள் போடுவது, பல்டி அடிப்பது ஆகிய விளையாட்டுக்களும் தீவிரமாகிவிடும். இதிலெல்லாம் முன்னோடியாக இருந்து மேற்பார்வை இடுவதும் காமராஜ்தான்!

ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் கூடத் தொம்பை விளையாட்டு நடக்கும். இதில் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கினாலும் காமராஜ் அயர வேண்டுமே! இரவு வெகுநேரம் வரை கூட இதில் ஈடுபட்டிருப்பார்கள்.

இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபாடு கொண்டிருந்த காமராஜுக்கு, சடுகுடு ஆடுவதிலும் அளவற்ற ஆர்வமுண்டு.



''பிடி... பலி... சடுகுடு
நான் தாண்டா வீரன்
நல்ல மருது தீரன்... வெள்ளிப்
பிரம்பெடுத்து விளையாட
வந்தேண்டா... வந்தேண்டா...''

என்று மூச்சுப் பிடித்துச் சடுகுடு விருத்தம் பாடுவதில் காமராஜ் சமர்த்தன். ஆட்களை 'அவுட்' அடித்துத் தப்பி விடுவதிலும், 'விருத்தம்' பாடி வருகிறவரைக் கோட்டுக்குள் பிடித்து அமுக்குவதிலும் தனித்தனி வழி வகுப்பதில் காமராஜ் வல்லவன்.

ஐந்து வயது பிறந்ததும் சிறுவர்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுவது மட்டுமல்ல, அதற்காக மகிழ்ச்சி விழா எடுப்பதும் அந்தக் கால வழக்கம்.

சிறுவன் காமராஜ் முதலில் சேர்க்கப்பட்டது, ஏட்டுப் பள்ளிக்கூடத்தில்தான். இதை நொண்டி வாத்தியார் என்ற வேலாயுதம் நடத்தி வந்தார்.

வளர்பிறை, வியாழக்கிழமை. குரு வாரம்.

தந்தை குமாரசாமி, காமராஜ் பள்ளிக்கூடம் புகும் நாளைத் தடபுடலாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார். நாட்டாண்மைக்காரர் தார் போட்டுக் கட்டிய வேட்டி மீது நார்ப்பட்டுத் துண்டை இடுப்பைச் சுற்றிலும் இறுகக் கட்டிக் கொண்டு, ஓடியாடி வேலை செய்தார்.

பாட்டிக்கு மட்டுமா! அன்னை சிவகாமிக்கும், ஒரே குதூகலம். அதிகாலையிலிருந்தே சுறுசுறுப்பு. அக்கம் பக்கத்திலிருப்பவர்களும், உற்றார் உறவினர்களும் வந்து சேர்ந்தனர். வீட்டை மெழுகி மாக்கோலமிட்டு மாவிலைத் தோரண அலங்காரம். வீடு நிறைந்த கூட்டம்; கலகலப்பு. வீட்டிற்கே ஒரு தனிப் பொலிவு.

சிறுவன் காமராஜ் காசிப் பட்டாடைக் கட்டி வெல்வெட் கோட்டு அணிந்திருந்தான். கைகளில் தங்கக் காப்பு, தோளில் பாசிப் பந்து, கழுத்தில் தங்கக் கெவுடு. காதில் மின்னி வெட்டிய வெள்ளைக் கல் கடுக்கன். பட்டுப்போல்தலையைவாரி விட்டுக் காமராஜுக்குச் சடை பின்னி அழகு செய்தார் பாட்டி.

நாதசுர இன்னிசை; மங்கல நாதம் எழும்பியது.

நாடார் சமூகக் குருக்கள் ராமலிங்கம் வந்துவிட்டார். உற்றார் உறவினர் கூட்டம் பெருகியபடி இருந்தது.

பவளமணிப் பல்லக்கு வந்தது. வழக்க முறைப்படி தாய் மாமன் கருப்பைய நாடார் (நாட்டாண்மைக்காரர் மூத்த மகன்) காமராஜைத் தூக்கிச் சுமந்து பல்லக்கில் வைத்தார். முதல் பாரத்துக்குத் தோள் கொடுத்தார். ஊர்வலம் புறப்பட்டது.

தெருக்கள் தோறும் வீடு வீடாகப் போய் விவரம் சொன்னார்கள். உற்றார் உறவினர்களையும், தெரிந்

தவர்களையும் கூப்பிட்டார்கள். வீட்டுப் பெண்களுக்கு வெற்றிலை பாக்கு, மஞ்சள் குங்கும மரியாதைகள்.

''வா, சரசு... வா, தெய்வானை... நம் காமராஜ் பள்ளிக்கூடம் போறான். 'ஆனா ஆவன்னா' எழுதப் போறான். வந்து பாருங்க,'' என்று பாட்டியின் அழைப்பு வேறு!

நான்கு ரத வீதிகளைச் சுற்றி விட்டு ஊர்வலம் வீடு திரும்பியது.

குருக்கள் தேவாரம், திருவாசகம், விநாயகர் அகவல் பாடினார். ஏட்டு வாத்தியார் பீடம் அமர்ந்தார்.

பனைக் குருத்தோலை! வெள்ளிப் பிடி போட்ட எழுத்தாணியைச் சிறுவன் காமராஜ் கையில், தாய் மாமன் கொடுத்தார். ஏட்டு வாத்தியார் சிறுவன் கையைப் பிடித்தபடி அசைக்க, ஓலையில் 'அ' அழகு காட்டியது!

கெட்டி மேளம் கொட்டியது. பெண்கள் 'குலவை' போட்டார்கள். பூமாரி பொழிந்தது. காப்பரிசி வழங்கப்பட்டது.

பெரியவர்கள் வாழ்த்துக் கூற, சிறுவன் ஏட்டுப் பள்ளிக்கூடம் சேர்ந்தான். படிப்பு ஆரம்பமாயிற்று.

ஏட்டுப் பள்ளிக்கூடப் படிப்பு வாயால் சொல்லக் கேட்டு, மனப்பாடம் செய்வதாகவே இருந்தது. வாத்தியார், பாட்டு மாதிரி பாடத்தை ராகம் போட்டுச் சொல்ல, சிறுவர்கள் அப்படியே திருப்பிச் சொல்ல வேண்டும். அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலக நீதி போன்ற பாடங்கள் இப்படித்தான் புகட்டப்பட்டன.

தரையில் மணலைப் பரப்பி, வலது ஆள்காட்டி விரலால் எழுதி எழுதிப் பழக வேண்டும்.

அம்மன் கோயில் பொட்டல் தென் பகுதியில் தபாலாபீசு. அந்த நாட்களில் (1910) அதன் வாசல் மேற்குப் பக்கமாக இருந்தது. பொட்டல் பக்கம் குட்டைச் சுவர்தான்.

அன்று காலை பள்ளிக்குக் கிளம்பிய காமராஜ் பொட்டல் வந்த போது, ஆப்பம் தின்று தீர்ந்திருந்தது. தபாலாபீசு சுவர்ப் பக்கம் பத்துப் பன்னிரண்டு பேர். சுவரை ஏறிட்டுப் பார்த்தபடி ஒரே கூட்டம்.

காமராஜும் நின்றான். பக்கத்தில் வழக்கமான சிறுவர் பட்டாளம். அதில் ஒருவன் கொட்டை எழுத்துக்களை வாய் விட்டுக் கூட்டினான். 'வ...ந்....தே....'

'திமுதிமு' சப்தம். சுவர் மீது பாய்ச்சல்!

'டர்....டர்....'

சுவரொட்டி கிழிந்தது. எழுத்துக்கள் மறைந்தன.

''ஐயோ, தீக்குச்சி ஆட்கள் (போலீஸ்காரர்கள்)'' என்ற அலறல்! கூட்டம் சிதறியது.

காமராஜ் தனித்து நின்றான்! வாய் முணுமுணுத்தது. 'வந்தே மாதரம்!' என்று.



பள்ளிக்கூட ஆண்டு விழாவில் 'மார்க்கண்டேயன்' நாடகம் நடந்தது. காமராஜுக்கும் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது.

க்ஷத்திரிய வித்யாசாலாவின் பின்புற மைதானத்தில் விழா. ஊர்ப் பிரமுகர்களும், அதிகாரிகளும் கூடியிருந்தார்கள். நாடகம் தொடங்கியது.

'மார்க்கண்டேயன்' சிவபக்தியில் மூழ்கி விட்டான். சிறுவன் அருணாசலத்துக்கு வேடப் பொருத்தம் கனக் கச்சிதம்.

பயங்கரக் கர்ஜனை. எமதர்மன் பாசக் கயிற்றுடன் தோன்றினான். வாட்டசாட்டமான உருவம். பேச்சும் ஆர்ப்பாட்டமும் கூட்டத்தைக் கிடு

கிடுக்க வைத்தன. சரியான 'யமப் பயல்'தான் சிறுவன் நாராயணன்.

பாசக் கயிறு மார்க்கண்டேயனைப் பிணைத்தது. 'சிவ...சிவ' மார்க்கண்டேயன் குரல் ஓங்கியது. சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்தான். எமதர்மன் விட்டு விடுவானா என்ன? கயிற்றைச் சுண்டினான். 'படீர்' என்று லிங்கம் வெடித்தது. காமராஜ் வெளிப்பட்டான்!

நெடிய தோற்றம். நிமிர்ந்த நெற்றி. அனல் கக்கும் விழிகள். ஜடாமுடி. உச்சியில் பிறை. சாம்பல் பூசிய மேனி. புலித்தோல் ஆடை, பாம்பு நெளியும் மார்பு, மணி மாலைகள். சூலாயுதம் ஏந்திய கை. லிங்கம் வெடித்து வெளிப்பட்ட காமராஜ் கோலம் இது. சாட்சாத் சிவபெருமான்தான். தத்ரூப வேடம்!

சூலம் அதிர்ந்தது. குரல் கிடுகிடுத்தது. ''எமதர்மா, மார்க்கண்டேயனை விடு!'' — ஆணையிட்டார் சிவன்.

''மார்க்கண்டேயன் ஆயுள் கணக்கு தீர்ந்தது.'' பாசக் கயிற்றை இறுக்கினான், கடமையில் கண்ணான காலதேவன்.

''என்ன? நான் சொல்றேன் விடுடா!''

''நீர் தந்த வரம் பதினாறு வயது தானே?'' எமன் வாதிட்டான்.

''ஆ! என் பேச்சுக்கு மறுப்பா?'' ஆங்காரம் ஓங்கியது.

உடல் பதறியது. தன் நிலை மறந்தான், சிவவேடம் பூண்ட காமராஜ். லிங்க பீடத்திலிருந்து தாவிக் குதித்தான். ''என்றும் பதினாறு வயதடா!'' — எமனைக் காலால் எட்டி உதைத்தான்.

அட்டை எருமை முறிந்து அடி வயிறு பிளந்தது. குப்புற விழுந்த 'எம' வேட நாராயணன் இடுப்பில் குத்தியது. 'விண் விண்' என்று வலி.

''போடா, எங்கேடா பதினாறு வயசு?'' நாராயணன் ஆத்திரத்தோடு கத்தினான். ''அருணாசலத்துக்கு ஒன்பது வயதுதாண்டா.''

மார்க்கண்டேயன் வேடம் அணிந்த அருணாசலம் பயந்து ஒதுங்கினான்.

சபையில் ஒரே சிரிப்பு! ஆரவாரம்.

முத்துராம்பட்டி சின்கார சோமு செட்டியார் 'சரசர'வென்று திரையை இறக்கினார்.

''மார்க்கண்டேயனுக்குச் சாவே இல்லை. அவனுக்கு என்றும் பதினாறு வயசுதான்; எமன் ஓடி விட்டான்!'' — காமராஜ் குரல் 'கணீர்' என்று ஒலித்தது. திரை விழுந்த வேகத்தையும் முந்திக் கொண்டு விட்டது!

— திரு. மு. நமசிவாயம் எழுதி, தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட 'காமராஜ் வரலாறு' என்னும் நூலிலிருந்து தொகுத்தவர்: பொ. மறைமலை.



* தாவர இனத்திலேயே மிக மிக வேகமாக வளரக் கூடிய மரம் யூகாலிப்ட்ஸ் மரம்.


* உலகில் மிகப் பெரிய நூல்கள் வெளியீட்டு நிறுவனம் லண்டனிலுள்ள சர்வதேசப் பதிப்பகக் கழகமாகும். 15 தினப் பத்திரிகைகள், 229 வார, மாத இதழ்களை வெளியிடுகின்றன. 30,600 தொழிலாளர்கள் இங்கு வேலை செய்கிறார்கள். 1970ல் இந் நிறுவனத்தின் வரவு, செலவு 156,000,000 பவுன்கள்.

* கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் 1846ல் தொடங்கப்பட்டது. அப்போது ஆயிரம் வாழ்த்து அட்டைகள் விற்கப்பட்டன.

தொகுப்பு: எஸ். ஜெயஸ்ரீ (1,254).

கவிதை பிறந்த கதை

தி. பட்சி ராஜன்



பாட்டுக்கு அடியெடுத்துத் தந்தாள் பேத்தி

"கோடை விடுமுறைக்கு ஊர் சென்றிருந்த சமயம். என் தங்கையின் பேத்திக்கு மூன்று வயதிருக்கும். 'துறு துறு'வென்றிருப்பாள். 'வெடுக், வெடுக்'கென்று பேசுவாள். வீட்டு முற்றத்தில் உள்ள தண்ணீர்த் தொட்டி அருகே உட்கார்ந்து எதையோ கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் போய்ப் பார்த்தேன். சாரை சாரையாகச் சிற்றெறும்புக் கூட்டம் நீண்ட மெல்லிய செங்கோடாய்த் தொட்டியைச் சுற்றிச் சுவர் மீது ஊர்ந்து கொண்டிருந்தது. எறும்புக் கோலம் ஓர் அழகுதான்! சட்டென்று என்னை நிமிர்ந்து பார்த்த குழந்தை, சின்னச் சின்ன எறும்பைப் பாரு, என்று ஆச்சரியப்பட்டாள். ஏதோ பாட்டுக்கு அடியெடுத்துக் கொடுத்த மாதிரி தொனித்தது அது."

தனது குழந்தைப் பாடலுக்கு முதலடி பிறந்தது இப்படித்தான் என்றார் கவிஞர் பட்சி ராஜன். குழந்தை கொடுத்த வரியோடு தொடர்ந்த அவரது சொந்தக் கவிதை இதுதான்:

"சின்னச் சின்ன எறும்பைப் பாரு
சேர்ந்து செல்லும் அழகைப் பாரு;
என்ன என்ன அதிசயம் பாரு;
எத்தனை சிறிய உயிர்கள் பாரு!"

இதற்கு மேல் எழுத நினைத்த கவிஞர், 'நாம் எறும்பைப் பார்த்துக் கற்றுக் கொள்வதாகச் சொல்வானேன்? எறும்பே, குழந்தைகளைப் பார்த்து நல்ல புத்திமதி சொல்வதாக அமைத்தால் என்ன?' என்று எண்ணினார். பிறந்தது, 'எறும்பின் பேச்சு' என்கிற கவிதை.

"சின்னத் தம்பித் தங்கையரே,
சிரித்து வாழ வழியொன்று
சொன்னால் கேட்டு நடப்பீரோ?
சுகமே காணப் பெறுவீரோ?

உம்மைப் படைத்த இறைவன்தான்,
உருவில் சிறிய உயிராக
எம்மைப் படைத்து உலவிவிட்டான்;
எறும்பு என்றே பெயருமிட்டான்!"

— இப்படிப் பாடல் தொடர்ந்து சென்று, ஓரிடத்தில், எறும்புகள் —

"வற்றா உழைப்பே குறியாகும்,
வாழ்வின் சிறப்பே பயனாகும்;
ஒற்றுமை ஒன்றே குணமாகும்;
அதுவே எங்கள் பலமாகும்..."

— என்று தங்கள் வாழ்க்கை வெற்றியின் ரகசியத்தையும் சொல்லிக் கொடுக்கின்றனவாம்!

கவிஞர் வெளிநாடு ஒன்றில், தமிழ்ப் பணியாற்றி வந்த காலம்!

அங்குள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கான தமிழ்ப் பாட நூல்களை எழுதுவதில் ஈடுபட்டிருந்தார், அவர். அதற்காகப் பல பள்ளிகளுக்கும் சென்று தமிழாசிரியர்களையும், குழந்தைகளையும் சந்திக்க வேண்டி இருந்தது. அங்கே ஒரு புதுமையான அனுபவத்திற்கு உள்ளானார் இவர்.

'ழ'கரம் தமிழின் சிறப்பெழுத்து அல்லவா? அதை ஆங்கிலத்தில் எழுதிக் காட்ட வேண்டுமானால் 'zh' என எழுதுகிறோம். பழனி என்பதை 'pazhani' என எழுதிக் காட்டுவதுண்டு.

அந்த நாட்டில் 'ழ' கரத்தை 'zh' என்று சிரமப்பட்டு உச்சரித்து வரக் கண்டார் இவர். ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளின் செல்வாக்கால் நேர்ந்தது இது என்பதும் புரிந்தது. 'ழ' கரத்தின் சரியான உச்சரிப்பைப் பயிற்றுவிப்பது எப்படி?

'ழ' கரம் மிகுதியாக வழங்கி வரும்படி குழந்தைப் பாடல் ஒன்றைப் பாட நூலில் இணைப்பது நல்லதெனத் தோன்றியது கவிஞருக்கு. உடனே 'வாசு' பிறந்தான். ஆம், 'வாசு' என்கிற பாடல் பிறந்தது:

"வாழைப் பழத்தைத் தின்று விட்டு
வீதியில் செல்வோர் வழுக்கி விழவே
வாழைப் பழத்தின் தோலை வீசுவான்
வாசு என்னும் சின்னப் பையன்!

வாழைப் பழத்தின் தோலை ஒருநாள்
வழக்கம் போலே வீசியதை மறந்தான்.
வாழைப் பழத்தின் தோலைப் பாரான்;
வீதியில் கைகளை வீசி நடந்தான்!

வாழைப் பழத்தின் தோலில் அவனும்
வழுக்கி விழுந்து உருண்டு போனான்
தாழைப் புதரின் அருகில் கிடந்தான்.
கண்டோர் எல்லாம் சிரித்து
மகிழ்ந்தார்!

பேட்டி: பி. வி. கிரி.



ஐந்து வருடமாகவே இவர் முதல்வர்தான்!

தூத்துக்குடி ஜான்சன் ஆங்கிலப் பள்ளி மாணவி தனுஷ் லட்சுமி. படிப்பது ஐந்தாம் வகுப்புதான். அதற்குள்ளே ஒரு சாதனை. ஒவ்வோர் ஆண்டும் முதல் மாணவியாகவே வந்து இந்த வருடம் பள்ளி முதல்வரிடம் தங்கப் பதக்கம் பரிசு பெற்றிருக்கிறார். இந்தச் சாதனை புரிய இவரால் எப்படி முடிந்தது? இவர் தரும் சில குறிப்புக்கள்:

* தினமும் காலை ஒரு மணி நேரமும் மாலை மூன்று மணி நேரமும் அன்று நடந்த பாடங்களை அன்றே படித்து, அம்மாவிடம் எழுதிக் காட்டுவேன்.

* சினிமா பார்க்க வேண்டும் என்று தியேட்டருக்குச் சென்றது கிடையாது. டி. வி. பார்ப்பதைக் கூடக் கண்டிப்புடன் வைத்துக் கொள்வார்கள் என் பெற்றோர்.

* எங்கள் ஆசிரியர்களின் சுயநலமற்ற தொண்டும், என் அம்மா பள்ளி முதல்வரிடம் என் படிப்பைப் பற்றி விசாரித்து, அதைத் தொடர்ந்து எனக்கு அவ்வப்போது கூறும் அறிவுரைகளைக் கேட்டு, அதன்படி நடப்பதும்தான்! நான் வகுப்பில் சேர்ந்த நாளிலிருந்தே முதல் மாணவியாய் வருவதற்கு முக்கிய காரணம்.

— த. செல்வராசன்.

ஊக்குவிப்பது எப்படி?

அந்த வாரம் கண்ணன் — கமலா தம்பதியினருக்கு மிகவும் மகிழ்ச்சிகரமான வாரம். அவர்களுடைய ஒரே மகன் ராமு ப்ளஸ் டூவில் தேர்ச்சி பெற்றுவிட்டான். அதுமட்டுமல்ல, ஆயிரம் மார்க்குகள் பெற்றுப் புதுக்கோட்டையிலேயே முதல் மாணவன் என்ற சிறப்பையும் அடைந்துவிட்டான். சாதனைதான்!

அப்பாவோ, அம்மாவோ ராமுவுக்குப் பாடம் சொல்லித் தரவில்லை. அப்பாவுக்கு ஆபீஸ் வேலையிலிருந்தும் அம்மா வீட்டு வேலையிலிருந்தும் ஓய்வு கிடைத்தால்தானே ராமுவைக் கவனிக்க முடியும்? மேலும், அவர்கள் விரும்பினாலும் சொல்லித் தர முடியாதபடி பாடங்கள் கடினமாக இருந்தன. வாரா வாரம் டெஸ்ட் வைத்து, கடுமையான ட்ரில் போல் பாடம் நடத்தி, நூறு சதவிகிதம் தேர்ச்சி காட்டும் கான்வென்ட் எதிலும் ராமு படிக்கவில்லை. சராசரியான பள்ளிக்கூடத்தில்தான் படித்தான். இவ்வளவு பாதகமான சூழ்நிலையிலும் ஆயிரம் மார்க்குகள் வாங்கியது ராமுவைப் பொறுத்தமட்டில் இமாலய சாதனைதான்!

தேர்வு முடிவு வெளியான அந்த வாரம் முழுவதும் அப்பாவை ஆபீசிலும் வெளியிலும், அம்மாவைக் கோவிலிலும் மார்க்கெட்டிலும் தெரிந்தவர்கள் எல்லாம் பாராட்டினார்கள். சந்திப்போரெல்லாம் ஸ்வீட் கேட்டார்கள்.

அடுத்த கட்டமாக உறவினர்களுக்கெல்லாம் ராமுவின் சாதனை பற்றிக் கடிதங்கள் விரைந்தன. பல உறவினர்கள் கண்டு கொள்ளாமலேயே இருந்து விட்டனர். சம்பிரதாயமாக, 'வாழ்த்துக்கள். மகிழ்ச்சியடைகிறோம். எதிர்காலத்திலும் இது போன்ற சிறப்புப் பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்' என்று பதில் எழுதிக் கடமையை முடித்துக் கொண்டனர்.

ராமுவுக்கு ஏமாற்றம்தான். வார்த்தைகளால் அங்கீகரிக்கப்படுவதைவிடப் பரிசுகள் மூலம் பாராட்டப்படுவதைத்தானே வளர்கின்ற பருவத்தில் மனம் விரும்பும்? சரி, உறவினர்களுக்குத்தான் மனப்பக்குவம்போதாது என்று வைத்துக் கொண்டால் இந்த அப்பாவும் அம்மாவும் கூட எதுவும் வாங்கித் தரவில்லையே என்று ராமு யோசிக்க ஆரம்பித்தான்.

ஒருநாள் அப்பா — அம்மா இருவர் எதிரிலும் ராமு கேட்டேவிட்டான்: "அப்பா, ஆயிரம் மார்க் எடுத்ததற்கு எனக்குப் பரிசு எதுவும் கிடையாதா? அம்மா, நீயும் எதுவும் வாங்கித் தரவில்லையேம்மா."

இருவரும் திடுக்கிட்டனர். பிறகு சமாளித்துக் கொண்டு அப்பா சொன்னார்: "ராமு, நீ என்ன வெளியாளா

என். ஸ்ரீதரன்



பரிசு கொடுப்பதற்கு? எல்லாமே
உன்னுடையவைதானே? படிப்புச்
செலவு எல்லாம் நான்தானே செய்கி
றேன்? சமீபத்தில்தானே உனக்கு
ஒரு சைக்கிளும் கடிகாரமும் வாங்கிக்
கொடுத்தேன்? ஆனால் உன்னோட
மாமா ஏதாவது பரிசு அனுப்பி
னாரா? அவருக்கு உன் மேல்
ரொம்பப் பிரியம்னு அடிக்கடி சொல்
வாயே! அவருடைய பிரியம் பதி
னைஞ்சு பைசா கார்டோடு முடிஞ்சு
போச்சு, பார்த்தியா? எங்க அண்
ணன் லட்சாதிபதின்னு உங்கம்மா
பெருமை அடிச்சிப்பாளே, மகா
கஞ்சன்னு தெரிஞ்சு போச்சே!
இப்போ உங்க அம்மா என்ன
சொல்றா?''

ராமுவின் அம்மாவுக்குச் சுருக்
கென்றது. அவள் கேட்டாள்: "ராமு,
உன்னோட அத்தையும், எந்தப் பரிசும்
அனுப்பலையேன்னு உங்க அப்பா
வுக்குக் கொஞ்சம் ஞாபகப்படுத்து.
அத்தைக்கு உன் மேல் ரொம்ப
ஆசைன்னு சொல்லுவியே! சாயம்
வெளுத்துப் போச்சு பார்த்தியா?
எங்க அண்ணனாவது கார்டிலே
ஆசீர்வாதம்னு எழுதி அனுப்பிச்
சார். ஆனால் உன்னோட அத்தை
பதினைஞ்சு காசு கூடச் செலவு
செய்ய இஷ்டப்படாத அளவுக்கு
வடிகட்டின கஞ்சப் பேர்வழி. அது
போகட்டும், மாமா பரிசு அனுப்
பாட்டா என்ன? எந்தப் பரிசா இருந்
தாலும் என்னிக்காவது ஒரு நாள்
கரைஞ்சோ, தொலைஞ்சோ
போகும். ஆசீர்வாத வார்த்தைகள்
தான் பெரிய பரிசு. அவையெல்லாம்
நம்மைக் கவசம் மாதிரிக் காப்பாத்
தும். நாம ஏதாவது பாவம் செஞ்சிருந்
தாலும் அதோட பாரத்தைக் குறைச்
சிடும்.''


அப்பா விடவில்லை: "இருக்க
லாம். அதோட, பரிசும் ஏதாவது
அனுப்பியிருந்தா குறைஞ்சா போயிடு
வார்? ஒரு நல்ல வேலையில இருந்து
கிட்டு, கையில சொத்தும் சேகரிச்சப்
புறம் ராமுவுக்கு மாமன்கிற முறையில
அட்லீஸ்ட் அவர் நூறு ரூபாயாவது
அனுப்பி வச்சிருந்தா குறைஞ்சா
போயிருக்கும்கிறதுதான் என்னோட
பாயிண்ட்.''

அம்மா விட்டுக் கொடுக்கவில்லை.
"எங்க அண்ணன் பணம் அனுப்:
பணும்னுதான் நினைச்சிருப்பாரு.
ஆனா உங்க தங்கச்சிதான் வீணா
எதுக்குச் செலவு பண்றீங்கன்னு
தடுத்திருப்பா.''

அப்பா சொன்னார்: "அவள்
ஒண்ணும் தடுத்திருக்க மாட்டா.
அவள் பணம் அனுப்பவும் சொல்லி
யிருப்பா. உங்க அண்ணன்தான்
வேண்டாம்னு நினைச்சிருப்பாரு.
ஆம்பிளைதானே, அவர் இஷ்டப்பட்
டிருந்தா தன்னோட ஆபீஸ் விலாசத்
திலேருந்து என் தங்கைக்குத் தெரி
யாம அவர் மணியார்டர் செஞ்சிருக்க
முடியாதா?''

அம்மாவிடம் பதில் தயாராக
இருந்தது. "ஏன், உங்க தங்கச்சியும்
தானே ஆபீஸ்லே வேலை பார்க்கிறா?
அவளுக்குப் பாசமிருந்தா தன்னோட
ஆபீஸ் விலாசத்தைக் கொடுத்து
எங்க அண்ணனுக்குத் தெரியாம
மணியார்டர் அனுப்பியிருக்க முடி
யாதா?''

அப்பா தோல்வியை ஒப்புக் கொள்
ளத் தயாராக இல்லை. "உங்க அண்



ணன் கஞ்சம். உங்க அப்பாவும் அம்மாவும் கஞ்சம்,'' என்று சீறினார்.

உடனே, ''உங்க தங்கைதான் கஞ்சம். உங்க அப்பா, அம்மா, தாத்தா, பாட்டியும்கூடக் கஞ்சமகாப் பிரபுக்கள்,'' என்றாள் அம்மா.

மாறி மாறி அவர்களது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த ராமுவிற்குப் பயமாகிவிட்டது. அவர்களது விவாதம் ஏதாவது விபரீதத்தில் போய் முடியுமோ என்ற கவலை உண்டாகியது. ஆகவே, அவன் அவர்களது பேச்சில் குறுக்கிட்டான்: ''அப்பா, அம்மா! ஏன் இப்படிச் சண்டைபோடறீங்க? அப்பா, மாமி உங்களுக்குத் தங்கை. அதனால உங்களுக்கு அவங்க மேலே அதிகப் பிரியம். அம்மா, மாமா உங்களுக்கு அண்ணன். அதனால் உங்களுக்கு அவங்க மேலே அதிகப் பாசம். எனக்கு அப்படியில்லை. மாமா, மாமி ரெண்டு பேரும் சமம்தான். அவங்க ரெண்டு பேருமே ஒரே மாதிரித் தப்பைத்தான் செஞ்சிருக்காங்க. அவங்க பரிசு அனுப்பலையேன்னு நானே கோபப்படலை. நீங்க ரெண்டு பேரும் ஏன் அடிச்சிக்கிறீங்க?''

கண்ணனும் கமலாவும் வாயடைத்துப் போய்விட்டனர். கண்ணன் ஆபீசுக்குக் கிளம்பிவிட்டார். அம்மா சமையலறைக்குள் சென்றுவிட்டாள். சிறிது நேரம் கழித்து ராமு நண்பர்களுடன் விளையாட வெளியே சென்றுவிட்டான்.

கண்ணனுக்கு ஆபீசில் வேலை ஓடவில்லை. தன் தங்கை ராமுவுக்குப் பரிசு அனுப்பாதது தவறுதான் என்று அவரது மனம் ஒப்புக் கொண்டது. ஆனால் அதை மனைவி சுட்டிக் காட்டியபோது ரோஷம் ஏற்படத்தான் செய்தது. என்ன செய்யலாம் என்று அவர் தீவிரமாக யோசித்துப் பார்த்தபோது மனைவி குறிப்பிட்ட ஆபீஸ் விலாசம் என்ற சொல் ஞாபகத்துக்கு வந்தது. அவர் முகம் பிரகாசமடைந்தது.

கமலாவால் சமையலில் கவனம் செலுத்த முடியவில்லை. தன் அண்ணன் ராமுவுக்குப் பரிசு அனுப்பவில்லையே என்று அவளுக்கு உள்

ளூர வருத்தம்தான். ஆனால் அண்ணனைத் தன் கணவர் கஞ்சன் என்று மட்டம் தட்டியது அவள் மனத்தைப் புண்படுத்தியது. அண்ணனுடைய கௌரவத்தைக் காப்பாற்ற என்ன செய்யலாம் என்று அவள் யோசித்த போது கணவர் கூறிய ஆபீஸ் விலாசம் என்ற சொல் ஞாபகம் வந்தது. அவள் முகம் தெளிவடைந்தது.

ராமுவாலும் நிம்மதியாக விளையாட முடியவில்லை. நண்பர்களிடமிருந்து விலகிச் சென்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு அப்பா—அம்மா தகராறைத் தீர்க்க என்ன வழி என்று யோசித்தான். அதற்கு ஒரு திட்டமும் மனத்தில் உதித்தது. அதைச் செயல்படுத்த ராமு உடனே கிளம்பினான்.

அன்று புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு அனுப்பப்பட்ட தபாலில் மூன்று கடிதங்கள் கூடுதலாக இருந்தன. முதல் கடிதத்தின் சுருக்கம்:

'அன்புள்ள அண்ணாவிற்கு, நமஸ்காரம். ராமு பாஸ் செய்ததற்கு நீ எதுவும் பரிசு அனுப்பவில்லை என்று இவருக்குக் கோபம். என்னை மட்டமாகப் பேசினார். நீ கஞ்சனாம். நம் அப்பாவும், அம்மாவும் கஞ்சர்களாம். நீ ராமுவின் மீது காட்டும் பிரியம் போலியாம். இன்று எங்களுக்குள் பலத்த சண்டை. எனக்கு மனம் புண்ணாகி விட்டது. ஆகவே, உன் அன்புத் தங்கையின் கௌரவத்தை உத்தேசித்தும், நம் குடும்பப் பெயரைக் காப்பாற்றவும் உடனே ராமு பெயருக்கு நூறு ரூபாய் மணியார்டர் செய்தால் புண்ணியமாக இருக்கும். உன் மனைவிக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால் பாதிப் பெருமை அவளுக்குப் போய் விடும். அல்லது பணம் அனுப்ப வேண்டாம் என்று அவள் தடுக்கக் கூடும். ஆகவேதான் உன் ஆபீஸ் அட்ரசுக்கே கடிதம் எழுதுகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புத் தங்கை கமலா.

கடிதத்தைப் படித்ததும் கமலாவின் அண்ணன் செந்தில்நாதனுக்குப் படபடப்பு ஏற்பட்டது. மேலதிகாரியிடம் அனுமதி பெற்று உடனே போஸ்ட் ஆபீஸ் சென்றார். ராமு பெயருக்கு நூறு ரூபாய் மணியார்டர் செய்த பிறகுதான் அவர் மனம் அமைதி அடைந்தது.



கப்சிப்

அதே சமயம் அவரது மனைவி கல்யாணி தனது அலுவலகத்தில் புதுக்கோட்டையிலிருந்து வந்த கடிதம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தாள். அதன் சுருக்கம்:

'அன்புத் தங்கைக்கு அநேக ஆசிகள். ராமு பாஸ் செய்ததற்கு நீ எதுவும் பரிசு அனுப்பவில்லை என்று கமலா கோபமாக இருக்கிறாள். உன்னைப் பற்றி மட்டமாகப் பேசினாள். நீ கஞ்சப்பேர்வழியாம். நம் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோருமே கஞ்சர்களாம். நீ ராமு மீது பொய்ப் பாசம் காட்டுகிறாயாம். இன்று மாலை எங்களுக்குள் பலத்த சண்டை. எனக்கு மனசு ரொம்பவும் கசந்து போய்விட்டது. ஆகவே, என் கௌரவத்தை உத்தேசித்தும், நம்முடைய குலப் பெயரைக் காப்பாற்றவும் உடனே ராமு பெயருக்கு நூறு ரூபாய் மணியார்டர் செய்தால் மிகவும் மகிழ்வேன். நீ வேலையில் இருப்பதால் இது உன்னால் முடியும் என்று நம்புகிறேன். இந்த விஷயம் உன் கணவருக்குத் தெரியாமலிருப்பது நல்லது. தெரிந்தால் கமலா தன் அண்ணன் சொல்லித்தான் நீ அனுப்பினாய் என்று பெருமையடித்துக் கொள்வாள். அல்லது உன் கணவர் பணம் அனுப்பக்கூடாது என்று தடுத்தால் என்ன செய்வது? ஆகவேதான் உன் ஆபீஸ் அட்ரசுக்குக் கடிதம் போட்டுள்ளேன். ஆபீசிலிருந்தே மணியார்டர் செய்துவிடு.

இப்படிக்கு,
கண்ணன்.'

கடிதத்தைப் படித்து முடித்ததும் கல்யாணிக்கு ரோஷம் பீறிட்டது. அவள் உடனே ஒரு பியூனைக் கூப்பிட்டு மணியார்டர் பாரம் வாங்கி வரச் சொன்னாள். அதை உடனே நிரப்பி, பியூனை மறுபடியும் போஸ்.



டாபீசுக்கு அனுப்பி, ராமு பெயருக்கு நூறு ரூபாய் மணியார்டர் செய்த பிறகு தான் அவளால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.

அன்று பிற்பகல் இடைவேளையில் செந்தில்நாதன் வழக்கம் போல் ஸ்கூட்டரில் கல்யாணியின் ஆபீசுக்குச் சென்று அவளை அழைத்துக் கொண்டு மதிய உணவிற்காகத் தன் ஃப்ளாட்டுக்குத் திரும்பினார். வீட்டுக்குள் நுழைந்ததும் கண்ணில் பட்டது புதுக்கோட்டையிலிருந்து புறப்பட்ட மூன்றாவது கடிதம். கணவன், மனைவி இருவரும் பரபரப்புடன் சேர்ந்து படித்தனர்:

அன்புள்ள மாமா, மாமிக்கு, ராமு அநேக நமஸ்காரங்கள். நான் என்ஜினியரிங்கில் சேர்வதற்கு விண்ணப்பம் போட்டிருக்கிறேன். நான் ப்ளஸ் டூவில் நிறைய மார்க்குகள் வாங்கியதற்கு மாமா பரிசு எதுவும் அனுப்பவில்லை என்று அப்பாவுக்குக் கோபம். அதே மாதிரி மாமி பரிசு அனுப்பவில்லை என்று அம்மாவுக்குக் கோபம். அதனால் அவர்கள் இரண்டு பேருக்கும் இடையே பலத்த சண்டை வந்துவிட்டது. நான் ரொம்பப் பயந்து போய் விட்டேன். அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டதால் எனக்கு வருத்தமாக உள்ளது.

எனக்கு நீங்கள் இரண்டு பேருமே சமம்தான். இரண்டு பேருமே வேலை பார்ப்பதால், உங்களால் முடிந்தால், ஆளுக்கு ஐம்பது ரூபாய் போட்டு, மொத்தமாக நூறு ரூபாய் என் பெயருக்கு மணியார்டர் செய்தால் ரொம்ப சந்தோஷமாய் இருக்கும். உங்களுடைய கௌரவமும் காப்பாற்றப்படும். அப்பா — அம்மா சண்டையும் நின்றுபோய்விடும். நான் கடிதம் போட்டது தெரிய வேண்டாம். யாரும் தூண்டாமல் நீங்களாகவே அனுப்புவது போல் மணியார்டர் செய்தால் தான் பெருமை.

இப்படிக்கு,
பணிவுடன், ராமு.''

''நீங்க கஞ்சம்னு எல்லோருக்கும் ஏற்கெனவே தெரியும். கல்யாணமாகி இத்தனை வருஷங்களில் எத்தனை பட்டுப்புடைவை, என்னென்ன நகை வாங்கிக் கொடுத்திருக்கீங்கன்னு சொல்லுங்க, பார்க்கலாம். அப்படியிருந்தும், உங்கள் தங்கை என்னைப் போய்க் கருமின்னு நினைக்கிறாப்பல இருக்கு. ராமுவோட கடிதம் அதைத்தான் சொல்லுது,'' என்று பதிலளித்தாள் கல்யாணி.

''நீதான் சுயமாச் சம்பாதிக்கிறியே! உனக்கு எதுக்கு ஒருவர் எதுவும் வாங்கிக் கொடுக்கணும்? அது போகட்டும், உன் சம்பளத்திலேந்து எனக்கு எப்பவாவது சட்டைத் துணி வாங்கிக் கொடுத்திருக்கியா?'' என்றார் செந்தில்நாதன்.

''சரி விடுங்க. அவங்க இரண்டு பேரும் சண்டை போட்டுக்கிறதைப் பற்றிக் கேள்விப்பட்டதும் நாம ரெண்டு பேரும் சண்டை போட ஆரம்பிச்சிட்டோமே! ராமுவுக்குப் பதினேழு வயசுதானே இருக்கும்? எனக்கு ஏன் பரிசு அனுப்பலைன்னு நம்ப மேலே குற்றம் சாட்டுவதற்குப் பதிலா, அவனோட அப்பா — அம்மா சமாதானமா இருக்கணும்; நம்ப கௌரவம் குறையக்கூடாதுன்னு எவ்வளவு அக்கறையா எழுதியிருக்கான்! இந்தாங்க ஐம்பது ரூபாய். உங்க பணத்திலேந்து ஐம்பது ரூபாய் சேர்த்து நூறு ரூபாய்க்கு ராமு பெயருக்கு உடனே மணியார்டர் அனுப்பிச்சிடுங்க,'' என்று முடிவு கூறினாள் கல்யாணி.

அன்று இரவு சென்னையிலிருந்து புதுக்கோட்டைக்குச் சென்ற தபாலில் மூன்று மணியார்டர்கள் கூடுதலாக இருந்தன! அவற்றைப் புதுக்கோட்டையில் பெற்றுக் கொண்ட ராமுவிற்கும், அவனுடைய அப்பா, அம்மாவிற்கும் ஒன்று எப்படி மூன்றாயிற்று என்று புரியவே இல்லை!

8 வயதில் கம்ப்யூட்டர் லட்சுமி



அறிவியல் உலகின் அற்புதம் என்றழைக்கப்படும் கணிப் பொறியை (கம்ப்யூட்டர்) மிக நன்கு படித்தவர்களும், விவரம் தெரிந்தவர்களும்தான் கையாள முடியும் என்பதைப் பொய்யாக்கிக் காட்டியிருக்கிறாள் — திருச்சி கைலாசபுரம் ஆர்.எஸ்.கே. மேல்நிலைப் பள்ளியில், நான்காவது வகுப்பில் இந்த ஆண்டு அடியெடுத்து வைக்கும் எஸ். பி. லட்சுமி என்ற 8 வயது சிறுமி. அவளது பாட்டி திருமதி. காவேரி சபாரத்தினம் அவர்களது இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவளிடம் உரையாடியதிலிருந்து —

சென்னை விருகம்பாக்கத்திலுள்ள பாலலோக் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் முதல் வகுப்பு படித்துக் கொண்டிருந்த சமயம், சென்னையில் நடைபெற்ற கம்ப்யூட்டர் கண்காட்சி ஒன்றுக்குத் தனது பாட்டியுடன் சென்று வந்ததிலிருந்துதான் தனக்கு கம்ப்யூட்டர் மீது இவ்வளவு ஈடுபாடு ஏற்பட்டதாகத் தெரிவித்தாள்.

இரண்டாவது வகுப்பினையும் அதே பள்ளியில் முடித்து விட்டு, மூன்றாம் வகுப்பிற்காக, திருச்சி ஆர். எஸ். கே. மேல்நிலைப் பள்ளியில் அட்மிஷனுக்காக சென்ற சமயம், இச் சிறுமியின் சுறுசுறுப்பினையும் தங்கு தடையற்ற பேச்சாற்றலையும் கண்டு, உடனடியாக இடம் கொடுத்ததாக கூறினார் சிறுமியின் பாட்டி காவேரி சபாரத்தினம்.


சிறுமியைத் திருச்சியில் படிக்க வைப்பதற்காக அழைத்து வந்ததற்கு மற்றுமொரு முக்கிய காரணம் உண்டு. லட்சுமியின் மாமா (அம்மாவின் சகோதரர்) ரமேஷ் லான் (LAN) கம்ப்யூட்டர்ஸ் என்ற நிறுவனத்தைத் திருச்சியில் நடத்தி வருவதேயாகும்.

மாமாவின் லான் கம்ப்யூட்டர் சென்டர், சிறுமி லட்சுமியின் கம்ப்யூட்டர் கனவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக நனவாக்கத் தொடங்கி இருக்கிறது.

லான் கம்ப்யூட்டர் சென்டரில் இன்ஸ்டிரக்டராக இருக்கும் செல்வி. உமாதான் சிறுமி லட்சுமியின் கம்ப்யூட்டர் குருவாம். சிறுமி லட்சுமியின் கம்ப்யூட்டர் ஈடுபாடு பற்றி உமாவிடம் கேட்ட போது, அவர் சொன்னார்: "கம்ப்யூட்டரைப் பொறுத்த வரையில் ஆரம்பக் கட்டத்தில் வேர்டு ஸ்டார் (WORD STAR) பேஸிக் (BASIC) டி—பேஸ் (D—BASE) மற்றும் கோபல் (GOBAL) என்ற நான்கு பிரிவுப் பாடங்கள் உண்டு. இந்த நான்கு பிரிவு பாடங்களில் வேர்டு ஸ்டார் என்பது கம்ப்யூட்டரை எப்படி இயக்குவது என்ற ஆரம்ப பாடத்தினை உள்ளடக்கியது. சிறுமி லட்சுமியின் ஆர்வ மிகுதியினால், வேர்டு ஸ்டார் என்ற இந்த ஆரம்பப் பாடத்தினை ஒரு வார காலத்திற்குள் முழுதும் கற்றுக் கொண்டு, தனக்கும், தனது வகுப்புத் தோழிகளுக்கும் தேவையான ஸ்கூல் டைம் டேபிள்களைக் கம்ப்யூட்டரின் துணையுடன் வெகு நேர்த்தியாகத் தயாரித்து எங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டாள் லட்சுமி.


எதிலும் வேகம், விறுவிறுப்பு, சோர்வற்ற சுறுசுறுப்பு இதற்குச் சரியாக ஈடு கொடுத்து நவீன யுகத்தை ஒளிமயமாக்குவதிலும் வெற்றிப் பாதையில் ஈடுபடுத்துவதிலும் விஞ்ஞானம் பெரும் பங்கு வகிக்கிறது. இதில் தலையாய இடத்தினைப் பிடித்துள்ளதுதான் கம்ப்யூட்டர். அதனால்தான் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி கூடக் கம்ப்யூட்டர் போன்ற நவீன யுக்திகள் சாதாரண மனிதனைச் சென்றடைவதில்தான் சுதந்திர இந்தியாவின் வெற்றி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

— இரா. வளையாபதி.
தோட்டக்குறிச்சி.




அனலாசுரனை விழுங்கிய விநாயகர்!

கதை: ஆனந்தி படம்: வினு




அசுரன் பலி, பல ஆண்டுகள் தவம் இருந்தான்.
உன் தவத்தை மெச்சினேன்...
முதல்வனே! வணங்குகிறேன். இந்திரன் முதலான தேவர்கள் எனக்குப் பணிபுரியுமாறு வரம் அருளுங்கள்...
அப்படியே நடக்கும். உனக்கு மூன்று கோட்டைகளைத் தருகிறேன். சிவபெருமானைத் தவிர வேறு யாரும் உன்னை ஜெயிக்க முடியாது!
பலி, பூவுலகம், பாதாள லோகம் இரண்டையும் வென்று, தேவலோகம் சென்றான்.
தேவர்கள் எதிர்த்துப் போரிட்டனர்...


இந்திரனைத் தள்ளிவிட்டு ஐராவதத்தின் மேல் ஏறினான் பலி.
ஓடுங்கள்!
தப்பிப் பிழைக்கப் பாருங்கள்!
மூவுலகங்களை வென்றேன்! இனி சத்ய லோகமும் வைகுண்டமும் பாக்கி! ஹா... ஹா... ஹா.
சத்ய லோகத்தில் பிரும்மா...
பலி வருகிறான்! நான் கைலாசம் போய் விடுகிறேன்!
வைகுந்தத்தில் நாராயணனும் கலங்கினார்...
கைலாயத்தில் சிவபெருமானைத் தஞ்சமடைவதே வழி!
மூன்று உலகங்களும் சத்யலோகமும் வைகுண்டமும் பலியின் வசமாயின.
தெய்வங்களே என்னைக் கண்டு அஞ்சுகின்றனர்! ஹ்ம்!



பலி விநாயகரைத் துதித்தான்...
முழுமுதற் கடவுளே! முப்புரங்களையும் இப்போது கிடைக்கச் செய்ய வேண்டும்.
விநாயகர் வரமளித்தபடி மூன்று கோட்டைகளை வழங்கினார்.
செப்பு, வெள்ளி, தங்கத்தாலான பறக்கும் கோட்டைகள்!
முப்புரங்களைப் பெற்ற பலிக்குத் திரிபுரன் என்ற பெயர் ஏற்பட்டது.
மகனே! வஜ்ரதம்ஷ்ட்ரா! நீ பொன் கோட்டையில் வாழ்வாயாக!
மற்ற இரு பிள்ளைகளையும் அழைத்தான் பலி...
பீமகாயா! உனக்கு வெள்ளிக் கோட்டை! காளகூடா! நீ செப்புக் கோட்டையை எடுத்துக் கொள்!
மூன்று பேரும் தங்கள் கோட்டைகளில் இருந்தபடி அண்டங்களினிடையே சஞ்சரித்தார்கள்!




பலியின் புதல்வர்கள் திடீரென்று ஏதாவது ஓர் இடத்தில் இறங்குவார்கள்...
வெள்ளிக் கோட்டை வந்து விட்டது... ஓடுங்கள்!
... அந்த இடத்தில் சகல ஜீவராசிகளையும் அழித்து விடுவார்கள்...
ஆ! செத்தேன்!
ஐயோ!
ஹஹ ஹஹ்ஹ ஹஹஹா!
பலி, சத்திய லோகத்தையும் வைகுண்டத்தையும் ஆளத் தன் பிரதிநிதிகளை நியமித்தான்...
சண்டா! உனக்கு பிரம்மாவின் சத்யலோகம்!
பிரசண்டா! நீ நாராயணனின் வைகுண்டத்திலிருந்து ஆட்சி நடத்து!
கைலாச பர்வதத்தில்... நாரதர்....
என்ன இது? பிரும்மா, விஷ்ணு, இந்திரன் எல்லோருமாகச் சேர்ந்து எங்கே வந்தீர்கள்? என்ன விஷயம்?




நாரதரே! ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கிறீரே! பலி, எங்கள் லோகங்களை யெல்லாம் கவர்ந்து கொண்டு......
ஓ! அதைச் சொல்கிறீர்களா? பலி, விநாயகரை வழிபட்டு அளவற்ற பலம் பெற்று விட்டான். வாருங்கள், கணேசரைப் பூஜிப்போம்!
எல்லோரும் விநாயகரை வணங்கித் துதிக்க...
பயப்பட வேண்டாம்! பலி, தன் அகம்பாவத்தினால் அழியும் காலம் வந்து விட்டது. சிவபெருமானைச் சரணடையுங்கள்.
விநாயகர் ஓர் அந்தணரைப் போல் பலியிடம் சென்றார்...
வரவேணும்! என்னால் ஆகக் கூடியது என்ன? தெரிவிக்க வேணும்.
உன்னால் ஆகக் கூடியதை நீ செய்து விடுவாய் என்பது எனக்குத் தெரியும்...
என்ன 'பொடி' வைத்துப் பேசுகிறீர்கள்...?




அரசனே! என் பெயர் கலாதரன். உலகம் முழுவதும் சுற்றி வந்தேன். எங்கு போனாலும் உன் புகழ்தான் .... ஆனால் ......
ஆனால் என்ன? என்னால் ஆகாதது ஒன்றுமில்லை. ...
உன்னால் முடியாத காரியத்தைச் சொல்லலாமா என்று தயங்குகிறேன்...
சத்யலோகமும் வைகுண்டமும் கூட என் வசம் உள்ளன. என்ன வேண்டும்? சொல்லுங்கள்!
சரி, கேட்டுவிடுகிறேன். கைலாசத்தில் பார்வதியும் ஈசுவரனும் சிந்தாமணி விநாயகர் என்ற மூர்த்தியைத் தினம் பூஜித்து வருகிறார்கள். அந்த மூர்த்தியை நானும் பூஜிக்க வேண்டும் என்று ஆசை....
பூ! இவ்வளவுதானே! கிடைத்ததாகவே வைத்துக் கொள்ளுங்கள்!



இதற்கிடையில் கைலாசத்தில்...
ஈசனே! எங்கள் துயர் தீராதா?
கவலை வேண்டாம். நான் போரிடுவதற்கான ஆயுதங்களைச் செய்யுங்கள்!
தேவர்கள் மகிழ்ந்து...
ஒரு தேர் உருவாக்குவோம். சூரிய சந்திரர்கள் சக்கரங்கள் ஆவார்கள்; பூவுலகமே தேர்த்தட்டாகும்; வேதங்கள் நான்கு குதிரைகளாகும், மலைகள் தூண்களாகும்; சாஸ்திரங்கள் மணிவடங்களாகும்: நான் சாரதி ஆவேன்...
அவ்வாறே ஓர் அற்புதமான தேர் உருவாயிற்று.....
ஆகா! மகிழ்ந்தேன்.
மேரு மலை வில்லாகிச் சிவபெருமான் கரத்தை அலங்கரிக்க, விஷ்ணு...
நான் அம்பாகி விடுகிறேன்.


அடடா! இத்தனை பேரும் எனக்கு உதவி செய்கிறீர்களோ, நன்றி!
திரிபுரன் அனுப்பிய தூதர்கள் சிவபெருமானிடம் வந்தனர்...
அசுரஇந்திரனான பலியின் தூதர்கள் நாங்கள். உங்களிடம் உள்ள சிந்தாமணி விநாயக மூர்த்தியை வாங்கி வரும்படி ஆணை!
பலிக்கு அழிவுக்காலம் வந்துவிட்டது என்றுபோய்ச் சொல்லுங்கள்!
போர் மூண்டது. திரிபுரன் தனது மூன்று கோட்டைகளுடன் வந்து...
தேவர் படைகள் மீது இறங்கினான்.
...
ஐயோ! நசுங்கினேன்!
ஆ! ஐக்! ஐக்!
சண்டனும் பிரசண்டனும் மாய வடிவங்கள் எடுத்துத் தேவர்களுடன் போரிட்டனர்!
ஐயோ! பிசாசு!


திரிபுரனும் சிவபெருமானும் சளைக்காமல் போரிட்டனர்...
இந்திரன் பார்வதியிடம்...
தேவி! ஈசன் ஏன் தாமதம் செய்கிறார்? தேவர்கள் களைத்துப் போய் விட்டார்கள்....
பார்வதி, கணவனின் இதயத்தில் தோன்றி...
சுவாமி! திரிபுரனின் பராக்கிரமம் அனைவருக்கும் தெரிய வேண்டும் என்ற நோக்கில் இதுவரை போர் புரிந்தீர்கள். இனியும் தாமதம் வேண்டாம்...
யாரும் அஞ்ச வேண்டாம்! பலியின் முடிவு நெருங்கி விட்டது!
சிவபெருமானின் இந்தச் சொற்களைக் கேட்டதும் பிரும்மா...
ஆ! நான் சாரத்தியம் செய்வதால் தானே ஈசனால் தீரத்துடன் போர் புரிய முடிகிறது!



வாசுகி பாம்பின் எண்ணம்...
மேரு மலை வில்லாக வளைந்திருக்கலாம். ஆனால் என்னை நாணாகப் பூட்டி பிராணிடில் ஈசனால் அம்பு எய்ய முடியுமா?
விஷ்ணு நினைத்தார்....
நான் பாணமாக அமைந்தது நல்லதாயிற்று... இல்லையெனில் திரிபுரனை அழிக்கவே முடியாமல் போகும்!
சூரிய சந்திரர்களும் கர்வ மடைந்தனர்...
நாம் சக்கர மாக இருப்பதால் தானே பிரும்மாவினால் தேரை நன்றாகச் செலுத்த முடிகிறது!
எல்லோரது எண்ணங்களையும் உணர்ந்த சிவபெருமான்...
வில்லையும் அம்பையும் தேர்த்தட்டில் வைத்து விட்டுக் கீழே இறங்கிக் கொள்கிறேன்...
என்னமோ ஏதோ என்று தேவர்கள் கவலையுற்றனர்....
அடடா!
ஏன் இப்படி?
ஆ!



சிவபெருமான் இடுப்பில் கரம் பதித்துச் சிரித்தார்.
அந்தச் சிரிப்பிலிருந்து எழுந்த அக்னி ஜுவாலையில் திரிபுரனும் திரிபுரங்களும் அசுர சேனையும் சாம்பல் குவியலாயின...
தேவர்கள் கர்வம் நீங்கி, சிவபெருமானை வணங்கித் துதித்தனர்.
எங்களை மன்னியுங்கள்.
திரிபுரங்கள் எரிந்ததால் உருவான சாம்பல் குவியல் மீது ஈசன் நடனமாடினார். அது 'கொடுகொட்டி' என்று பெயர் பெற்றது.




விநாயகரின் மகிமை பற்றி இன்னொரு கதை...
..கவுண்டின்யர் என்ற ரிஷி...
குளித்து முடித்து ஆசிரமம் திரும்பும் போது...
அருமையான அறுகம் புல்...
ரிஷி பத்தினி கேட்டாள்...
சுவாமி! எத்தனையோ மலர்கள் இருக்க, அருகம் புல்லைக் கிள்ளி வருகிறீர்களே...
நான் பூஜிக்கும் விநாயகக் கடவுளுக்கு அறுகம்புல்தான் உகந்தது..!
அது எப்படி?
கவுண்டின்யர் விளக்கினார்...
எமதர்மராஜனுக்கு அனலாசுரன் என்று ஒரு மகன்... அவனைக் கண்டு எமனே பயந்தான்!


அந்தப்புரம் சென்று, கதவைச் சாத்திக் கொண்டான்.....
எமனே! என்னிடம் பயமா? ஹ.. ஹ... ஹா!
கர்வம் மேலிட்ட அனலாசுரன் தேவர்களைத் துன்புறுத்தினான்...
ஆ!
ஐயோ!
விட்டுவிடு!
தேவர்கள் நாராயணனிடம் சென்று..
சுவாமி! எங்களைக் காப்பாற்றுங்கள்!
அனலாசுரனை வெல்லக் கூடியவர் கணநாதர் ஒருவரே!
தேவர்கள் கணபதியைப் பூஜித்தனர்...
ஓம் விக்நராஜாய நம: ஓம் விநாயகாய நம:.....
விநாயகர் தியானம் நீங்கி...
பயப்பட வேண்டாம்! அனலாசுரனை அழிப்பேன்!


அப்போது அனலா சுரன் அங்கு வந்தான்...
தேவலோகமெல்லாம் தேடினேன்... யாரையும் காணோம்....
ஓ! எல்லோருமாகச் சேர்ந்து வந்து இங்கே ஒளிந்திருக்கிறீர்களா... ரொம்ப நல்லதாயிற்று... அனைவரையும் ஓரே சமயத்தில் அழிப்பேன்...
விநாயகர் சிரிக்க...
யாரடாவன், யானை மூஞ்சி! சிரிக்கத் துணிந்தவன்!
அனலாசுரனே! நீ எத்தனையோ லோகங்களைச் சுற்றி வந்திருக்கிறாய்... என் வயிற்றில் இன்னும் அநேக உலகங்கள் உள்ளன....
அனலாசுரனை வாயில் போட்டு விழுங்கி விட்டார் விநாயகர்!
அவர்களையும் பார்!



சகல உலகங்களும் உஷ்ணத்தைத் தாங்க முடியாமல் தவித்தன..
பச்சை மரம் பற்றி எரிகிறதே!
ஓடு! ஓடு!
கடும் ஜுரத்தில் விநாயகர் சாய்ந்தார்...
வெப்பம் தாங்க வில்லையே!..
விநாயகப் பெருமானுக்கு ஏற்பட்ட உஷ்ணம் எல்லா உலகங்களையும் பாதிக்கிறது...
தேவர்கள் கணநாதனைக் குளிர்விக்க முயன்றனர்...
சந்தனம் பூசுகிறேன்!
பன்னீர் தெளிக்கிறேன்!
பாலபிஷேகம் செய்து பார்க்கலாம்...!
கடைசியில் ரிஷிகள் அருகம் புல்லால் விநாயகருக்கு அர்ச்சனை செய்ய.....
உடலும் மனமும் குளிர்ந்தேன்..
இனி என்னைப் பூஜிப்பவர்கள், ௨1 அருகம் புல்லால் அர்ச்சனை செய்தாலும் போதும்! நான் மகிழ்வேன்!


டாக்டர் நீங்க 'இரும்புச் சத்துள்ள' டானிக்க தினமும் குடிக்கச் சொன்னீங்களே இப்ப என்னாச்சுன்னு பாருங்க?
ஏன்? என்னாச்சு?
தினமும் குளிச்சதால உடம்பெல்லாம் துருப்பிடிச்சி போச்சு!
-தே. சி. சீனிவாசன்
ஏண்டா கோபு! ராமு ஏன் உறுமிகிட்டு... கண்ணீருகு போடறான்
அவன்தான் கணக்கில் புலி அச்சே! அதான்.
பாட்டியைக் கேள் கொட்டிடுத்தா? வெங்காயத்தைக் கடிவாயில் தேய்ப்பது தானே?
இன்னிக்கி விரதமாம். வெங்காயம் கிட்ட வே' வரக்கூடா துன்னு பாட்டி சொல்லிட்டா.
-க. இராமலிங்கம்
டேய்! சத்தம் போடாதே! ஒழுங்கா பீரோ சாவியைக் குடுத்திடு.
ஷ் ஷ்! சத்தம் போடாதே. நானும் இங்க திருடத்தான் வந்தேன். ஆனா பீரோ சாவி கிடைக்கலே. வா, இரண்டு பேரும் சேர்ந்து அதைத் தேடுவோம்.
உன்னை வெறிநாய்ன்னு சங்கர் திட்டினானாமே. நீ என்ன செய்தாய்?
அவன் காலைக் கடிச்சுட்டேன்!



அண்ணன் சொன்ன கவி(க்க)தை

கதைசொல்லவா நான் கதைசொல்லவா? — தம்பி
கண்ணான கண்ணனுக்குக் கதைசொல்லவா?


புறாவும், எறும்பும் கதைசொல்லவா — நல்ல
பண்புள்ளார் உதவியைக் கூறிடவா!
முயலும், ஆமையும் கதைசொல்லவா? — கடும்
முயற்சியார் வெற்றியைக் கூறிடவா!

கொக்கும், நரியும் கதைசொல்லவா? — அந்தக்
கொடியார் விருந்தைக் கூறிடவா!
எலியும், பூனையும் கதைசொல்லவா? — சுய
இழிந்தவர் நிலையைக் கூறிடவா!

பருந்தும், பாம்பும் கதைசொல்லவா? — பெரும்
பகைவரின் குணத்தைக் கூறிடவா?
கன்றும், பன்றியும் கதைசொல்லவா? — தீய
கயவரின் குறையைக் கூறிடவா!

அன்பும், அறிவும் கதைசொல்லவா? — அசு
அம்மா, அப்பா அறிந்திடுவாய்!
உறக்கம், என்னை அழைக்குதப்பா! — நீயும்
விழித்து இருப்பது முறையல்லவே!

— முக. கலிபத்துல்லார், குணமங்கலம்.



உயர்ந்தோர் அழிவதில்லை

புலிகள் நரியாய் வாழ்வதில்லை;
புல்லும் மரமாய் ஆவதில்லை;
அலைகள் அரசாய் ஆவதில்லை;
அறிஞர் நெஞ்சம் தளர்வதில்லை;

எலிகள் வீரம் மதிப்பதில்லை;
இழிந்தோர் பெருமை அடைவதில்லை;
ஒலியால் ஒளியும் மறைவதில்லை;
உயர்ந்தோர் உலகில் அழிவதில்லை!

— எஸ். ரவி. வந்தவாசி.



அது எந்தப் பூ?

அழகழகாய் ரோஜாப்பூ,
ஆடிவரும் ரோஜாப்பூ;
வெள்ளையான ரோஜாப்பூ;
விளையாடும் ரோஜாப்பூ;
துள்ளிவரும் ரோஜாப்பூ;
மெல்லச் சிரிக்கும் ரோஜாப்பூ;
அள்ளி அள்ளி அணைக்கவே,
ஆனந்தமாய் நகைக்கும்,
அத்தனைக்கும் சொந்தப்பூ;
அருமையான குழந்தைப்பூ.

— எஸ். சிதாலட்சுமி, கூடுவாஞ்சேரி.

என் அருமை ஜலி



பொறுமை என்னும் பண்பிலே,
அருமையாகத் திளைத்தவள்.

கல்வி உழைப்பு இரண்டிலும்,
நல்ல திறமைக் கொண்டவள்.

அடக்கம் என்னும் குணத்திலே,
ஒடுக்கமாகத் திகழ்பவள்.

நல்ல பழக்க வழக்கத்தில்,
நாட்டமாக இருப்பவள்.

பாச நேச உணர்விலே
பாங்குடனே திகழ்பவள்.

அனைத்தும் நிறைந்த தோழியாம்,
அவளே எந்தன் ஜலியாம்!

— ஜெ. அனிதா (21,295), கோவை.



இளந்தளிரே எழுந்திடு!

பெற்றோரைக் காக்க வேண்டும் — கல்விப்
பெரியோர் சொல் கேட்க வேண்டும்.

சான்றோர்கள் சொல்லைக் கேட்டால் — இங்கு
சான்ற நலம் வந்து சேரும்.

நன்றியுடன் வாழ வேண்டும் — உன்னில்
நல்ல பண்பு சேர வேண்டும்.

இன்றுதான் முளைத் தெழுந்த — சின்ன
இளந் தளிர் நீ ஆனாலும்,

நாளை இந்தப் பாரினுக்கே — ஒரு
நல்லதுணை நீ அல்லவோ?

ஆகையினால் நல்லியல்போ(டு) என்றும்
அன்புவழி சென்றிடப்பா!

— ப. ஆனந்த் (10,878), கோவை.

அகர வரிசை அறவுரை

அன்பே இறைவன் என்போம் — தினம்
ஆலயம் வந்தே பணிவோம்;
இரக்கம் கொள்வது நன்றே — அதனால்
ஈகை அறம்செயல் இன்றே!

உத்தமர் சொல்லில் திகழ்வோம் — எனில்
ஊருக்கு உழைத்தே மகிழ்வோம்;
எண்ணங்கள் இதயத்தில் தெரியும் — அங்கு
ஏன் என்ற கேள்வியும் புரியும்!

ஐயங்கள் தீர்த்திட நாளும் — நல்ல
அறிவுடன் அணுகினால் போதும்.
ஒற்றுமை வேண்டும் நம் வீட்டில் — அது
ஓர் குலம் ஆக்கிடும் நாட்டில்!

ஔவியம் பேசுதல் விடுப்போம் — பிறர்
அன்பினில் வாழ்வினைத் தொடுப்போம்;
பவ்விய கலைகளை ஏற்போம் — அதில்
'பயன்பெறத் திறமையை நாற்போம்!

— இதயவேந்தன், திருநெல்வேலி.

உலகம் உந்தன் ஊர்

பாசம் ஒரு கீதம் — அதைப்
பாடடி குயிலே!

நேசம் எங்கள் சுவாசம் — என்று
பேசடி கிளியே!

நாடு உந்தன் வீடு — அதில்,
ஆடடி மயிலே!

உலகம் உந்தன் ஊர் — அதனில்
துள்ளடி மானே!

— சி. சிவச்சந்திரன்



உரியதையே உண்ணுவோம்

வரிசையாகத் தென்னைகள்,
வளர்ந்து நிற்கும் பனைகள்;
வீட்டிலிருந்து பார்க்கையில்,
வேடிக்கையாய் இருக்குது!

கதிரவனின் ஒளியிலே,
கண்ணைப் பறிக்கும் நிறத்திலே,
காய்களெல்லாம் குலுங்குது,
கணை தொடுத்து இழுக்குது!

இனிக்கும் இளநீரையும்,
இன்ப நுங்குக் காயையும்,
வெட்டித் தின்ன ஆசைதான்,
வேனில், கோடைக் காலம்தான்!

இன்னொருவர் பொருளதை,
இசைந்து எடுக்கலாகுமா?
எண்ணமிதே தவறன்றோ?
ஏ மனமே! புரிந்து கொள்,

நமது வீட்டுக் கன்றுகள்,
நாளை பெரி தானதும்,
அள்ளி அள்ளிக் கொடுக்கையில்,
அனைவருமே உண்ணலாம்!

ஜி. மீனாட்சி, காஞ்சிபுரம்.

சிறுகச் சிறுகச் சேர்



ஒவ்வொரு கன்றாய் நட்டால்தான்,
ஒருநாள் தோப்பு உருவாகும்!
ஒவ்வொரு படியாய் முயன்றால்தான்,
உச்சி மலையும் உறவாகும்!

ஒவ்வொரு கல்லாய் வைத்தால்தான்,
உயர்ந்த மாடி வீடாகும்!
ஒவ்வொரு சில்லாய்ப் பொடித்தால்தான்,
உளிச்சிற் பங்கள் வடிவாகும்!

ஒவ்வோர் இதழாய் விரிந்தால்தான்,
ஒளிப்பூ இயற்கை அழகாகும்!
ஒவ்வொரு பூவாய்த் தொடுத்தால்தான்,
ஓவிய மலர்கள் சரமாகும்!

ஒவ்வொரு துளியாய் விழுந்தால்தான்,
ஓடும் நதியாய் அதுமாறும்!
ஒவ்வொரு காசாய்ச் சேர்த்தால்தான்,
உதவும் நிதியாய் அதுசேரும்!

— பல்லவன், திருக்கழுக்குன்றம்.





மழலைச் சிற்பிகள்

சின்னச் சின்ன மழலைகள்,
சிரிக்கச் செய்யும் குறும்புகள்!
நினைத்ததைத் தானே செய்திடும்,
நாளும் வளரும் குருத்துக்கள்!

பயமறியா இளங் கன்றுகள்!
பார்ப்பவரைக் கவர் உள்ளங்கள்!
வாய்சொல் குழறும் வார்த்தைகள்,
வழிகையில் இன்னிசை ராகங்கள்!

தட்டித் தளர்நடை பயின்றிடும்,
தரணியின் இன்றைய இளவல்கள்!
சுட்டித் தனமுள ராஜாக்கள்!
சூட்கமம் நிறைந்த செல்வங்கள்!


வெள்ளை மனத்துப் பிஞ்சுகள்!
விரியுலகத் திளம் பிரஜைகள்!
பள்ளிப் பாடம் படிக்கையிலே,
பகுத்தறிவுச் சுடர் பந்தங்கள்!

ஒற்றுமைப் பாலிதற்(கு) ஊட்டுவோம்!
ஒப்பற்ற வாழ்வினைக் காட்டுவோம்,
பத்தரை மாற்றுத் தங்கங்கள்,
பாரத சிற்பிக ளாக்குவோம்!

— எம். கே. மோகனசுந்தர், சென்னை — 116.

முதலைக்கே மோசம்!

-வேணு சீனுவாசன்



ஏரிக் கரையில் ஒரு சிறு கூட்டம் கூடி இருந்தது. எல்லோர் முகத்திலும் கவலை. பயம்.

பிரவீன், தன் மாமாவோடு அந்தப் பக்கமாக வந்தபோது, ''மாமா ஏரிக் கரையில் ஏன் கூட்டமாக நிற்கிறார்கள்? '' என்று கேட்டான்.

''தெரியவில்லை, போய்ப் பார்க்கலாம் வா,'' என்றார் மாமா. இருவரும் அங்கு சென்று விசாரித்தனர்.

ஒருவன் சொன்னான்: ''நம்ம ஊர் காத்தான் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டு இருந்தான். திடீரென்று அங்கே தோன்றியது ஒரு முதலை. அது காத்தானைத் தண்ணிக்குள்ளே இழுத்துக்கிட்டுப் போயிடிச்சி.''

''என்ன, நம்ம ஊர் ஏரியில் முதலை இருக்கா? இத்தனை வருஷமா இல்லையே!''

''உண்மைதாங்க, போன வாரம் அடிச்ச மழையில ஆத்துலேர்ந்து புதுத் தண்ணி ஏரிக்குள்ள வந்தது இல்லையா? அதுகூடத்தான் இந்த முதலை ஏரிக்குள்ள வந்து இருக்கணும்.''

''சரி, நாம மேற்கொண்டு முதலையை என்ன செய்யறதுன்னு யோசிப்போம். ''இப்ப எல்லோரும் வீட்டுக்குப் போங்க,'' என்றார் பிரவீனின் மாமா.

அந்த ஊர் ஏரி மிகவும் பெரியது. அதில் மீன்கள் ஏராளமாகக் காணப்பட்டன. பல குடும்பங்கள் ஏரி மீனை நம்பியே வாழ்ந்தன. முதலையின் அழையாத வரவால் அந்தக் குடும்பங்கள் மீன் பிடிக்க முடியாமல் திண்டாடின. துணி துவைக்கவோ, நீர் எடுக்கவோ ஊர் மக்கள் ஏரிக்குப் போவதற்கு அஞ்சினர்.

கிராம மக்களுக்கு இத்தனை வருடங்களாக ஏற்படாத பிரச்னை இது. எப்படி நடந்து கொள்வது என்று அறியாமல் விழித்தனர். பாம்பினால் தொல்லை என்றால் அடிக்கலாம். பறவைகளினால் தொல்லை என்றால் வலை வைத்துப் பிடிக்கலாம். ஆனால் முதலையை என்ன செய்வது? அவர்கள் குழம்பித் தவித்தனர். ஆலோசனைக் கூட்டம் அந்த ஊர் ஆலமரத்தின் அடியில் வழக்கம் போல் கூடியது. ஊர்ப் பெரியவர்கள் கூடினர். அவர்களுள் பிரவீனின் மாமாவும் இருந்தார்.

''அந்த முதலையைச் சீக்கிரமா எதுனாச்சும் செய்யணுங்க. அப்பத்தான் நாம எல்லாரும் நிம்மதியா இருக்க முடியும்,'' என்றான் ஒருவன்.

''ஆமா, நேத்து ஏரியில தண்ணி குடிக்க இறங்கின எருமை மாடு ஒண்ணை அது இழுத்துக்கிட்டுப் போனதை என் கண்ணால பாத்தேன்,'' என்றான் மற்றொருவன்.

''நாளுக்கு நாள் முதலையோட அட்டகாசம் தாங்க முடியலே. அது செத்தாத்தான் நிம்மதி.''

''சரி, ஈட்டி எறிஞ்சி, அதைக் கொல்லுங்க,'' என்றனர் சிலர்.

''அவ்வளவு எளிதில் முதலையைக் கொல்ல முடியாது. அதன் தோல்



மிகவும் கெட்டியாகவும், உறுதியாக வும் சொரசொரப்பாகவும் இருப்ப தால் . துப்பாக்கிக் குண்டுகூட எளிதில் துளைக்காது,'' என்றார் பிர வீனின் மாமா!

''அப்படி என்றால், ஏரியின் குறுக்கில் கூர்மையான கத்திகளை, மரச் சட்டங்களில் பொருத்தி வைக்க லாம்,'' என்றார் ஒருவர்.

''சரியான யோசனைதான். முத லையின் வயிற்றுப் பகுதி மென்மை யாக இருக்கும். அது வேகமாக நீந்திச் செல்லும்போது கூர்மையான கத்தி முனை பட்டால் போதும், நிச்சயம் அது செத்துவிடும்,'' என்றார் ஒருவர்.

நீண்ட, கூர்மையான கத்திகள் பதித்த மரச் சட்டங்கள் ஏரி நீரில் இறக்கபபட்டன. மக்கள் ஆவலோடு இரண்டு நாட்கள் காத்திருந்தனர்.

''நேற்று மாலை அந்த முதலையை மரத்தடியில் பார்த்தேன். கையில் ஆயுதம் எதுவும் நான் வைத்திருக்க வில்லை. இருந்திருந்தால் அப்போதே அதைத் தீர்த்துக் கட்டியிருப்பேன்,'' என்று சிலர் வீரமாகப் பேசினார்கள்.

முதலை நேற்று ஓர் ஆட்டை இழுத் துக் கொண்டு போனது என்றும், மாட்டை இழுத்துக் கொண்டு போனது என்றும் கட்டுக் கதைகள் கிளம்பின. இதைப் பயன்படுத்திச் சில தீயவர்கள் ஆடு, கோழி ஆகியவற் றைத் திருடிக் கொண்டு, முதலையின் மீது பழி போட்டனர்.

பிரவீன் தம் மாமாவிடம், ''ஏரி நீரில் விஷத்தைக் கலந்து முதலையைக் கொல்லக் கூடாதா? '' என்று கேட் டான்.

''அப்படிக் கொல்லுவது எளிது. ஆனால் இதனால் ஏரியில் உள்ள மீன்களும் நீர்ப் பறவைகளும் ஏராள மாக அழிந்துவிடும். மக்கள் அந்த நீரைப் பயன்படுத்த முடியாது. ஒரு முதலைக்காக, ஆயிரக்கணக்கான உயிர்களை அழிப்பது சரியல்ல,'' என் றார் மாமா.

அன்று மாலை பிரவீன், முதலையைப் பற்றிய சிந்தனையோடு நடந்து கொண்டிருந்தான். ஊர்க் கோடியில் அவனைச் சந்தித்தான் காடன்.


காடன் ஒரு மலைவாசி. பிரவீ னுக்கு மிகவும் நெருங்கிய நண்பன். மலைப் பகுதியிலேயே பிறந்து வளர்ந்த காடனுக்கு, மிருகங்களைப் பற்றியும் அவற்றின் இயல்புகளைப் பற்றியும் நன்றாகத் தெரியும்.

அவனிடம் தன் கவலையைக் கூறினான் பிரவீன். ''முதலையைக் கொல்லுவது எப்படி என்று தெரிய வில்லை,'' என்று முடித்தான் பிரவீன்.

சிறிதுநேரம் யோசித்த காடன், ''முதலைக்கு உப்புச் சுவை மிகவும் பிடிக்கும்,'' என்றான்.

''அதற்கு, என்ன இப்போது? '' என்றான் எரிச்சலோடு, பிரவீன்.

''நாயின் உடலில் உப்பு அதிகம். எனவே முதலை நாயைத் தின்பதற்கு ஆர்வம் காட்டும்,'' என்று சொல்



பயனில்லை. புத்திசாலியான முதலை அது. எப்படியோ தப்பிவிட்டது!

ஊர் முழுக்க முதலையைப் பற்றியேமக்கள்கூட்டம்கூட்டமாகநின்று பேசிக் கொண்டிருந்தனர்.

காடன், பிரவீனை அருகே அழைத்து, ரகசியமாக அவன் காதில் சில விஷயங்களைச் சொன்னான்.

அதைக் கேட்ட பிரவீன், அதிசயப் பட்டுப் போனான். "அட! இப்படி ஒரு வழி இருக்கிறதா? நான் இப் போதே சென்று மாமாவிடம் சொல்லி, ஏற்பாடுகள் செய்யச் சொல் கிறேன். உனக்கு மிக்க நன்றி," என்று சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பிச் சென்றான்.

காடன் சொன்னவற்றைத் தன் மாமாவிடம் சொன்னான் பிரவீன்.

அதற்கு அவர், "அப்படியா! நல்லது. அந்த வழியிலும் முயற்சி செய்து பார்க்கலாம். எப்படியோ முதலைத் தொல்லை தீர்ந்தால் மகிழ்ச்சி," என்றார்.

அன்று இரவு காடன், பிரவினைத் தேடி அவன் வீட்டிற்கு வந்தான். அவன் கையில் எதையோ வைத்துக் கொண்டு இருந்தான். அது துணியால் நன்றாகச் சுற்றி மறைக்கப் பட்டு இருந்தது.

வேறுசில ஆட்களையும், துணைக்கு அழைத்துக்கொண்டு பிரவீன், அவன் மாமா, காடன் ஆகிய மூவரும் கையில் டார்ச் விளக்குடன் புறப்பட்டனர்.

ஊரே உறக்கத்தில் இருந்தது. பால் போன்ற நிலா காய்ந்து கொண்டு இருந்தது. ஊதைக் காற்றின் குளிர் உடம்பை நடுங்கச் செய்தது. எல்லோரும் ஏரிக்கரையை அடைந்தனர்.

இவர்கள் ஏற்படுத்திய சத்தத்தினால் மரங்களில் தூங்கிக் கொண்டிருந்த பறவைகள் சடச்சட என்று தூக்கம் கலைந்து இறகுகளை அடித்துக் கொண்டன.

கவனமாகத் தரையை ஆராய்ந்தவாறே நீர்ப் பரப்புக்கு வெகு அருகில் வந்தனர். நிலவொளியில் ஏரியின் நீர், தகதகவென்று வெள்ளித் தகடு போல ஜொலித்துக் கொண்டிருந்தது.

காடன் தன் கையில் வைத்திருந்ததை இறக்கி, தரையில் நீரைத் தொடும்படி நிற்க வைத்தான்.

அது என்ன? ஒரு நாய்தான்! ஆனால் குரைக்காது. அதற்கு இப் போது உயிர் இல்லை.

பிரவீன், தன் கையில் வைத்திருந்த பாட்டிலைத் திறந்து, அதில் இருந்த திரவத்தை, நாயின் மீது தெளித்தான். அது நின்ற இடத்தில் நீரில் ஊற்றினான்.


உடனே எல்லோரும் பரபரப் போடு அருகில் இருந்த மரத்தின் மீது ஏறி, கிளைகளில் வசதியாக அமர்ந்து கொண்டு, அந்த நாயையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. "முதலை வரவில்லையே! நாய் இருப்பதை அது பார்க்கவில்லையோ?" என்றான் பிரவீன்!

"முதலையின் பார்வைத் திறன் அற்புதமானது. மிகக் குறைந்த வெளிச்சத்திலும் தண்ணீரின் அடியிலும் கூட அவற்றால் நன்றாகப் பார்க்க முடியும்," என்றார் மாமா.

"முதலைக்குமோப்பசக்தி அதிகம். நாயின் இரத்தம்தான் பாட்டிலில் இருந்த திரவம். அதையும் இங்கு ஊற்றி இருக்கிறோம். ஆகவே கண்





பட்டுப்புழுவிலிருந்து எண்ணெய்!

பட்டு உற்பத்தி செய்யும் பட்டுப் புழுவின் உடலிலிருந்து எண்ணெய் எடுக்கலாம் என்று புதுடில்லியில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்! பட்டு இழைகளை உற்பத்தி செய்யும் கூட்டுப் புழுவிலிருந்து 25 சதவீதம் எண்ணெயும் 75 சதவீதம் புரதமும் கிடைக்கின்றனவாம்! இந்த எண்ணெய். வர்ணம், சோப்பு முதலியவை தயாரிக்கவும், புரதம் கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் தீவனமாகவும் பயன் படுமாம்!

டிப்பாக முதலை இங்கு வருவது உறுதி,'' என்றான் காடன்.

அப்போது ஏரி நீர் சலசலத்தது. ஒரு பெரிய கறுப்புநிற மரத்துண்டைப் போல முதலை வேகமாக நீந்தி வந்தது. நாயின் அருகில் வந்ததும் ஒரு முறை பயங்கரமாக வாயைப் பிளந்தது. வாலைச் சுழற்றி அடித்தது. 'லபக்' என்று நாயைக் கவ்வியது. வாயை மூடிக் கொண்டது. உடனே நீருக்குள் மூழ்கி விட்டது. ஒரு பெரிய நீர்மூழ்கிக் கப்பல் தண்ணீருக்குள் இருந்து மேலே வந்து, வேலை முடிந்ததும், மறுபடி நீருக்கடியில் போய் விட்டதைப் போலத் தோன்றியது.

ஒரு மணி நேரம் ஆன பின்னே, ஏரி நீரில் காற்றுக் கொப்புளங்கள் நீருக்கடியில் இருந்து தோன்றி மேலே வந்து வெடித்தன. ஏரி நீர் கலங்கிச் சுழன்றது.

''முதலை உயிருக்காகப் போராடுகிறது. அதனால்தான் தண்ணீர் கலங்கிச் சுழன்றடிக்கிறது,'' என்றான் காடன்.

முதலை நீர் மட்டத்திற்கு மேலே வந்தது; வாலைச் சுழற்றிச் சுழற்றி வீசி அடித்தது. இதனால் படார், படார் என்ற பெருஞ்சத்தத்துடன் தண்ணீர் சிதறியது. தன் பெரிய வாயைத் திறந்து திறந்து மூடிய அது, சாகப் போகும் நேரத்தில் எழுப்பிய ஒலி, தூரத்தில் உறுமும் இடியோசை போலக் கேட்டது. சிறிது நேரத்தில் அந்த முதலை உயிரை விட்டது. அதன் வயிற்றுப் பகுதி வானத்தை நோக்கி இருக்க, ஏரி நீரில் மிதக்க ஆரம்பித்தது அது.

மரத்திலிருந்து எல்லோரும் மகிழ்ச்சியோடு இறங்கினர்.

மறுநாள் காலையில், ஏரிக் கரையில், இறந்த முதலையைக் காண ஊரே திரண்டு இருந்தது. அங்கு பிரவீன், காடன், மாமா ஆகியமூவரும் இருந்தனர்.

ஊர் மக்களின், மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ''அவ்வளவு பெரிய முதலையை எப்படிக் கத்தியில்லாமல், ரத்தம் இல்லாமல் கொல்ல முடிந்தது?'' என்று வியப்போடு கேட்டனர்.

காடன் சொன்னான்: ''முதலைக்கு உப்புச் சுவை மிகவும் பிடிக்கும். அதனால் நாயை அது விரும்பி உண்ணும். நான் நாய் ஒன்றைக் கொன்று, அதன் உள்ளேயிருக்கும் பகுதிகளை நீக்கிவிட்டு, நீற்றுச் சுண்ணாம்பை இறந்தநாயின் உடல்முழுவதும்நிரப்பி விட்டேன். அதைக் கொண்டு வந்து நீருக்கருகில் வைத்து, நாயின் இரத்தத்தையும் தெளித்தோம். முதலை வந்தது. நாயை விழுங்கியது. முதலையின் வயிற்றை அடைந்த நீற்றுச் சுண்ணாம்பு நுரைத்துப் பொங்கும். பயங்கரமாக எரிந்து உடலைப் பொசுக்கும். இதனால் வெந்து போன முதலை உயிரை விட்டது!''

பல உயிர்களைப் பலி கொண்டு, மக்களைப் பீதியுடன் நடுங்கச் செய்த முதலை அழிந்ததில் ஊர் மக்கள் மகிழ்ந்தனர். பிறகு வழக்கம் போல ஏரியில் மீன் பிடிக்கவும் துணிகளைத் துவைக்கவும் ஆரம்பித்தனர்.



சிரிப்பூட்டும் செந்தமிழ்ப் பாடல்:

ஐந்து கேள்வி ஒரே பதில்

தணிகை உலகநாதன்

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்னையில் இராமச்சந்திரக் கவிராயர் என்னும் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் வேடிக்கையாகப் பாடல்கள் பாடுவதில் வல்லவர். வறுமையால் வாடிய அந்தப் புலவர், ஒரு சமயம் திருவேங்கடநாதன் என்னும் வள்ளலிடம் போனார். வள்ளல் புலவரைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டார். புலவர் பதில் கூறினார்.

யாசிப்பதில் வல்லவனே, உனக்கு இல்லாதது என்ன? திரு — (செல்வம்).

உன் மனம் எந்த நிலையில் இருக்கிறது? வேம் — (மிகவும் வருந்தும் நிலையில்).

நீ உண்ணும் மேலான உணவுக்கு வேண்டிய பொருள் எப்படிக் கிடைக்கிறது? கடன் — (கடனாகக் கிடைக்கிறது).

சுவையறியாமல் உன்னிடம் இருப்பது எது? நா — (எனது நாக்கு).

நீ சொல்லப் போகும் சொல் என்ன? தா — (கொடு).

இப்படி வள்ளல் கேட்ட ஐந்து கேள்விகளுக்கும் புலவர் கூறிய பதிலில் 'திருவேங்கடநாதா' என்னும் பெயர் அமையுமாறு பாடி விட்டார். உடனே வள்ளல் புலவருக்கு ஏராளமான பொன்னைப் பரிசாகக் கொடுத்துப் பாராட்டினார். புலவர், எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு பதிலாகத் தமது பாட்டின் முடிவில் 'திரு+வேம்+கடன்+நா+தா' என்று கூறிய சொற்களைக் கூட்டப் படித்தால் திருவேங்கடநாதா என்று வருகிறதல்லவா?

இதோ, அந்த முழுப் பாட்டையும் படித்துப் பாருங்கள். 'பார்த்தேன்; படித்தேன்; சுவைத்தேன்; தேன்! தேன்! தேனே!' என்று நீங்கள் பாராட்டுவீர்கள்.


'இரவலனே! உனக்கில்லாத(து)
என்ன இதயம் என்ன?
பரஉணவு எது? சுவையற்ற(து)
என்ன? சொல் பான்மை என்ன?
தரஉரை செய்திட,' என்றான்
அதற்கு ஒன்றும் சாற்றிலன் யான்
வரதிரு வேங்கட நாதா என்
றேன் பொன் வழங்கினனே.

(பரஉணவு — மேலான உணவு. வரதிருவேங்கடநாதா — மேலான திருவேங்கடநாதனே).

கீழே உள்ள 20 படங்களை 5 நிமிடம் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். பிறகு புத்தகத்தை மூடிவிட்டு, ஒரு காகிதத்தில் என்னென்ன படத்தைப் பார்த்தீர்கள் என்று எழுதுங்கள். இடையில் பார்க்கக் கூடாது. உங்களுக்கு எவ்வளவு நினைவு ஆற்றல் இருக்கிறது என்பதை நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

— க. முகம்மது சித்திக் (20,963).

5 நிமிடப் புதிர்



என்ன, படங்களைப் பார்த்து முடித்து எழுதியாயிற்றா? உங்கள் தகுதி எப்படி? பார்ப்போமா?

20 — 0 சரியாய் இருந்தால் உங்களுக்கு அபார ஆற்றல்,
15 — 19 சரி — வெரிகுட்
10 — 14 சரி — பரவாயில்லை
0 — 4 சரி — சுத்தமோசம்

டி.ஜானகி

'ஆஹா, எவ்வளவு பெரிய கட்டிடம்! என்ன அழகான ஸ்கூல்! அடேயப்பா... எத்தனை விதவிதமான மரங்கள்; பூச்செடிகள். எவ்வளவு சுத்தமாக வைத்திருக்கிறார்கள், இதிலே மட்டும் எனக்கு இடம் கிடைத்தால் இன்னும் ஆர்வத்தோடு போட்டி போட்டுக் கொண்டு நன்றாகப் படித்து முதல் மாணவனாக வருவேன்...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டே வைரமணி, தலைமை ஆசிரியரின் அறையை நோக்கி நடக்கும் மாமாவைப் பின்தொடர்ந்து சென்றான்.

''ஐயா! வணக்கங்க,'' என்றார் மாமா.

ஏதோ எழுதிக் கொண்டிருந்த தலைமை ஆசிரியர் அருளானந்தம் குரல் கேட்டு நிமிர்ந்தார். ''வணக்கம், என்ன வேண்டும்?'' என்று அதிகாரத்தோடு வினவினார் எதிரே நின்று கொண்டிருந்த இருவரையும் பார்த்து.

வைரமணியின் மாமாதான் பேசலானார்: ''ஐயா! இவன் என் அக்காள் மகனுங்க. கிராமத்திலே எட்டாவது பாஸ் பண்ணிட்டான். மேற்கொண்டு படிக்க அங்கே வசதி இல்லீங்க. அதனால இங்கே டவுனுக்கு அழைச்சிக்கிட்டு வந்திருக்கேன். நல்லா படிப்பானுங்க. இந்தாங்க அப்ளிகேசன் பாரம்.''

விண்ணப்பப் பாரத்தை மேசையின் மீது பயபக்தியோடு வைத்தார். அதைக் கையால் தொட்டுக் கூடப் பார்க்காமல் தலைமை ஆசிரியர் வினவினார். ''உங்களாலே எவ்வளவு 'டொனேஷன்' கொடுக்க முடியும்?''


''டொனேஷனா?''

''ஆமாங்க. இந்த ஸ்கூலில் சேரணும் என்றால் கட்டாயம் குறைந்தது ரெண்டாயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டும்.''

''நான் ஒரு ஆபீசிலே நைட் வாட்ச்மேனாக வேலை பார்க்கறேனுங்க. எனக்கு ரெண்டாயிரம் ரூபா கொடுக்க வசதி இல்லீங்க.''

''அப்படி வசதி இல்லாட்டி கார்ப்பரேஷன் பள்ளிக் கூடத்திலே சேர்த்துடுங்க.''

இப்பொழுது வைரமணி பேச ஆரம்பித்தான். ''ஸார், என் பெயர்



வைரமணி! கிராமத்திலே விவசாயம் பார்க்கும் சாதாரண விவசாயியின் மகன் நான். நீங்க கேட்கிற அளவு எங்களாலே கொடுக்க முடியா விட்டாலும் நூறோ இரு நூறோ கொடுக்கறோம். நான் நன்றாகப் படிப்பேன். எங்கள் ஸ்கூல்லே நான்தான் ஃபர்ஸ்ட். நன்றாகப் பேசுவேன். நடிப்பேன். பாடுவேன், விளையாடுவேன். தயவு செய்து நீங்கதான் என்னை உங்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.''

''வைரமணி. நான் கேட்ட டொனேஷன் தொகையைக் கட்ட முடிய வில்லை என்கிறீர்கள். உன்னை என்னால் சேர்த்துக் கொள்ள முடியாது. ஸாரி, போகலாம்,'' என்றார் உறுதியான, கண்டிப்பான குரலில்.

முகத்தைத் தொங்க விட்டபடி மாமாவோடு வெளியே வந்தான் வைரமணி.

ஐந்து நாட்கள் சென்றன.

அன்று வைரமணியை மாமா ஒரு வேலையாகச் சொந்தக்காரர் ஒருவர் வீட்டிற்கு அனுப்பியிருந்தார். அவர்கள் கொடுத்த அரிசியையும், காய்கறிகளையும் இரண்டு பைகளில் அமர்ந்தபடி எலெக்ட்ரிக் ட்ரெயினில் நின்றபடி வந்து கொண்டிருந்தான் அவன். கிண்டி வந்ததும் பெரும்பாலோர் இறங்கி விட்டனர்.

காலியாக இருந்த அந்த மூலை சீட்டில் வசதியாக அமர்ந்து கொண்ட பொழுது அவன் காலில் ஏதோ மெத்தென்று படவே, குனிந்து எடுத்தான். கையோடு வந்தது உப்பிய நிலையில் ஒரு மணி பர்ஸ். அவன் நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது. தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று பார்த்தான்.

யாரும் அவனைக் கவனிக்கவில்லை. அங்கிருந்த இரண்டு மூன்று பேரும் பேப்பருக்குள் மூழ்கியிருந்தனர். வெளியில் சொன்னால் வேறு யாராவது தன்னுடையது என்று தட்டிப் பறித்து விடுவார்களோ என்று சந்தேகம்.



பர்சைப் பிரித்துப் பார்க்கப் பயமாக இருந்தது. வீட்டிற்குப் போய்ச் சாவகாசமாகப் பார்க்கலாம் என்று நினைத்தபடி பாக்கெட்டில் பர்சைப் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

சில நிமிடங்களில் அவன் இறங்க வேண்டிய இடம் வரவே பயந்தபடி இறங்கினான். அடித்துக் கொள்ளும் இதயத்தோடு வீட்டை நோக்கி நடக்கலானான்.


''வைரமணி, மாட்னி ஷோவுக்கு ஏண்டா வரமாட்டேங்கறே?''

''இன்னொரு நாளைக்குப் பார்த்துக்கறேன் மாமா. எனக்கு லேசாத் தலையை வலிக்குது.''

''இந்தா, இதிலே தலைவலி மருந்து இருக்கு. தடவிக்கிட்டுத் தூங்கு. சரியாயிடும். வரட்டுமா?''

வைரமணியின் மாமனும் அவன் மனைவியும் கிளம்பிச் சென்று விட்டனர். வாசல் கதவை உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டு விட்டு அச் சிறிய வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தான் வைரமணி.

பாக்கெட்டில் பாறாங்கல் போல் கனத்துக் கொண்டிருந்த பர்சை எடுத்தான். யாருடையதாக இருக்கும்? யோசித்தபடியே பிரித்தான். கற்றை கற்றையாக ரூபாய் நோட்டுக்கள். அதில் ஓர் இளைஞனின் போட்டோ அவனைப் பார்த்துச் சிரித்தது. அதன் பின் முகவரி எழுதப்பட்டிருந்தது. முகவரியை மனத்தில் பதிய வைத்துக் கொண்டான்.



— ஆர். காயத்ரி தேவி (16049)



ரூபாய் நோட்டுக்களை எண்ணினான். 1500 ரூபாய்! 'இந்தப் பணத்தை டொனேஷனாகக் கொடுத்து விட்டு மனதிற்குப் பிடித்த, அழகான கட்டிடம் கொண்ட அந்தப் பெரிய பள்ளியில் சேர்ந்து விடலாமா?' என்று நினைத்தான். ஒரு கணம்தான். மறு விநாடியே —

'திருடுவது மகா பாவம். அது நெருப்புக்குச் சமானமானது. நெருப்பு எப்படி பொருட்களைச் சிறிது சிறிதாக அழிக்கிறதோ, அதே போல திருட்டும் நம்மை அழித்து விடும்,' என்று ஆசிரியர் கூறிய அறிவுரை நினைவிற்கு வரவே, பர்சிற்குள் ரூபாய்களைத் திணித்துப் பழையபடி வைத்தான்.

அவனுடைய மாமா மிகவும் நல்லவர். அவன் மாமன் மனைவி கொஞ்சம் பேராசை குணம் படைத்தவள். பர்சில் உள்ள பணத்தைப் பார்த்ததும் கொடுக்க மறுத்து விட்டால் என்ன செய்வது? அதனால்தான் மாமாவிடம் கூடச் சொல்லவில்லை. தனக்குப் பர்ஸ் கிடைத்த விஷயத்தை. அவர் சாப்பிட்ட பிறகு இருவரும் மாட்னி ஷோவுக்கு கிளம்பி விடவே, நிதானமாகப் பர்சை எடுத்து ஆராய்ந்தான்.

'பணத்தைக் காணாமல் பாவம் எப்படித் தவிக்கிறார்களோ! நல்ல காலம் இரண்டு பேரும் சினிமாவுக்ுப் போயிட்டாங்க. அவங்க திரும்பி வருவதற்குள் நான் இதை உரியவர்களிடம் சேர்த்து விட வேண்டும்,' என்று மனத்திற்குள் எண்ணிபடி சுறுசுறுப்போடு எழுந்தான்.

கதவைப் பூட்டி, வழக்கமான இடத்தில்.சாவியை வைத்து விட்டுக் கிளம்பினான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அலைந்து கஷ்டப்பட்டு வீட்டைக் கண்டுபிடித்தான் வைரமணி. வாசலில் உள்ள வராந்தாவில் நின்றபடி உள்ளே பார்த்தான். யாரும் தென்படவில்லை.

''ஸார்...'' கூப்பிட்டுப் பார்த்தான்.

பதில் வரவில்லை.

''ஸ...ஸார்!'' இந்த முறை இன்னும் சத்தமாகக் கூப்பிட்டான்.

''யாரது?'' என்று கேட்டபடியே.. உள்ளே இருந்து ஓர் இளைஞன் வந்தான்.

அவனைப் பார்த்ததுமே புரிந்து விட்டது வைரமணிக்கு. போட்டோவில் இருக்கும் இளைஞன் இவன் தான் என்று. இருந்தாலும் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளக் கேட்டான்.

''ஸார், நீங்கள்தானே அரவிந்தன்?''

''ஆமாம்! உனக்கு என்ன வேண்டும்?''

''அண்ணா! இந்தப் பர்ஸ்... உங்களுடையதா பாருங்கள்...'' பர்சை நீட்டினான்.

வாங்கிய அரவிந்தனின் விழிகள் வியப்பால் மலர்ந்தன.

''ஆமாம் தம்பி! இது என்னோடது தான். எம்.ஏ., செகண்ட் இயர் படிக்கிறேன். காலேஜ் பீஸ், டிரெஸ் வாங்க, புத்தகம் வாங்க எங்க ஃபாதர் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்தார். இன்னிக்குக் காலையிலே காலேஜ் போனதும், ஃபீஸ் கட்ட பர்சைப் பார்த்தால் காணோம்.. தேடித் தேடிப் பார்த்துச் சலிச்சுப்

போய், கொஞ்ச நேரம் முன்னாடி தான் வீட்டுக்கு வந்தேன். ஆமா இது எங்கே — எப்படிக் கிடைச்சது?''

வைரமணி தான் எலெக்ட்ரிக் ட்ரெயினில் கண்டுபிடித்ததை விவரித் தான். பிறகு, ''அண்ணா, பர்சிலே இருந்த பணம் சரியாய் இருந்தது இல்லையா? இனிமேல் ஜாக்கிரதை யாயிருங்க. வரேன்,'' என்று கூறிய படி கிளம்பலானான்.

''தம்பி, ஒரு நிமிஷம்! எலெக்ட்ரிக் ட்ரெயினிலே கும்பலிலே எப் படியோ நழுவி விழுந்து விட்ட என் னோட பணத்தை நீதான் கண்டுபிடிச் சுத் தேடிக் கொண்டு வந்து கொடுத் திருக்கே! இந்த உதவியை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். இந்தா, இதை என் அன்பளிப்பா வச்சுக்க...'' ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து அரவிந்தன் அவனி டம் நீட்டினான்.

''போங்க அண்ணா! பெரியபெரிய வார்த்தைகளை எல்லாம் பேசிக் கிட்டு. உங்ககிட்ட பணம் வாங்கி னால் நான் செய்த உதவிக்கு அர்த்த மில்லாப் போயிடும். எனக்கு அன் பளிப்பு வேண்டாம் ப்ளீஸ்...'' பணி வோடு, ஆனால்... உறுதியோடு, மறுத்து விட்டு வாசலை நோக்கி மன நிறைவோடு, விரைந்தான் வைர மணி.


இதுவரை நடைபெற்றதை ஹாலில் இருந்த ஜன்னல் வழியாகப் பார்த்த படி இருந்தார் ஒருவர். அவர் யார் பள்ளியின் தலைமை ஆசிரியர் அருளானந்தம்.

ஆம், அவருடைய மகன்தான் அரவிந்தன்.

நடந்தது எல்லாமே அவருக்குப் புரிந்து விட்டது. அவர் வைரமணி யைப் பார்த்து விட்டார். ஆனால் வைரமணிக்கு இது அவருடைய வீடு என்று தெரியவே தெரியாது.

தன்னைப் பார்க்கக்கூட அஞ்சிய படி அரவிந்தன் வருத்தத்தோடு இருந்ததின் காரணம் அருளானந்தத் துக்கு இப்போதுதான் புரிந்தது. அவர் தனக்குள் சொல்லிக் கொண் டார்; 'இன்றைக்கு மத்தியானம் தலைவலி என்று அரை நேரம் லீவு போட்டு விட்டு வீட்டுக்கு வந்ததும் நல்லதுதான். வைரமணியின் உயர்ந்த பண்பு என்னைக் கவர்ந்து விட்டது. பணத்திற்காகப் பண்புள்ள, ஒழுக்க முள்ள, நன்றாகப் படிக்கும் சிறந்த மாணவனை இழக்கவிருந்தேன்.

'நல்ல காலம்! எனக்கும் இப்பொ ழுதுதான் எது முக்கியம் என்று புரிந்தது. குப்பைக் கூடையில் போட்ட அவனோட அப்ளிகேஷன் பாரத்தை எடுத்து நாளைக்கு முதல் வேலையா கப் பியூனை அனுப்பி, அவனை வர வழைத்துச் சேர்த்துக் கொள்ளப் போகிறேன். அது மட்டுமில்லை இனி வருடா வருடம் பண்புள்ள, அடக்க மான, சிறந்த மாணவனை எத்தனை ஏழையாக இருந்தாலும் இலவசமா கவே சேர்த்துக் கொள்வேன். இது உறுதி.'



இப்படி இருந்தவர் எப்படி....

* இங்கிலாந்தின் பிரதமராக இருந்த உட்ரோ வில்சன் வறுமை காரணமாக ஆசிரியராகப் பணியாற்றியவர்.
* இருமுறை நோபல் பரிசு பெற்ற கியூரி அம்மையார் சிறு வயதிலேயே வீடுகளில் வேலை செய்து பிழைத்தவர்.
* ரஷ்யப் பிரதமராக இருந்த குருஷேவ் இளம் வயதில் மாடு மேய்த்தவரே.
* செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகனாகப் பிறந்தவர் ஸ்டாலின்.
* அமெரிக்காவின் பதினேழாவது ஜனாதி பதியான 'ஆன்ட்ரு ஜான்ஸன்' தையற் காரராக வேலை பார்த்தவர்.

— தொகுப்பு: பி. கோவிந்தசாமி (5.703).

சுற்றுலாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.


சுற்றுலாவில் கலந்து கொள்ளும் மாணவிகள் தம்மோடு எந்தப் பெண்ணை அழைத்துப் போகலாம் என்று யோசித்தார்கள். தெரிந்த பலரில் யாரை அழைத்துச் செல்வது என்று தெரியாமல் சிலர் குழம்பிப் போனார்கள். சிலர் தங்கள் உறவுகாரப் பெண்களுக்குக் கடிதம் போட்டு அழைத்தார்கள்.

அருள்மதிக்குத்தமிழ்ச்செல்வியின் நினைவுதான் வந்தது.

காந்தி தொடக்கப் பள்ளியில் அவர்கள் ஒன்றாகப் படித்தார்கள். தமிழ்ச் செல்வி படிப்பிலும் விளையாட்டிலும் மிகுந்த ஆர்வமுடைய

வண்ணத் தோட்டத்தின் வண்ணப் பாவைகள்

புதுவூர் முத்து



பெண்ணாக இருந்தாள். நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது அவளுக்கு வந்த கடுமையான காய்ச்சல், அவளைப் பெரிதும் பாதித்து விட்டது. அவளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று ஆர்வம் காட்டிய ஆண்டாள், மகள் பிழைத்தால் போதும் என்ற முடிவுக்கு வந்து விட்டாள். அப்போது பள்ளியை விட்டு நின்றவள் மீண்டும் வந்து சேரும் சூழ்நிலை ஏற்படவில்லை. அருள்மதி அதற்காக மிகவும் வருந்தினாள்.

தமிழ்ச் செல்வி வீட்டார் ஒளவை நகரிலிருந்து இடம் மாற்றிக் கொண்ட பின் அருள்மதி அவர்களுடைய வீட்டுக்குச் செல்லும் வாய்ப்பும் ஏற்படவில்லை. ஆசைத்தம்பியோடு

சுற்றிக் கொண்டிருக்கும் வேலப்பனைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்கு வேதனையாக இருக்கும்; 'தமிழ்ச் செல்வி எவ்வளவு நன்றாகப் படித்தாள். இவன் படிப்பில் கொஞ்சங்கூட அக்கறையில்லாமல் திரிகிறானே' என்று வருந்துவாள். சட்டை விஷயத்தில் சந்தேகம் வந்த போது வருவதற்கு நினைத்தாள். ஆண்டாளுக்குத் தெரிந்தால் மிகவும் வேதனையடைவாள் என்று அதைத் தவிர்த்து விட்டாள்.

''வாம்மா அருள்மதி! இப்போது தான் வழி தெரிந்ததா?''

ஆண்டாள் முகமலர்ச்சியோடு வரவேற்று அவளை அணைத்துக் கொண்டாள்.

உள்ளேயிருந்த தமிழ்ச் செல்வி அருள்மதியின் குரலைக் கேட்டு மகிழ்ச்சியோடு ஓடி வந்தாள்.

அருள்மதி சுற்று முற்றும் பார்த்தாள். அவள் அதைப் புரிந்து கொண்டாள்.

''வேலப்பன்தானே...? அவன் கடைத் தெருவிலிருந்து இன்னும் வரவில்லை. வா... நாம் மாடிக்குப் போகலாம்.. மனம் விட்டுப் பேசலாம்.''

இருவரும் மேலே சென்றார்கள்.

''தமிழ். உனக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி! எங்கள் பள்ளியில் கல்வராயன் மலைக்குச் சுற்றுலா போகிறார்கள். அதில் நீ கலந்து கொள்கிறாய். உனக்குரிய கட்டணத்தை நான் செலுத்தி விட்டேன். உன் அம்மாவிடம் சொல்லி அனுமதியும் வாங்கி விடுகிறேன்.''

திட்டத்தை விவரித்துக் கொண்டிருந்தாள். அதில் ஆர்வம் பொங்கியது; நட்புணர்வு பளிச்சிட்டது.

தமிழ்ச் செல்வியின் உள்ளம் சிறகடித்துப் பறந்தது.

பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் இரண்டு கண்ணாக நினைத்தவள் அவள். பள்ளி தொடர்பான எந்தச் செய்தியும் அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

''அருள், நீ என்னை மறந்து விட்டாயோ என்று நினைத்தேன். உன் அன்பு இப்படி மழையாகப் பொழியும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.''

சொற்களில் நன்றியுணர்ச்சி மின்னியது.

''தமிழ், நட்புக்கு என்னதான் அடையாளம்? உன்னை உயர்வாக நினைக்கிறேன்; என் உயிராக நினைக்கிறேன்; அதனால் அழைக்கிறேன்,'' என்றவள் அவளை அருகே அழைத்து இரகசியமாக, ''நீ சுற்றுலாவுக்கு வருவது வேல்ப்பனுக்குத் தெரிய வேண்டாம்,'' என்று கூறினாள்.



''அவனுக்குத் தெரியாமல் எப்படி?''

குழம்பினாள் அவள்.

''கடைசி நேரத்தில் தெரிந்து

கொள்ளட்டும். நான் சுற்றுலா வருகிற செய்தி ஆசைத்தம்பிக்கே தெரியாது.''

''ஏன் சொல்லவில்லை?''

வியப்பு அவளுடைய முகத்தில் வெளிப்பட்டது.



அருள்மதி அன்று தலைமை ஆசிரியரிடம் சட்டைகளைப் பற்றிக் குறிப்பிட்ட செய்தி, அதன்பின் வீட்டுக்கு வந்ததும் ஆசைத்தம்பி அடைந்த பதற்றம், தொடர்ந்து பள்ளியில் நடைபெற்று வரும் சில சம்பவங்கள் ஆகியவற்றை அவளிடம் குறிப்பிட்டாள்.

''வேலப்பனும் ஆசைத்தம்பியும் இரகசியமாக ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால் அது விளையாட்டு என்பார்கள். கடற்கரையில் மணல் வீடு கட்டலாம். அது விளையாட்டு. கண்ணில் மண்ணைத் தூவுவது விளையாட்டா? அவர்கள் மல்லிச் செடியை வளர்த்தால் மகிழ்ச்சி அடையலாம்; கள்ளிச் செடியை அல்லவா வளர்க்கிறார்கள்? நாம் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கிறதே!''

அருள்மதி தொடக்கப் பள்ளியில் படிக்கும்போதே கவிதை எழுதுவாள். அவளுடைய வேதனையிலும் அந்தக் கவிதைத் திறன் வெளிப்பட்டது. அதைத் தமிழ்ச் செல்வி உணர்ந்தாள்.

''இருந்தாலும் உண்மை என்ன என்று தெரியாததால் அவர்களைப் பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை.''

''மதிப்பெண் ஏட்டில் கையெழுத்துப் போட்ட கதை...'' என்று தொடங்கினாள் தமிழ்ச் செல்வி.

''தவறுதலாக ஒரு கையெழுத்தைப் போட்டதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்று என்னுடைய அம்மா சங்கரி கேட்கிறாள்.''

''அவர்களுக்கு மதிப்பெண் ஏட்டின் மதிப்புத் தெரியாதா? அடுத்தவருடைய கையெழுத்தைப் போடுவது தவறு என்று தெரியாதா?''

''பள்ளிக்கூடம் என்றாலே இளப்பம். என்ன செய்து விடுவார்கள் என்ற எண்ணம். இது என் தாயின் குறை மட்டுமன்று; பரவலாக உள்ள பழக்கம்! குளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பு. அதில் கல்லெறிந்து விட்டுக் குளம் கலங்கி விட்டது என்று குற்றம் சொல்கிறோம். தமிழ்! கல்வியின் அருமை இன்னும் இங்கே தெரியவில்லை.''

''அந்த விதத்தில் என்னுடைய அம்மாவைப் பாராட்ட வேண்டும். பள்ளிக் கூடத்தைச் சிறுமைப்படுத்தும் எந்தப் பேச்சையும் செயலையும் அவர்கள் அனுமதிப்பதில்லை. நான் எந்த விதத்திலாவது கல்வி பெற முடியுமா என்று சிந்திக்கிறார். நல்ல நல்ல நூல்களை வாங்கிக் கொடுக்

கிறார். படிப்பு என்ற பழக்கம் நீங்கி விடாமல் காத்து வருகிறார்.''

''தமிழ்! அவர்களுடைய பண்பைப் போற்ற வேண்டும். எல்லோருமே அவர்களைப் போல் இருந்து விட்டால் பள்ளிக்கூடம் ஒரு சொர்க்கமாகி விடும்! இந்த நேரத்தில் அரவிந்தன், ராமு, பீட்டர், முகம்மது அலி, பகத்சிங் ஆகியோரைப் பற்றி அவசியம் குறிப்பிட வேண்டும். இந்தச் சுற்றுலாவில் அவர்களுடைய பங்கு முக்கியமானது. தலைமை ஆசிரியரும், ஆசிரியர்களும் மிகுந்த ஆர்வத்தோடு உழைக்கிறார்கள். கோமதி என்ற சிறந்த ஆசிரியை நமக்குத் துணையாக வருகிறார். சுற்றுலா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.''

அருள்மதியின் சொற்கள் ஆவலூட்டின. தமிழ்ச்செல்வியின் உள்ளம் அப்போதே சுற்றுலா சென்று வந்தது.

''பெற்றோருடன் பல ஊர்களுக்குப் பயணம் சென்றிருக்கிறேன். இருந்தாலும் பள்ளிக்கூடச் சுற்றுலாவில் செல்வது அருமையான அனுபவம் அல்லவா? எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாமே...''

பள்ளியும் கல்வியும் அவளுக்குத் தேனும் பாலும்! அந்த ஆர்வம் சொற்களில் வெளிப்பட்டது.

''உன் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். இந்தச் சுற்றுலாவில் நாம் எவ்வளவோ பயன் அடையப் போகிறோம். அதே நேரத்தில் நமக்கு ஒரு முக்கியமான கடமை இருக்கிறது. இந்த விஷயத்தில் நீ உதவியாக இருந்தால் பள்ளியின் பெருமை மேலும் கூடும்,'' என்ற அருள்மதி அவளிடம் இரகசியமாக அந்த விஷயத்தைக் குறிப்பிட்டாள்.

''அருள், நாம் இருவரும் இணைந்து திட்டங்கள் தீட்டுவோம்; விரைவில் வெற்றி காண்போம்; பள்ளிக்கு ஏற்பட்டுள்ள அந்த இழுக்கை அகற்றுவோம்.''

அந்த உணர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சியோடு அவளை அரவணைத்துக் கொண்டாள் அருள்மதி.


விமலானந்தம் செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார்.

''சுற்றுலாவுக்காக எனக்கும் ஆசைத்தம்பிக்கும் தலைமை ஆசிரியரே பணம் கட்டி விட்டார்.''

நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னான் வேலப்பன்.

'உன்னுடைய நற்பண்பைப் பாராட்டி அவர் பணம் கட்டியிருக்கிறார். அப்படித்தானே?' என்று கேட்க நினைத்தார். எதையாவது சொல்லப் போய் ஏதாவது ஆகிவிட்டால்? அமைதியாக இருந்து விட்டார்.

குழந்தை எழுத்தாளருக்குப் பாராட்டு



மறுமலர்ச்சி ஆர்ட்ஸ் அகாடமியின் சார்பில், குழந்தை எழுத்தாளர் பி. வி. கிரிக்கு, குழந்தை இலக்கியத்தில் சிறந்து விளங்கும் தன்மைக்காகப் 'பாராட்டு மடல்' வழங்கப்பட்டது.

அண்மையில் (10.5.89) ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்த விழாவில், மாண்புமிகு. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர். இராம கிருஷ்ணன் அவர்கள் பாராட்டு மடலை வழங்கினார்.

பி. வி. கிரி. ஏற்கெனவே குழந்தை இலக்கியத்துக்காக, ஏ.வி.எம். அறக்கட்டளையின் தங்கம், வெள்ளிப் பதக்கங்களையும், மாநில அரசு, மத்திய அரசுப் பரிசுகளையும் பெற்றவர். குழந்தைகளுக்காக 25 நூல்கள் எழுதியுள்ளார்.

— வி. ஜி.



ஆண்டாள் வந்தாள்.

''தலைமை ஆசிரியர் உனக்காகப் பணம் கட்டியிருப்பது எங்களுக்கு மிகவும் வியப்பான செய்தியாக இருக்கிறது. மணிவாசகமே அதைக் கூறியிருப்பதால் நம்பாமல் இருக்க முடியவில்லை. தலைமை ஆசிரியர் உன்னிடம் காட்டுகின்ற இந்த அன்பு மேலும் பெருகும்படி உன் செயல்கள் இருக்க வேண்டும்,'' என்றாள்.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, ''அம்மா, நீங்கள் சொல்கிறபடியே நடந்து கொள்வேன். மதிப்பெண் ஏட்டைக் கொடுங்கள். சுற்றுலா செல்வதற்கு முன் வகுப்பு ஆசிரியரிடம் கொடுக்க வேண்டும்,'' என்றான்.

''சுற்றுலாவுக்குச் சென்று வா. எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்களோ அதன்படி நடந்து கொள். வந்த பிறகு மதிப்பெண் ஏட்டைப் பற்றிப் பேசுவோம்.''

அவள் உறுதியாக இருந்தாள். தந்தையின் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அவர் கூரையைப் பார்த்தார்.

வேலப்பன் படும் அவஸ்தையைத் தமிழ்ச் செல்வி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆசைத்தம்பி தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தான். அருள்மதி சுற்றுலாவுக்கு வரும் செய்தியை சங்கரி மறதியாக அவனிடம் கூறி விட்டாள்.

''அவள் என்னிடம் கூறவே இல்லையே... என்ன திமிர் இருக்க வேண்டும்?''

ஆவேசத்தோடு துள்ளினான்.

''அவளுக்கும் தலைமை ஆசிரியர் தான் பணம் கட்டியிருக்கிறார். அவளுக்கே இப்போதுதான் தெரிந்திருக்கிறது,'' என்று சமாளித்தாள்.

அவள் வந்தால் சுற்றுலா அவ்வளவுதான்' என்று நினைத்துக் கொண்டான்.

சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. சமையலறைக்குப் போய் ஒரு திருமண அழைப்பிதழை எடுத்து வந்தான். சுற்றுலா போகிற அதே நாளில் அந்தத் திருமணம்!

தோட்டத்திலிருந்து அருள்மதி உள்ளே வந்தாள். அவன் கோபத்தை மறைத்துக் கொண்டான்.

''அம்மா நீங்கள் சொன்னீர்களே மலர்விழியின் திருமணம், அது புதன் கிழமை விழுப்புரத்தில் நடக்கிறது.''

நினைவுபடுத்தினான்.

''அவசியம் போக வேண்டிய திருமணம்,'' என்று சொல்லி விட்டுப் பட்டுப் புடைவையைத் தேடப் போய் விட்டாள் அவள்.

''அருள்மதி, அம்மாவோடு நீயும் போகிறாயா? ஊர்க்கதை பேசலாம். விருந்து சாப்பிடலாம்.''

ஆசை காட்டினான். அவனுடைய திட்டத்தை அவள் புரிந்து கொண்டாள்.

''அவை மட்டுமா? எவ்வளவு பேர் பட்டுப் புடைவை கட்டிக் கொண்டு, கழுத்து நிறைய நகை போட்டுக் கொண்டு வருவார்கள்! அவற்றைப் பார்க்கலாம். பாட்டுக் கச்சேரி இருக்கிறது. காது குளிரக் கேட்கலாம். நீ சொன்னாலும் சொல்லா விட்டாலும் நான் திருமணத்துக்குத்தான் போகப் போகிறேன். சுற்றுலா என்ற பெயரில் மலையில் ஏறச் சொல்வார்கள்; அங்குமிங்கும் நடக்கச் சொல்வார்கள். நான் வர மாட்டேன்.''

சிரிக்காமல் பதிலளித்தாள். அவன் அதை நம்பி மகிழ்ச்சியடைந்தான்.

ஒரு சுமை இறங்கிய நிறைவோடு வேலப்பனைச் சந்திக்கச் சென்றான்.

''வேலப்பா, பெண்களையெல்லாம் இந்தச் சுற்றுலாவில் சேர்ப்பதுதான் எரிச்சலாக இருக்கிறது. சுற்றுச் சூழல்பற்றி அவர்களுக்குஎன்ன தெரிய வேண்டும்? சமையற்கட்டுதான் அவர்களுடைய சுற்றுச்சூழல்! அருள்மதி சுற்றுலாவுக்கு வருவதாக இருந்தாள். அதனால் அவளை ஒரு திருமணத்துக்குப் போகும்படி செய்துவிட்டேன். அவள் வந்தால் கட்டுச்சோற்றில் பூனையை வைத்துக் கட்டியது போல் ஆகிவிடும்.'' பெரிய திட்டம் ஒன்றை நிறைவேற்றிய பெருமிதத்தில் இருந்தான் அவன்!

''எனக்கு இந்தத் தொல்லையெல்லாம் இல்லை. என் தங்கைதான் நான்காம் வகுப்போடு நின்றுவிட்டாளே!'' சிரித்துக் கொண்டே சொன்னான் வேலப்பன். தங்கை படிப்பை நிறுத்திவிட்டதில் அவ்வளவு மகிழ்ச்சி அவனுக்கு!

''ஆசிரியர் மணிவாசகம் உன் உறவுக்காரராயிற்றே, அவர் எப்படி?''



* பறவைகளில் மிகவும் உயரமாகப் பறக்கக்கூடியது 'தங்கக் கழுகு' (கோல்டன் ஈகிள்)
* உலகில் மிகப் பெரிதாகக் கருதப்படும் பறவை நெருப்புக் கோழி. இதற்கு அடுத்துப் பெரிய பறவை 'எமு'.
* நியூசிலாந்திலுள்ள 'கிவி' என்ற பெயருடைய பறவை முயலைப் போலவே குழிக்குள் சுருண்டு படுத்துத் தூங்கும்.
* பெங்குவின் பறவைகள் பார்க்க ஒரே மாதிரியாகத் தோன்றினாலும் இதில் 17 வகைகள் உள்ளன.
* பறக்கும் போது அடைக்கலான் குருவி ஒரு விநாடிக்கு 13 தடவை தன் சிறகுகளை அசைக்கிறது.
* ஆஸ்ரேலியாவில் குக்கபுரா என்ற பறவை வாழ்கிறது. இப் பறவைக்கு சிரிக்கும் பறவை என்று பெயர். இது மனிதர்களைப் போலவே சிரிப்பதால் இப் பெயர் ஏற்பட்டது.
* நியூஸிலாந்தில் வாழும் 'கிவி' என்ற பறவைக்கு இறக்கைகள் கிடையாது.





* ஆர்க்டிக்டென் என்ற பறவை ஆடிக் காற்றுக் காலத்தில் வடக்கு முனையிலிருந்து தெற்கு முனைக்கு 11,000 மைல்கள் பறந்து சென்று குடியேறி கூடு கட்டி வாழ்கிறது. பறவைகளிலேயே அதிகப் பயணம் செய்யும் பறவை இதுதான்.
* ஆந்தையின் இறக்கை முடிவில் வெல்வெட் போன்ற குஞ்சங்கள் உள்ளன. வேகமாகப் பறக்கும் போது எழுப்பும் சத்தத்தை இந்த வெல்வெட் குஞ்சங்கள் தடுத்து விடுகின்றன. எனவே ஆந்தை பறக்கும் போது சப்தம் வராது. இதன் பார்வைத் திறன் ம தனை விட 100 மடங்கு அதிகம்.
* 'ஷ்ரைக்' என்ற ஒரு பறவை சிறு பூச்சிகளை வேட்டையாடுவதில் சாமர்த்தியம் உள்ளது. இது பூச்சிகள் கிடைக்கும்போதெல்லாம் பிடித்து வரிசையாக மரத்தில், செடியில் இருக்கும் முட்களில் அவற்றை அப்படியே செருகி வைத்து விடும். பிறகு தேவைப்படும் போது மட்டும் அவற்றைச் சாப்பிடும்.



"அவர் நம்மைப் பற்றிக் கொஞ்சங்கூட சந்தேகம் கொள்ளமாட்டார். நாம் நினைத்தபடி சுற்றித் திரியலாம்."

"காற்று இப்போது நம் பக்கம் அடிக்கிறது. சுற்றுலா போய் வந்த பிறகு மாணவர்கள் நம்மைப்பற்றி இன்னும் நன்றாகப் புரிந்து கொள்வார்கள்."

அவர்கள் நம்பிக்கையோடு பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தார்கள்.

பள்ளி வாயிலுக்குள் ஒரு கார் அமைதியாக வந்து நின்றது.

பல்பீர்சிங்கும் தியாகராஜனும் வந்தார்கள். தமிழன்பன் அவர்களை வரவேற்றார்.

அவர்களுக்குப் பின்னால் நான்கைந்து பழக் கூடைகள், பிஸ்கட் டின்கள்! ஊழியர்கள் கொண்டுவந்து தலைமை ஆசிரியரின் அறையில் வைத்தார்கள். தமிழன்பன் வியப்போடு பார்த்தார்.

"இவை எதற்கு? நாங்கள் கேட்கவில்லையே..."

"நீங்கள் சுற்றுலா செல்வதாகக் கூறி விட்டீர்கள். அந்தச் செய்தி போதுமே! இவற்றைச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும் எல்லோருக்கும் கொடுங்கள். சுற்றுலா தொடர்பாக வேறு உதவிகள் தேவைப்பட்டாலும் கூறுங்கள். காத்திருக்கிறோம்."

அவர்களுடைய சொற்கள் அவருடைய உள்ளத்தில் தேன் வார்த்தன.

குறை சொல்பவர்களும் கோள் சொல்பவர்களும்பெருகிவரும்காலத்தில் இவர்கள் நல்ல சொற்களை — நம்பிக்கை ஊட்டும் சொற்களைச் சொல்கிறார்கள். உருப்படியான செயல்களை — உன்னதமான செயல்களைச் செய்கிறார்கள்! இவர்களுடைய நல்ல உள்ளம் வாழ்க!

வாழ்த்தியது அவருடைய நெஞ்சம்.

சுற்றுலாவுக்கான சொகுசுப் பேருந்து வந்து நின்றது.

தமிழன்பன் அவர்களை அழைத்துச் சென்று காட்டினார்.

புதிய பேருந்து. இருக்கை வசதிகள் அழகாகவும் செம்மையாகவும் இருந்தன. இனிய — மெல்லிய இசை கேட்க ஒலிப்பெட்டிகள்! அழகுக்கு அழகூட்டும் வண்ண விளக்குகள்!

"பேருந்து மிக நன்றாக உள்ளது. முதல் உதவிப் பெட்டியைத் திறக்கச் சொல்லுங்கள்."

பல்பீர் வேண்டுகோள் விடுத்தார். "பேருந்து நிறுவனத்திலிருந்து புறப்படும் போதே எங்கள் ஆசிரியரிடம் சொல்லி இதைச் சோதிக்கச் சொன்னேன். உரிய மருந்துப் பொருள்கள் இல்லை. வண்டி புறப்படும் முன் ஏற்பாடு செய்து விடுவதாக உறுதியளித்திருக்கிறார்கள்."

தமிழன்பனின் கவனம் அவருக்கு நிறைவளித்தது. தியாகராஜன், "நல்ல

முதலுதவிப் பெட்டி ஒன்றுக்கு நாங்களே ஏற்பாடு செய்து விடுகிறோம். நீங்கள் அனுமதி அளித்தால் மருத்துவர் ஒருவரையும் உங்களுக்கு உதவியாக அனுப்பி வைக்கிறோம்'' என்று அக்கறையோடு கூறினார்.

''சுற்றுலா இரண்டு தினங்கள். எனினும் மருத்துவர் வருவது நல்லது தான்!''

தமிழன்பன் அவருடைய உதவியை ஏற்றுக் கொண்டார்.

பேருந்து புறப்படுவதற்குத் தயாராக இருந்தது. பூவைச் சுற்றி வரும் வண்டுகளாக மாணவர்கள்!

மணிவாசகம், ஒவ்வொருவராக உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஓட்டுநருக்குப் பின்புறமாக இருந்த முதல் வரிசையில் வேலப்பனும் ஆசைத்தம்பியும் வந்து அமர்ந்து கொண்டார்கள்.

ஆசிரியர்கள், ஊழியர், மருந்துவர் எல்லோரும் வந்து விட்டார்கள்.

தமிழன்பன் கேட்டார்: ''மணிவாசகம், யாராவது வர வேண்டியிருக்கிறதா?''

''அருள்மதியும் அவள் அழைத்து வருவதாக இருந்த பெண்ணும் இன்னும் வரவில்லை.''

அதைக் கேட்டு ஆசைத்தம்பி அமைதியாக இருந்தான். 'அவள் விழுப்புரம் திருமணத்தில் இருப்பாள்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அடுத்த நிமிடம். ''அதோ வந்து விட்டார்கள்!'' அரவிந்தன் மகிழ்ச்சியோடு குரல் கொடுத்தான்.

ஆசைத்தம்பியும் வேலப்பனும் திரும்பிப் பார்த்தார்கள். அருள்மதி! அவளோடு தமிழ்ந்செல்வி! அது வேலப்பன் சற்றும் எதிர்ப்பார்க்காத நிகழ்ச்சி!

இரகசியமாகக் கேட்டான்: ''ஆசைத்தம்பி, என்ன இது திடீர்த் திருப்பம்?''

''ஆமாம் வேலப்பா, எனக்கே மயக்கமாக இருக்கிறது!''

அதை அவனுடைய முகமே காட்டியது. மங்கள இசையை எழுப்பிய வாறு பேருந்து புறப்பட்டது.

(தொடரும்)

காரோட்டி ஐன்ஸ்டீன்



ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர் காலத்திலேயே மிகவும் பிரபலமாக இருந்தார். எங்கு கூட்டம் நடந்தாலும் இவரை அழைத்து இவரது தியரி பற்றிப் பேசும்படி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அழைப்பைத் தட்டவும் முடியாமல் பரிசோதனைக் கூடத்தில் ஆராய்ச்சி செய்ய நேரமும் இல்லாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்.

ஐன்ஸ்டீன் எல்லாக் கூட்டங்களுக்கும் தம் காரிலேயே போனார். அதனால் அவர் காரோட்டியும் எல்லாக் கூட்டங்களுக்கும் வரும்படி ஆயிற்று. காரோட்டிக்கு எழுதப், படிக்கத் தெரியாது அவர் பேசுவதைக் கேட்டுக் கேட்டு டிரைவருக்கு அது மனப்பாடமாகி விட்டது.

இதை அறிந்த ஐன்ஸ்டீன் தன் பெயரைச் சொல்லிக் கொண்டு தன் கார் டிரைவர் வெளிக் கூட்டங்களில் சமாளிக்க முடியுமா? என்று சோதித்துப் பார்க்க விரும்பினார்.

ஒருமுறை, தன்னைப் போல் காரோட்டியை டிரெஸ் செய்து கொள்ள வைத்து இவர் காரோட்டியாக மாறினார்.

கூட்டம் ஆரம்பமானது. தானே ஐன்ஸ்டீன் என்று சொல்லிக் கொண்டு காரோட்டி பேசத் தொடங்கினான். ஐன்ஸ்டீன் மாதிரியே ஒரு வார்த்தை விடாமல் பேசினான்.

என்றுமே ஐன்ஸ்டீன் பேசி முடித்து விட்டு, 'சந்தேகம் இருந்தால் கேட்கலாம்,' என்று சொல்வார். அதே மாதிரி இவனும் கடைசியாய்க் கூறி விட்டான். ஒருவர் எழுந்து ஒரு சிக்கலான சந்தேகத்தைக் கேட்டு விட்டார்.

ஒதுங்கியிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஐன்ஸ்டீனுக்கு வியர்த்து விட்டது. தன் மானம் மரியாதையெல்லாம் கப்பலேறப் போகிறது என்று பதறினார்.

காரோட்டி படு அலட்சியத்தோடு, ''ஃபூ, இவ்வளவுதானா? என் காரோட்டி கூட இதற்குப் பதில் சொல்வானே!'' என்று போட்டானே ஒரு போடு. இதைக் கேட்டவுடன்தான் ஐன்ஸ்டீனுக்கு மூச்சே வந்தது. பதில் சொல்ல எழுந்து சென்றார்.

— வீர. அண்ணாமலை, ராமலிங்க ஜோதி நகர்.




கேளுங்கள் சொல்லப்படும்!

சின்ன அண்ணன் —

* எஸ். சரவணன், மேல் மலையனூர்.

கே: எல்லாச் செடி கொடிகளும் கோடையில் காயும் போது, வேப்பமரம், இலுப்பை மரம் மட்டும் துளிர் விடுகிறதே, ஏன்?




ப: அதுதான் இயற்கையின் மகத்துவம். மனித ராசிகளுக்குத் தேவையான அறு சுவைகளில் ஒன்றாகிய கசப்பை வேம்பு, இலுப்பையில் வைத்திருக்கிறது இயற்கை. அவை விருத்தியாக வேண்டாமா? அதற்கு அந்த மரங்களின் விதைகள் இடம் பெயர வேண்டும். அதற்குக் காக்கைகள் வேப்பம் பழத்தைத் தின்று சென்று, வெவ்வேறிடங்களில் எச்சமிட வேண்டும். இல்லையா? வேப்பம் பழத்தைக் காக்கை விரும்பிச் சாப்பிடும் என்பதெல்லாம் கதை. அதற்குத் தேவையான தானிய மணிகள் கிடைக்காத காலத்தில்தான் வேறு வழியில்லாமல் வேப்பம் பழத்தைச் சாப்பிட்டு வைக்கிறது. அப்படியொரு காலம் எப்போது வாய்க்கிறது? கோடையில்தானே? அதனால்தான் வேம்பு, இலுப்பை போன்ற கசப்பு மரங்கள் கோடையில் பூத்துக் காய்த்துப் பழுக்கின்றன. இயற்கையின் தாயன்புதான் எத்தனை உன்னதமானது! கேவலம் எருக்கஞ் செடி — அதன் இன விருத்திக்குக் கூட எப்படியொரு ஏற்பாடு செய்திருக்கிறது. கவனியுங்கள். எருக்கங்காய் வெடித்து, உள்ளிருக்கும் விதைகள் சூரியகாந்திக் குஞ்சு போல் விண்ணில் பறந்து பரவுவதைப் பார்த்திருப்பீர்கள். அது எந்த மாதத்தில்? காற்று அமோகமாய் வீசும் ஆடி மாதத்தில். இயற்கையோ, இறையோ இப்படியெல்லாம் தாயன்பு காட்டும் அந்தப் பெரிய சக்தியை நினைத்து ஒரு நாளைக்கு ஒரு முறையேனும் நன்றி சொல்லுங்கள்.

* நா. ராஜராஜேஸ்வரன், சமயபுரம்.

கே: கோகுலம் இதழ் யாரால், எப்போது, எங்கு தொடங்கப்பட்டது?

ப: 1972—ஆம் ஆண்டில் சென்னையில் கல்கி காரியாலயத்தில்தான் தொடங்கப்பட்டது. கல்கி ஆசிரியர் திரு. சதாசிவம் குழந்தைகளுக்காக ஒரு பத்திரிகை ஆரம்பித்தால் என்ன?' என்று ஒரு நாள் கேட்டார். பிரசுரகர்த்தர், துணையாசிரியர்கள் போன்றோரிடம் அதற்குக் கொண்டாட்டமான வரவேற்பு. சரி, பத்திரிகைக்கு என்ன பெயர் வைப்பது? அலுவலகத்தைச் சேர்ந்த அத்தனை பேரையும் எழுதிக் கொடுக்கும்படி பணித்தார் சதாசிவம். அத்தனை பேரும் தலைக்கு ஐந்து, ஆறு என்று பெயர்கள் எழுதிக் கொடுத்தார்கள். அத்தனையும் பார்த்து விட்டு, 'ஊகும். இது சரிப்



படாது. குழந்தைகள் பத்திரிகைக்குக் குழந்தைகளே பெயர் சூட்டட்டும். கல்கியில் ஓர் அறிவிப்புப் போடுங்கள்', என்று கட்டளை விட்டார்.

அதன்படியே அடுத்து வந்த கல்கியில்

ஓர் அறிவிப்பு வெளிவந்தது. அடேங்கப்பா, கல்கி நிறுவனத்திலிருந்து ஒரு குழந்தைப் பத்திரிகை வரப் போகிறது என்றதும் அதற்கு இத்தனை வரவேற்பா? வந்த கடிதங்கள் மலை போல் குவிந்து விட்டன. அப்புறம்? இத்தனை பெயர்களுக்குள் ஏற்ற ஒரு பெயர் எங்கே ஒளிந்திருக்கிறது? உதவியாசிரியர்களுக்குப் பிடித்தது தலைவலி. அந்த மலையைக் கரைத்து, ஆளுக்குப் பத்து ரத்தினங்களைத் தேர்ந்தெடுத்துத் தர வேண்டும் என்று கட்டளை பிறந்தது. கிட்டத்தட்ட ஒரு வார உழைப்புக்குப் பிறகு பொறுக்காகச் சில தலைப்புக்களை எடுத்துக் கொடுத்தார்கள். அத்தனையும் பரிசீலித்து விட்டு ஆசிரியர் சொன்னார்: "நீங்கள் சரியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. மறு பரிசீலனை தேவை."

ஆசிரியருக்கு ஏற்ற உதவிகள். அசரவில்லை. மறுபடியும் துருவினார்கள். ஆசிரியர் முகம் மலர்ந்தது. இந்த முறை வந்த கடிதங்களைப் பார்த்தபோது! கண்ணன் தன் பிள்ளைப் பிராயத்தை ஒத்தவர்களுடன் கூடி மகிழ்ந்து குலாவிய இடம் அல்லவா? கோகுலம் பிறந்த கதை இது தான். அந்தப் பெருங் குவியலில் இந்தத் தலைப்பு எழுதியவர்கள் மொத்தம் பதின்மூன்று பேர். அத்தனை பேருக்கும் ஆளுக்கொரு பொற்காசு பரிசு கொடுத்துப் பாராட்டியது கல்கி!

ஆரம்ப கோகுலத்தின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று வழிநடத்திச் சென்றவர் அன்றைய கல்கி ஆசிரியர் திரு. சதாசிவம் அவர்களே தான்.

* என். தீக்கதிர், குமரமங்கலம்.

கே: வெங்காயத்தை உரிக்கும் பொழுது கண்களிலிருந்து ஏன் கண்ணீர் வருகிறது?



ப: வெங்காயத்தில்தான் ஸ்பார்மிக் ஆசிட் என்ற கார அமிலம் இருக்கிறது. இது வெங்காயத்தில் உள்ள புரதம் போன்ற ஜீவ சத்துக்களைக் கெட்டுப் போகாமல் பாதுகாத்து வைக்கிறது. அத்துடன் அந்தக் காரத்துக்கு இப்படிக் கண்ணிலிருந்து நீர் வரவழைக்கும் வீரியமும் உண்டு. இன்னொரு விஷயம்: இதே அடிப்படையில்தான் ஸ்பார்மிக் ஆசிட் கலந்து. கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் தயாரிக்கிறார்கள்.

* மு. திருநாவுக்கரசு, மொரப்பூர்.

கே: ஆகாயவிமானம் மிக உயரமாகப் பறக்கும் போது, சிறு கழுகு அதைத் தாக்கினாலும் அது வெடித்து விடும் என்று என் நண்பன் சொன்னான். இது உண்மையா?

ப: உன் நண்பன் கொஞ்சம் அதிகமாகச் சொல்லியிருக்கிறான். பட்சி தாக்கினால் பறக்கும் விமானம் பழுதடையும் என்ற அளவுக்கு உண்மைதான். இஞ்சின் கோளாறாகலாம். விமானத்தை இறக்குவதில் சிரமம் ஏற்படலாம். அதற்காக ஒரேயடியாய் இஞ்சினே வெடித்து விடும் என்று அநியாயத்துக்கு அளக்கலாமா? அதிலும் குறிப்பாக, பிளேன் புறப்படும் கட்டத்திலும் இறங்கும் கட்டத்திலும் ரொம்ப எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நீ விமான தளம் பக்கம் போயிருக்கிறாயா? அங்கே விமான தளத்தைச் சுற்றித் துப்பாக்கிப் போலீசார் சுற்றிக் கொண்டே இருப்பார்கள். எதற்குத் தெரியுமா? அந்த வட்டாரத்தில் சிறகடித்துக் கொண்டு ஏதாவது பறந்தால் பொலி போடத்தான். பிக்னிக் போகிறோம் பேர்வழி என்று அந்தப் பகுதிகளில் ஒதுங்கும் மக்கள் கட்டுச் சோறு, வேறு தின்பண்டம் எதையாவது பிரித்து வைத்துக் கொண்டு வானத்திலே பறக்கிறவைகளுக்கு வரவேற்புக் கொடுப்பார்கள். அவர்களையும் எச்சரித்துத் துரத்துவதுதான் அந்தத் துப்பாக்கிப் படையினரின் வேலை.

இந்தப் பறவை ஆபத்து மேலைநாடுகளிலும் உண்டு. அவர்கள் பறவைகளின் தாக்குதலிலிருந்து சமாளித்து விமான இயந்திரத்தைக் காப்பாற்றும் விதத்தில் இஞ்சினை மாற்றியமைக்கும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எப்படி? 'சிக்கன் கன்' என்று ஒன்று தயாரித்திருக்கிறார்கள். இதில் உரித்த போந்தா கோழியை வைத்து நூறு, இருநூறு கிலோ மீட்டர் என்று வேகத்தைப் படிப்படியாய் அதிகப்படுத்தி, விமான இஞ்சினுக்குள் சுடுவார்கள். எந்த வேகத்தில் எந்த அளவில் இஞ்சின் பழுதாகிறது என்று கணக்குப் பண்ணி, அதற்குத் தகுந்தாற் போல் இஞ்சினைச் சீரமைத்து, எந்த வேகத்தில் பறவை தாக்கினாலும் பழுதுபடாமல் இருக்கும் வண்ணம் மாற்றியமைத்துக் கொண்டு வருகிறார்களாம்.

மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறோம். கதையோ, கவிதையோ, துணுக்கோ, கடிதமோ எது எழுதினாலும் தயவு செய்து உங்களுடைய முழு முகவரியையும் எழுதுங்கள். அப்போதுதான் பிரசுரமாகும் உங்கள் எழுத்துக்களுக்கான 'மரியாதைகள்' கிடைக்கும். அப்புறம் பணம் வரவில்லை; பத்திரிகை வரவில்லை' என்று பரிதவித்துப் பயனில்லை.

— ஆசிரியர்.



வெற்றிக்கு வழிகாட்டும் விவேகானந்தர்

ஜானகி மணாளன்

சுவாமி விவேகானந்தர் நம் பாரத நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவர். இந்திய நாட்டின் பெருமையை உலகறியச் செய்த உத்தமர். தலை சிறந்த ஆன்மீகத் தலைவர்.

ஒரு சமயம், அமெரிக்காவின் சிகாகோ நகரில் உலக ஆன்மீகத் தலைவர்களின் மாநாடு நடந்தது. அதில் அவர் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டார்.

அமெரிக்காவில் அவர் தங்கியிருந்தபோது, மாலை நேரங்களில் காலார வெளியில் நடந்துவிட்டு வருவார். அப்போது ஒரு நாள் மாலை. அவர் கடற்கரைக்குப் போனார். அவ்விடத்தின் இயற்கையழகில் ஒன்றிப் போனார்.

அச்சமயம் கடலோரம், சற்றுத் தூரத்தில் ஒரு சிறு கூட்டம். எல்லாம் இளைஞர்கள். அவர்கள் கடலலைகளுடன் ஏதோ விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

விவேகானந்தர் அவர்களுக்கு அருகில் போய் நின்றார். அவர்களது விளையாட்டை உற்று நோக்கினார்.

நம் ஊர்களில், இன்றும் கூடத் திருவிழாக் காலங்களில் நாம் காணலாம். சிறுசிறு பலூன்களை ஊதி, நெருக்கமாகக் கட்டி வைத்திருப்பார்கள். சற்றுத் தூரத்திலிருந்து, குறி பார்த்துத் துப்பாக்கியால் பந்தைச் சுட்டு, அதை உடைக்க வேண்டும்.

அதே போன்ற ஒரு விளையாட்டைத்தான் அந்த அமெரிக்க இளைஞர்கள் ஆடிக் கொண்டிருந்தனர்.

ஒரு சிறிய ரப்பர் பந்து. அதைக் கடல் நீரில் தூக்கி எறிந்தனர். அது கடலலைகளில் சிக்கித் தவித்து, ஏறியிறங்கிக் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது, அதைக் குறிபார்த்துத் துப்பாக்கியால் சுட வேண்டும். அதுதான் விளையாட்டு.

ஒவ்வோர் இளைஞனாகத் துப்பாக்கியேந்திக் குறிபார்த்துப் பந்தைச் சுட முயன்றான். நீண்ட நேரம் முயன்றும், ஒருவராலும் பந்தைச் சுட முடியவில்லை.

விவேகானந்தர், அமைதியாகக் கை கட்டி, நெஞ்சுயர்த்தி நின்று,

அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அந்த இளைஞர்களால் இது கூடச் செய்ய முடியவில்லையே என்று வருந்தினார். அப்போது அவர், தன்னை அறியாமல், 'களுக்'கென்று சிரித்து விட்டார்.

சிரிப்பொலியைக் கேட்ட இளைஞர்கள், சுவாமிஜியைத் திரும்பிப் பார்த்தனர். தமது தோல்வியைக் கண்டு, சுவாமிஜி தம்மைப் பரிகசிப்பதாக எண்ணி விட்டனர். உடனே அவர்களிடம் ஆத்திரம்.

ஓர் இளைஞன் சுவாமிஜியிடம் வந்தான். அவன் முகத்தில் கடுகடுப்பு.

"ஓய்.... துறவியாரே! ஏன் சிரிக்கிறீர்? நாங்கள் செய்வது என்ன, சின்னஞ் சிறு குழந்தைகள் ஆடும் விளையாட்டா? இல்லையே! பெரிய பெரிய துப்பாக்கி சுடும் வீரர்களால் கூடச் செய்ய முடியாத விளையாட்டு ஆயிற்றே! எங்களைப் பார்த்து ஏன் சிரித்தீர்?"

சுவாமிஜியிடம் பதில் இல்லை.

'அப்படியா?' என்பதைப் போல் சுவாமிஜி அவர்களை அமைதியுடன் சற்று நேரம் பார்த்தார். பிறகு, பதில் எதும் கூறாமல், சட்டென்று அந்த இளைஞர்களில் ஒருவனிடமிருந்து துப்பாக்கியைக் கையில் வாங்கிக் கொண்டார்.

பிறகு, 'ம்... பந்தைக் கடல் நீரில் வீசுங்கள், என்பது போன்று கையால் ஜாடை காட்டினார்.

உடனே இளைஞர்களிடம் கேலிக் கொக்கரிப்பு. 'இந்தத் துறவியாவது.. குறிபார்த்துச் சுடுவதாவது' என்று ஏளனமாகச் சிரித்தனர்.

அதற்குள் ஒருவன், "உம்மால் எப்படி முடியும் பார்க்கிறோம்..." என்றான் வெளிப்படையாகவே.

'ம்... ஆகட்டும்' என்பது போல் சுவாமிஜி கையசைத்தார்.

ஓர் இளைஞன் பந்தைக் கடலில் வீசினான். அது கரையை நோக்கி அசைந்தாடி வந்தது. சுவாமிஜி துப்பாக்கியைச் சட்டென்று குறி வைத்துப் பந்தைச் சுட்டார். சிரமப் படவேயில்லை. குறி தவறவில்லை. பந்து சுடப்பட்டு விட்டது.

இளைஞர்கள் திகைத்துப் போயினர். 'நம்மால் பல தடவைகள் முயன்று பார்த்தும் முடியாத செயலை, 'இந்தக் காவியுடைச் சாமியார், குறி தவறாமல் ஒரே தடவையில் சுட்டு விட்டாரே!' என்று அதிசயப்பட்டனர்.

சுவாமிஜி அத்துடன் நிற்கவில்லை. 'ம்... மீண்டும் எறியுங்கள்' என்று ஜாடை காட்டினார். அடுத்த பந்து எறியப்பட்டது. ஒரே தடவை தான். பந்து படார்! பிறகு அடுத்த பந்து... அடுத்த பந்து... இப்படியாக ஏழு பந்துகள்! ஒரு தடவை கூடக் குறி தப்பவில்லை. சுட்டுத் தள்ளி



விட்டார் சுவாமிஜி.

இளைஞர்கள் சுவாமிஜி சாதாரணக் காவியுடைச் சாமியார் இல்லை என்பதைப் புரிந்து கொண்டனர். அவரது பெருமைகளை அவர்கள் அறிந்து கொண்டு விட்டனர். சுவாமிஜியைக் காவியுடைத் துறவி என்று அலட்சியப்படுத்தி விட்டோமே என்று மனம் வருந்தினர். அவர்கள் மனத்தில் சுவாமிஜியிடம் மதிப்பும் மரியாதையும் உண்டாயின.

''ஐயா, தாங்கள் யார்? பார்த்தால் மிகப் பெரிய துப்பாக்கிச் சுடும் வீரர் போல் இருக்கிறதே...'' என்று அதிசயித்துக் கேட்டனர்.



சுவாமிகள், ''நானா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் என் வாழ்க்கையிலேயே துப்பாக்கியை முதன் முதலாக இப்போதுதான் தம்பிகளா தொட்டிருக்கிறேன்,'' என்றார்.

''அப்படியா? ஆச்சரியமாக இருக்கிறதே...!'' என்றனர்.

உடனே சுவாமிஜி, ''தம்பிகளே! இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? துப்பாக்கியைக் கையில் ஏந்தியதும், என் மனத்தின் கவன சக்தி முழுவதையும் ஒன்று குவித்து, அந்தப் பந்தையே குறி வைத்து நோக்கிச் சுட்டேன்; வெற்றி பெற்றேன்,'' என்றார்.

'மனத்தின் சக்தி அவ்வளவா?' என்று வியந்தனர் அந்த அமெரிக்க இளைஞர்கள்.

ஆம். மனத்தை ஒரு நிலைப்படுத்தி, முழு மன ஈடுபாட்டுடன் எந்தச் செயலைச் செய்தாலும் அச் செயல் நமக்கு வெற்றியைத் தந்து விடும்.

மகாபாரதத்திலும் கூட, இத்தகைய ஒரு நிகழ்ச்சி உண்டு. டி.வி.யில் பார்த்திருப்பீர்களே!

துரோணாச்சாரியார் பஞ்ச பாண்டவர்களுக்கு வில் வித்தை பயிற்றுவிக்கிறார். அப்போது தூரத்தில் ஒரு மரத்தில் உள்ள கிளியைக் குறி வைத்து அம்பெய்து அதை வீழ்த்த வேண்டும் என்று ஆணையிட்டு, ஒவ்வொருவராக வந்து குறி பார்க்கச் சொல்கிறார். 'என்ன தெரிகிறது?' என்று கேட்கிறார்.


எல்லாரும், மரம் தெரிகிறது; கிளை தெரிகிறது; இலை தெரிகிறது; கிளி தெரிகிறது என்கிறார்கள். கடைசியாக அர்ச்சுனன் முறை. அவன், ''ஒன்றும் தெரியவில்லை. கிளியின் தலை மட்டுமே தெரிகிறது,'' என்றான்.

உடனே, ''அம்பெய்து அடி'' என்கிறார். அம்பு தைத்துக் கிளி கீழே விழுகிறது.


அது போலத்தான் நீங்களும், எந்தச் செயலைச் செய்தாலும், மனத்தை ஒரு நிலைப்படுத்தி, முழு கவனத்தையும் அதில் ஈடுபடுத்தி அச் செயலைச் செய்தால் வெற்றி நிச்சயம்!

சித்திரப் புதிர்! 38

ஆழி———



1 கண்டு பிடிக்கப்பட்ட போது இந்த இயந்திரம் இப்படித்தான் இருந்தது. இது என்ன இயந்திரம் தெரியுமா?



2 இது என்ன? நீங்கள் பார்த்து இருப்பீர்கள். ஆனால், பெரிய அளவில் வரையப் பட்டிருக்கிறது.



3 நாய்களில் இது எந்த இனத்தைச் சேர்ந்தது?



4 இந்த விநாயகருக்கு என்ன பெயர்?



5 இது எந்த மாநில அரசின் சுற்றுலாச் சின்னம்?

அ. பீகார்


ஆ. கர்னாடகா

இ. கேரளா.



6 இந்தக் கையில் மறைந்து இருக்கும் ஆங்கில வார்த்தை என்ன?

● விடை : 15-ம் பக்கம்


ஹாண்டிப்ளாஸ்ட் பாதையை பின்பற்றுங்கள்
தனது காயங்களுக்கு இட, ஹாண்டிபாய்க்குத் தேவை ஸ்பாட், ஸ்ட்ரிப், பேட்ச் ஆகியவை. எது எங்கே இருக்கும் கண்டு பிடியுங்கள்.
பாதையை பின்பற்றி, ஹாண்டிபாய் மீது ஸ்பாட், ஸ்ட்ரிப், பாட்ச் இவைகளை இட்டுக் காட்டுங்கள்.
Handyplast®
medicated strips
புள்ளியுள்ள கோட்டின் வழியே கத்தரியுங்கள்.
HTA 1425



பாரதி கெடுத்தாரா?
காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு கனிவு தரும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு!
என்று பழக்கப்படுத்திக்கொள்ளு
பாப்பா!
கொஞ்சம் இருங்க மிஸ்!
நான் விளையாடி விட்டு
வந்து விடுகிறேன். அப்புறம்
டியூஷன் எடுக்கலாம்!

பிருந்தாவனம்



யானையை நிறுத்துப்பார்!

- யானைக்கு வெய்யில் பிடிப்பதில்லை.
- யானைக்கு மோப்ப சக்தி மிக அதிகம்.
- யானை நின்று கொண்டே அல்லது சாய்ந்தபடி குறட்டை விட்டுத் தூங்கும்.
- 2 முதல் 2½ வருடத்துக்கொரு முறை குட்டி போடும்.
- யானையின் எடை 6½ டன் வரை இருக்கும்.
- எடை அதிகமென்றாலும், யானை மணிக்கு 4 மைல் வேகத்தில் நடக்கும்; 20 மைல் வேகத்தில் ஓடும்.



- பொதுவாக ஆண் யானைக்கே மதம் பிடிக்கும்.
- யானையின் சராசரி வயது 100 முதல் 120.
- மற்றப் பாலூட்டிகள் போலன்றி, யானைக் குட்டிக்கு அதன் தாய் மட்டுமல்லாது எல்லா யானைகளும் பால் கொடுக்கும்.
- அலி என்ற மக்னா யானைகளுக்குப் பிறக்கும் ஆண் யானைக்கும் தந்தம் இருப்பதில்லை.

— கிருஷ்ணப்ரியா, தஞ்சை.



கிழமை வரிசைப்படி

அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சிகளின் அதிசயத் தொகுப்பு இது:

லிங்கன் பிறந்தது ஒரு ஞாயிற்றுக் கிழமையில்; அலுவலகத்தில் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்ட நாள் திங்கட் கிழமை. ஜனாதிபதியானது செவ்வாய்க் கிழமை. செனட் பாரில் நுழைந்தது புதன் கிழமை. புகழ் பெற்ற 'கெட்டிஸ்பெர்க்' சொற்பொழிவை நிகழ்த்தியது வியாழக் கிழமையன்று! இறுதியில் ஒரு வெள்ளிக் கிழமையன்று சுடப்பட்டு, சனிக் கிழமையன்று தன் இன்னுயிரை நீத்தார்.

— பி. கோகுல கிருஷ்ணன் (8,567).



கல்விக்கு காலமில்லை

பிரிட்டிஷ் தளபதி ஒருவர் போர் முனையில் பிரெஞ்சு கற்றுக் கொண்டார். "இப்போது பிரெஞ்சுக் கற்றுக் கொள்ள என்ன அவசரம்? என்று அவர் நண்பர் கேட்ட

போது. 'நாளை இறந்து விடலாம் அல்லவா?' என்றாராம்.

எப்போதும், கல்வி மற்றும் விஷயங்களைக் கற்றுக் கொள்ளக் கால தாமதம் செய்வதோ, பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளிப் போடுவதோ கூடாது. காலம் பொன்னானது. கற்றுக் கொள்ள வேண்டியவைகளை விரைவில் கற்பது நல்லது.

— எஸ். மாதவன் (204).



கலைமகளுக்கு ஆலயம் ஒன்றே!

ஊருக்கு ஊர் பிள்ளையார் கோவில் இருப்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் கலைமகள் சரஸ்வதிக்கென்று தனிப்பட்ட ஆலயம் எங்கு உள்ளது தெரியுமா?

தஞ்சை மாவட்டத்தில் நன்னிலத்துக்கு அருகில் கூத்தனூர் என்னும் கிராமத்தில் இக் கோவில் அமைந்துள்ளது. இந்த ஊரைத் தவிர நமது மாநிலத்தில் வேறு எந்த ஊரிலும் சரஸ்வதிக்கு என்று தனிப்பட்ட ஆலயம் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

— க. கோகுல்கிருஷ்ணன், விசலூர்.



ஊரும் பேரும்

1. 'சாம்ராஜ்ய நகரம்' என அழைக்கப்படும் நகரம் — நியூயார்க்

2. 'உலகின் சக்கரைக் கிண்ணம்' என்றால் — கியூபா.

3. உலகின் மிகப் புராதன நகரம் — டமாஸ்.

4. 'உலகின் ரொட்டிக் கடை' என்று அழைக்கப்படும் ஊர் — பிரெய்ரி.

5. 'ஐரோப்பாவின் நோயாளி' என்று வர்ணிக்கப்படும் நகரம் — துருக்கி.

6. ஏழு குன்றுகளின் நகரம் — ரோம்.

— கே. ஆர். சங்கர் (22,886).

கடலுக்குள் எதிரொலி



'எக்கோ சவுண்டிங்' — கடலின் ஆழத்தைக் கண்டுபிடிக்கும் கருவிகளுள் ஒன்று இது. இதன் மூலம் கடலுக்குள் ஒலியினை அனுப்பி, நீரினுள் ஒலி செல்லும் வேகத்தையும், ஒலி எதிரொலித்துத் திரும்பும் நேரத்தையும் கணக்கிட்டு, கடலின் ஆழத்தைக் கண்டுபிடிக்கிறார்கள்.

— சா. ஏ. குமார், வந்தவாசி.

45 ஒரு கணக்கு விந்தை



எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவன் எண் விளையாட்டில் மிகவும் கெட்டிக்காரன். ஒருநாள் அவன் 45 என்னும் எண்ணை நான்காகப் பிரித்தான். அதாவது அந்த எண்களை ஒன்றன் கீழ் ஒன்றாக எழுதிக் கூட்டினால் 45 மொத்தம் வரும். அவற்றை வைத்துக் கொண்டு அவன் ஒரு வேடிக்கை செய்தான்.

முதல் எண்ணுடன் இரண்டு கூட்டினான்.

இரண்டாம் எண்ணிலிருந்து இரண்டு கழித்தான்.

மூன்றாம் எண்ணை இரண்டால் பெருக்கினான்.

நான்காம் எண்ணை இரண்டால் வகுத்தான்.

எல்லாவற்றுக்கும் ஒரே விடைதான் வந்தது. கூட்டினபோது, கழித்தபோது,

பெருக்கினபோது, வகுத்தபோது எப்போதும் ஒரே விடைதான் கிடைத்தது.

அந்த நான்கு எண்கள் யாவை?

விடை:

அந்த நான்கு எண்கள்: 8+12+5+20 = 45.

8+2 = 10.
12−2 = 10.
5×2 = 10.
20÷2 = 10

— எம். அன்புச்செல்வி (18,040).



ஜப்பான் நாட்டில் முதன் முதலில் பாண்ட்லூ என்ற சர்க்கஸ் கோமாளிதான் பாண்ட் என்று அழைக்கப்படும் முழுக்கால் சட்டையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அவரைக் கௌரவிக்கும் வகையில்தான் அதற்குப் பாண்ட் **(Pant)** என்று பெயர்.

— மு. இராஜராஜேஸ்வரி (22,549).



டாக்டர் ஹெர்மன்போர் கெவ் புகழ் பெற்ற டச்சு நாட்டு மருத்துவர். 1738 – இல் காலமானார். அவர் இறக்கும்போது விட்டுச் சென்ற பொருட்களில் 100 பக்கங்கள் கொண்ட புத்தகமும் ஒன்று! புத்தகத்தின் அட்டையில் 'மருத்துவக் கலையின் மிகப் பெரிய ரகசியம்' என்று எழுதப்பட்டிருந்தது. புத்தகத்தின் உள்ளே இருப்பதைப் பார்க்க முடியாத வகையில் அப் புத்தகம் 'சீல்' வைக்கப்பட்டிருந்தது.

அப் புத்தகத்தைப் பற்றி எங்கும் ஒரே பரபரப்பு! உள்ளே என்ன எழுதப்பட்டிருக்கும்? புத்தகம் பகிரங்கமாக ஏலம் விடப்பட்டது. ஒரு பணக்காரர் அதை 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கிக் கொண்டார்.

சீலை அகற்றி விட்டு மிக ஆவலுடன் புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தார். அதில் 99 பக்கங்கள் காலியாக இருந்தன. கடைசி ஒரு பக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது:

'உங்கள் தலையைக் குளிர்ச்சியாகவும், பாதத்தை வெப்பமாகவும் வைத்துக் கொள்ளுங்கள்! இதனால் மிகச் சிறந்த மருத்துவரும் கூட தமக்கு வருமானம் இல்லாததால் ஏழையாகி விடுவார்!'

— சி. வ. வசந்த் (13,229)



ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ரன்தம்பர் கோட்டையில் உள்ள பிள்ளையாருக்கு அவரின் பக்தர்களிடமிருந்து தினமும் நூற்றுக்கணக்கான அழைப்பிதழ்களும், ஆரம்ப விழாவிற்கான அழைப்பிதழ்களும் ஏராளமாய் வந்து சேருகின்றன. இப் பகுதியில் உள்ள மக்கள் எந்த மங்களகரமான காரியங்களை ஆரம்பித்தாலும், முதன் முதலாக இந்த விநாயகருக்குக் கடித மூலம் தகவல் அனுப்பி விடுகின்றனர். இந்தக் கோட்டை விநாயகருக்கு வரும் கடிதங்களை பெற்றுக் கொள்வதற்காகவும் பட்டுவாடா செய்யவுமே ஒரு தபால் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

— கோ. புகழேந்தி (21,712).



* இங்கிலாந்தில் ஜேம்ஸ் எட்வாட்ஸ் என்ற புத்தகப் பித்தர் இருந்தார். அவர் ஏராளமான புத்தகங்களைச் சேர்த்து வைத்தார். தான் இறந்தால் தம் புத்தக அலமாரிச் சட்டங்களைக் கொண்டே தமது சவப்


பெட்டியைச் செய்ய வேண்டுமென்று உயிலே எழுதி வைத்தார்.

* ஷெல்லி தன் மகனிடம் அளவு கடந்த பாசம் வைத்திருந்தார். அவன் நோய் வாய்ப்பட்டிருந்த போது ஷெல்லி அவன் அருகிலேயே ஓய்வு கூட எடுக்காமல் அறுபது மணி நேரம் கண் விழித்திருந்தும் பயன் இல்லை.

* அலெக்சாந்தரின் தளபதியாக இருந்த ஹபீஸ்டி டடியோஸ் என்பவன் நோயில் இறந்த பொழுது நண்பனின் உடல் மீது விழுந்து புரண்டு புலம்பி அழுதார். பட்டினி கிடந்து தலையை மொட்டை அடித்துக் கொண்டார்.

* சிவாஜி போர் தொடுக்கும் பொழுது எப்பொழுதாவது திருக்குரான் கையில் கிடைத்தால் அதைப் பயபக்தியுடன் பத்திரமாக வைத்திருந்து, தனக்குக் கீழ் சேவை செய்யும் முஸ்லீம் ஊழியரிடம் கொடுத்து விடுவார்.


— ந. க. பரமசிவம், சென்னை – 7.



முதலில் துணை அக்கவுண்டண்ட் ஜெனரல், இரண்டாவதாக அஞ்சல் துறைக் கணக்கு அதிகாரி, மூன்றாவதாக தந்தித் துறைக் கணக்குப் பிரிவில் தலைமைத் துணை அதிகாரி.

ஆகிய பெரும் பதவிகளை வகித்து விட்டு, விஞ்ஞான ஆராய்ச்சியின் மீதிருந்த மோகத்தினால் விஞ்ஞானப் பேராசிரியர் ஆகி, நோபல் பரிசு பெற்றவர் சர். சி. வி. ராமன்தான்...!

— கே. சீனிவாசன், வந்தவாசி.



* உன்னுடைய சந்ததிகளுக்கு இரண்டு சரியான பாதையைக் கற்றுக் கொடு: ஒன்று விவசாயம்; மற்றொன்று இலக்கியம்.
— சீனா.

* வார்த்தைகள் ஈட்டி அல்ல — ஆனால் அது இதயத்தைத் துளைக்க முடியும்.
— பிரான்ஸ்.

* இரைதான் தூண்டிலை மறைக்கிறது. இதை மீன்கள் மட்டுமல்ல; மனிதர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் — பர்மா.

* உண்மையைச் சொல்லப் பத்து வாய் தேவை; பொய் சொல்ல ஒன்று போதும்.
— ஜெர்மனி.

* துரு இரும்பைத்தான் தின்கிறது. பொறாமை இதயத்தையே தின்கிறது.
— இத்தாலி.

தொகுப்பு: எஸ். ஹலிமா சயிதியா (21,300), திருச்சி – 1.



'தி அட்லாண்டிக்' என்ற ஒரு வெளி நாட்டுப் பத்திரிகையின் சிறப்பு மலருக்காக அதன் நிருபர் அன்றைய பிரதமராக இருந்த நேருஜியை அணுகி, "தாங்கள் ஏதேனும் ஒரு கட்டுரை எழுதித் தர முடியுமா?" என்று கேட்டார்.

உடனே நேருஜி, "என்னை ஜெயிலுக்குப் போகச் சொல்கிறீரா?" என்றார்.

"அய்யய்யோ... அப்படியெல்லாம் இல்லை. எதற்காக இப்படிக் கூறுகிறீர்கள்?" எனப் பதற்றத்தோடு கேட்டார் நிருபர்.

"எனக்கு எழுதுவதற்கு அவகாசம் கிடைப்பதெல்லாம் ஒரே ஒரு சமயத்தில் தான். அது நான் ஜெயிலில் இருக்கிற சமயம்," என்று சிரித்துக் கொண்டே சொன்னார் நேரு.

— கே. சீனிவாசன், வந்தவாசி.

மேலட்டை வண்ணப்படம்:
ராஜா பொன்சிங்.

அங்கே உன் ஜம்பம் சாயாது



முன்னொரு காலத்தில் உறைபனிக் கிழவரும், அவருடைய இளம் மகனான உறைபனி இளைஞனும் வாழ்ந்து வந்தனர். உறைபனி இளைஞன் ஆணவம் அகம்பாவம் மிக்கவன். உலகில் தனக்கு நிகர் வேறு யாருமே இல்லை என்பது போல் பேசுவான்.

ஒருநாள் உறைபனி இளைஞன் தன்னுள் கூறிக் கொண்டான். 'என் தந்தை தள்ளாத கிழவராகி விட்டார். அவரால் சரிவர வேலை செய்ய முடியவில்லை. ஆனால் நான் இளைஞன், வலிமை மிக்கவன்! அவரைக் காட்டிலும் சடுதியில் நான் எவரையும் கடுங் குளிரால் விறைக்க வைத்து விடுவேன். யாராய் இருந்தாலும் வீழ்த்தி விடும் பலம் எனக்கு உண்டு.

குளிரால் யாரை விறைக்க வைக்கலாம் எனத் தேடிக் கொண்டு சாலை ஓரமாக வந்த போது, கோச் வண்டியில் ஒரு பிரபு செல்வதைப் பார்த்தான். அந்தப் பிரபு ஊதிப் பருத்தவராய், கதகதப்பான மென்முடிக் கோட்டுப் போட்டிருந்தார்.

அந்தப் பிரபுவை உறைபனி இளைஞன் பார்த்துச் சிரித்துக் கொண்டே, 'ஹ ஹா! மென்முடியும், கம்பளமும் உனக்கு உதவப் போவதில்லை. நான் உம்மைக் குளிரால் நடுங்க வைத்து உறைய வைத்து விடுவேன். என்ன வேண்டுமானா

லித்துவேனிய நாட்டுக் கதை
தமிழில்: அ. மாதவன்

லும் செய்து பாரும்! உமக்கு மென் முடியோ, கோட்டோ பாதுகாப்புத் தரப் போவதில்லை!' என்று மனத்திற்குள் கூறிக் கொண்டான்.

உடனே உறைபனி இளைஞன் அந்தப் பிரபுவிடம் பறந்து சென்று தொல்லை கொடுத்தான். கம்பளியில் ஊர்ந்தும், காலரில் புகுந்தும் மூக்கை ஜில்லிடச் செய்தும் அவரைப் பாடாய்ப்படுத்தினான்.

குளிரின் தொல்லை தாங்க முடியாமல் பிரபு, குதிரையை விரட்டி ஓட்டுமாறு வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டார்.

''குளிர் தாங்க முடியவில்லையே! உறைந்து விடுவேன் போலிருக்கிறது!'' என்று கூச்சலிட்டார்.

உறைபனி இளைஞன் அவரைத் திண்டாட வைத்தான். அவர் பாதங்களை நடு நடுங்க வைத்து, மூச்சு விட முடியாமல் அவரைத் திணறடித்தான்.

குளிர் பொறுக்க மாட்டாமல் பிரபு வண்டிக்காரனை நோக்கி, ''வேகமாகச் செல்,'' என ஆணையிட்டுக் கொண்டே இருந்தார்.

ஆனால் சற்று நேரத்துக்கெல்லாம் அவருடைய கத்தல் ஓய்ந்து விட்டது. அவருக்கு வாயடைத்துப் போய் விட்டது.

அதைக் கண்டதும் உற்சாகத்துடன் உறைபனி இளைஞன் தன் தந்தையிடம், ''அப்பா, என்னைப் பார். எவ்வளவுபலசாலியாகஇருக்கிறேன், பார். இனி உன்னால் என்னுடன் போட்டி போட முடியாது. எவ்வளவு பெரிய பணக்காரரின் கோட்டுக்குள்ளேயே புகுந்து திக்குமுக்காடச் செய்தேன், தெரியுமா? ஆனால் நீ இது போன்ற காரியம் செய்திருக்க மாட்டாய்,'' என மார் தட்டிக் கொண்டான்.

அப்பா மெதுவாகச் சிரித்து விட்டுச் சொன்னார், ''மகனே, இந்த வீண் பெருமையெல்லாம் வேண்டாம். நீ செய்தது பெரிய காரியமில்லை. அதோ பார் அங்கே நைந்து போன சட்டை அணிந்து கொண்டு வண்டி இழுக்கும் குடியானவன், தெரிகிறதா? இப்போது அவன் காட்டுக்கு விறகு வெட்டச் செல்கிறான். அவனிடம் உன் கைவரிசையைக் காட்டி வெற்றி பெற்றாயானால் மெய்யாகவே நீ பலசாலிதான் என்று ஒப்புக் கொள்வேன்,''


''பூ.. இது ஒரு பெரிய காரியமா எனக்கு? நொடிப்பொழுதில் அவனை நடுங்கி விறைக்கச் செய்து காட்டுகிறேன், பார்,'' என்று கொக்கரித்து விட்டு உறைபனி இளைஞன் காற்றில் பறந்து காட்டுக்குச் சென்றான்.

குடியானவன் காட்டுக்குள் கோட

வகுப்புக் கலகல

ஆசிரியர்: ஒருவன் கழுதை ஒன்றை அடித்துத் துன்புறுத்துகிறான். நான் அவனிடமிருந்து கழுதையைக் காப்பாற்றுகிறேன். இந்தச் செயலை என்னவென்று சொல்வீர்கள்?

''சகோதர பாசம் சார்.''





பாடத்துக்கு நடுவே குறுக்கிட்டுப் பேசிக் கொண்டிருந்த மாணவனைப் பார்த்து ஆசிரியர் (கோபமாக): நீ தான் இந்த வகுப்புக்கு வாத்தியாரா?

மாணவன் (அச்சத்துடன்): இல்லை சார்!

ஆசிரியர்: அப்படியென்றால் மடத்தனமாகப் பேசறதை நிறுத்து!



ரியை எடுத்துப் பிர்ச் மரங்களை வெட்டத் தொடங்கியதைக் கண்டான். சிராய்த் தூள் நாற்புறமும் பறக்கும்படி வெட்டிச் சென்றான்!'

உறைபனி இளைஞன் ஓயாமல் தொல்லை கொடுத்து வந்தான். அவனுடைய கைகளிலும் கால்களிலும் தாக்கித் துன்புறுத்தினான். காலருக்குள் புகுந்து கொடுமைப்படுத்தினான்.

உறைபனி இளைஞன் எவ்வளவு கொடுமைப்படுத்தி விறைக்க வைக்க முயன்றானோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேகமாய்க் கோடரி வீசி, மேலும் மேலும் அதிகமாக மரம் வெட்டித் தள்ளிக் கொண்டிருந்தான் குடியானவன்.

முடிவில் அவன் தனது கையுறைகளையும் 'கழற்றித் தூக்கி எறிந்து விட்டான். அந்த அளவுக்குக் கதகதப் படைந்திருந்தான் அவன்.

தொடர்ந்து குடியானவனை இம்சை செய்து பார்த்த உறைபனி இளைஞன், களைப்புற்று ஓய்ந்து போய்ச் சாய்ந்தான்.

'இருக்கட்டும், எப்படியும் உன்னைத் தோற்கடிக்கின்றேன்,' என்று உறுமிக் கொண்டு அவன் கழற்றி எறிந்திருந்த கையுறையில் புகுந்து கொண்டான் உறைபனி இளைஞன்.

விறகை எல்லாம் வெட்டித் தம் வண்டியில் ஏற்றிய குடியானவன், கீழே கிடந்த கையுறைகளை எடுத்துப் போட்டுக் கொள்ள முயன்றான். அவை கெட்டியாய் உறைந்து போய் இருந்தன. அவ்வாறு உறைந்திருந்ததும் குடியானவன் தன் கையில் இருந்த கோடாரியை வைத்துக் கையுறையை மொத்த ஆரம்பித்தான். படார் படார் என அடித்தான். உள்ளே இருந்த உறைபனி இளைஞன் ஓவென அலறினான்.

உறைபனி இளைஞன் முக்கி முனகி நொண்டிக் கொண்டு தன் தந்தையிடம் சென்றான்.

உறைபனிக் கிழவர் தன் மகனின் நிலை கண்டு வாய் விட்டுச் சிரித்தார். ''மகனே, என்ன ஆயிற்று?'' என்று கேட்டார்.

''குடியானவன் என்னைக் கோடரியால் செம்மையாக அடித்து விட்டான்,'' என்றான் இளைஞன்.

உடனே கிழவர், ''மகனே, உனக்கு இது படிப்பினையாய் இருக்கட்டும். வீணில் உண்டு களிக்கும் பிரபுவைக் குளிருட்டி நடுங்க வைப்பது சுலபம். ஆனால் குடியானவனிடம் உன் கை வரிசை பலிக்காது. எந்த நாளும் இதை நீ மறக்கலாகாது!'' என்றார்.

குரல் (டெலிபோனில்): உங்கள் வகுப்பில் படிக்கும் முத்துவுக்கு உடம்பு சரியில்லாததால் அவன் இன்று பள்ளிக்கு வர மாட்டான்.


டீச்சர்: நீங்க யார் பேசறது?

குரல்: என்னுடைய அப்பா பேசுகிறேன், டீச்சர்.



— ஆசிரியர், மாணவர் & பல நாட்டவர் என்னும் பேராசிரியர் எ. சோதி அவர்களின் நூலில் இருந்து தொகுத்தவர்:

ஆர். அபர்ணா (20.07.1).



சார் தபால்!

எங்களை எழுதத் தூண்டினாரே!

* தன் முதல் தலையங்கத்திலேயே இளம் எழுத்தாளர்களாகிய எங்களை ஊக்குவித்து, படைப்புக்கள் எழுதத் தூண்டிய எங்களின் பாசமிகு அண்ணன் தேச பந்து அவர்களுக்கு என் மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வந்தவாசி. சா. இரா. மணி.

* இளந்தளிர்களின் விவாத மேடையில் தொடங்கி, எண்ணற்ற புதுமை மலர்களை முகர்ந்து, முத்தான முதல்வரின் 'என் பிள்ளைப் பருவம்', அருமையான சிறுகதைகள், அற்புதமான கட்டுரை, கவிதைகள், சிந்தனைக்கு விருந்து படைக்கும் சித்திரக் கதைகள் அப்பப்பா... என மூக்கின் மேல் விரலை வைக்கத் தோன்றுகிறது.

புதுக்கோட்டை. சிற்பி. சோமு.

* தேச பந்து சிறுவர்களை மகிழ வைக்கவும், சிரிக்க வைக்கவும், சிந்திக்கவும், சிலிர்க்க வைக்கவும் செய்கிறார். அவருக்கு என் மனமார்ந்த நன்றி. மற்றும் பிருந்தாவன கதையரங்கத்தில் தாடி வளர்த்தார் தடுமாறி நின்றார் படு சூப்பர் சார்!

சென்னை — 88. இரா. மணிகண்டன்.

* தாடி வளர்த்தார் தடுமாறி நின்றார்' என்ற கதை 2 மாதங்களுக்கு முன் பாண்டிச்சேரி வானொலி நிலையத்தார் ஒலிபரப்பிய சிறுவர் நிகழ்ச்சியில் இடம் பெற்ற பீர்பாலினைப் பற்றிய கதையின் சாராம்சமேயாகும். பெயர்தான் மாறியுள்ளதே தவிர, கதை அதேதான்.

பாண்டிச்சேரி. சி. இராஜகோபாலன்.

* புதிய கௌரவ ஆசிரியர் அவர்களின் எட்டுக்கு எட்டு ஆரம்பமே அருமை. அவரின் பணி தொடர வாழ்த்துக்கள். அவரின் நடை அருமையில் கோகுலம் ஒளி வீசப் பாராட்டுக்கள்.

மூச்சூர்பட்டு. மு. பூபாலன்.

* சார்லி சாப்ளினின் கட்டுரை மிக அருமையாக இருந்தது. ஜானகி மணாளனுக்கு என் நன்றி. இனிமேல் கோகுலம் விளையாட்டுக்கு என்று ஒரு பக்கம் ஒதுக்கினால் நன்றாக இருக்கும். ஆசிரியர் இதைக் கவனிப்பாரா?

சென்னை — 88. ஆர். மணிகண்டன்.

* ஈடு செய்ய இயலாத அமரரின் (குழந்தைக் கவிஞர்) இடத்தை பெற்றிருக்கும் தேச பந்துவுக்கு வாழ்த்துக்கள். ஜூன் 89 இதழ் கண்டேன். சித்திரக் கதை, டாக்டர் பக்கம் இன்னும் புதுமைகள் வரவேற்கத்தக்கவை. ஆனால் பெரியவர்களுக்கே உரித்தான பட்டிமன்றம் சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையில்லாத ஒன்று. அட்டையில் பறவைகள், விலங்குகள், இயற்கைக் காட்சிகளை வெளியிட்டால் சிறுவர் சிறுமியர் கத்தரித்து, பிறந்து நாள் வாழ்த்து அனுப்பி இன்னும் பல வகையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பது பலரின் கருத்தும் என் கருத்தும்.

கல்பாக்கம். செ. செல்வன்.

* ஜூன் மாத 'கோகுலம்' இதழ் எப்படி இருக்கும் என்ற ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். "நீக்க வேண்டியதை நீக்கி, சேர்க்க வேண்டியதைச் சேர்த்து" என்று அடக்கத்துடன் கூறியிருக்கிறீர்கள். நீக்க வேண்டிய பகுதிகள் இருந்தால்தானே அப்படிச் செய்ய முடியும்? பட்டிமன்றம் மாணவச் செல்வங்களுக்கு ரொம்பப் பிடிக்குமே! 'சித்திரத் தொடர்' சிறுவர்களுக்கு 'ஐஸ்கிரீம்' சாப்பிடுவது போல ஆயிற்றே. எல்லாமே வேண்டும்தானே! வளர்க தங்கள் பணி!

புதுவை — 7. 'பரிதி' வேங்கடேசன்.

* ஒரே இதழில் இத்தனை பிருந்தாவனக் கதைகளா? கண்டதும் பூரித்துப் போனேன். படித்து முடித்ததும் மிகவும் மகிழ்ந்து போனேன்! தேசபந்து சார், உங்கள் செலக்ஷன் சூப்பர்.

மொரப்பூர். மு. திருநாவுக்கரசு.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: ஓ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka